வ்யா.—அவ.—பதினாலாம்பாட்டில், (சாயால்) காட்டவேணுமென்றார் கீழ்; ஆரை யென்கண்களாலே காண்கிறதென்றகன்றும், திரியட்டும் தம்முடைய அயோக்யதையைச் சொல்லுகிறார். பூதனை கிட்டினவோபாதியிறே நான் கிட்டுகை யென்கிறார்.

(சாயால்கரியானை) நிறத்தால் கரியனாயுள்ளவனை. (உள்ளறியாராய்) †ஆழவநுபவிக்கவறியாராய்; ஸர்வேஶ்வரனென்று உள்ளபடியறியாராயென்றுமாம். (நெஞ்சேயித்யாதி) பூதனைமனிச்சியாய் வஞ்சித்தாளன்றே, பேயாகையாலே வஞ்சித்தாளத்தனையிறே; உன்னைப் பார்த்தால் பூதனை நித்யஸூரிகளோடொக்குமிறே. (தேம்பூண்சுவைத்தித்யாதி) ஆத்மா தேயும்படிக்கீடாக சப்தாதிகளை புஜித்து அதினுடைய விபாகத்தை யறிந்தறிந்து, அநர்த்தத்தைப் §பலிக்கக்கடவதாயிருக்கிற பாம்பின் வாயிலே கை நீட்டுவாரைப்போலே யிருக்கிற நீ பூதனைக்கார்? உனக்கண்ணியளோ? பூதனை. அயோக்யனென்றகலுகிற பக்ஷத்தில் - ஈஶ்வரனுக்கு அவத்யம் பிறக்கைக் கீடாக வணைந்து "உன்னணைவு பொல்லாது" என்னுமிடத்தை யறிந்தறிந்தும் கிட்டுகிறாயன்றோ? வென்றுமாம். கச.

அரு.—பதினாலாம்பாட்டு, (ஆழ அநுபவிக்க) - பிள்ளைத் தனத்தைக் கண்டுபடாமல் வஞ்சித்தாளென்னுதல். *சாஸ்த்ரவஶ்யமான உன்னைப்பார்த்தால், அறிவுகெட்டு ஈஶ்வரனையழித்தாளவள், நீ சாஸ்த்ரவஶ்யமாயிருக்கச் செய்தேயும் விஷயங்களிலே யாத்மாவைமூட்டி நசிப்பிக்கையாலே உனக்கு ஸமளன்றென்றபடி. அன்றியே - "தேம்பூண்" - ஈஶ்வரனுக்கு அவத்யம்

§ பலிப்பிக்க என்றாவது அநர்த்தபதம் ப்ரதமாந்தமாயாவது பாடமிருக்கலாம்.

* இங்கு மற்றொரு பக்ஷத்துக்கும் உபபாதகமான பங்க்தி இருக்கவேண்டும்.

வரும்படி. "சுவைத்து" - அவனையணைந்தென்று ஈஸ்வரபரமாகவுமாம். அப்போது, தீவினையாமென்றறிந்தறிந்து - பொல்லாதென்றறிந்திருக்கச்செய்தேயும், பாம்பின்வாயிலே கைநீட்டுமாபோலே, நாமவனைக்கிட்டுகையவத்யமென்றறிந்திருக்கச்செய்தேயும் கிட்டுகிற உனக்குப் பூதனைஸமளோ? என்றபடி. [நெஞ்சேபோய் என்றுதொடங்கி. நீட்டல்பார்த்தி, அவளுக்கு நீயார்] என்றந்வயம். கச.

பார்த்தோ ரெதிரிதா நெஞ்சே, படுதுயரம்,
பேர்த்தோதப் பீடழிவாம் பேச்சில்லை,—ஆர்த்தோதம்
தம்மேனித் தாள்தடவத் தாங்கிடந்து, தம்முடைய
செம்மேனிக் கண்வளர்வார் சீர். கரு.

அந்.—ஓதம், ஆர்த்து, தம், மேனி, தாள், (ரு) தடவ, தாம், கிடந்து, தம்முடைய, செம், (க0) மேனி, கண்வளர்வார், சீர், படு, துயரம், (கரு) பேர்த்து, ஓத, பீடு, அழிவாம்பேச்சு, இல்லை. (உ0) நெஞ்சே, எதிரிதா, பார்த்து, ஓர். (உச)

அர்.—ஸமுத்ரமானது, கோஷித்துக்கொண்டு, தம்முடைய, திருமேனியையும், திருவடிகளையும், (ரு) ஸ்ப்ருசிக்கும்படி, தாம், சயநித்துத், தம்முடைய, சிவந்த, (க0) நிறத்தையுடைய, திருக்கண்களைமூடிக்கொண்டு நித்ரைசெய்கிறவருடைய, கல்யாணகுணங்களை, அநுபவிக்கத்தக்க, துக்கங்களை, (கரு) விட்டு, அநுஸந்திக்க, (அக்குணங்களுக்குப்) பெருமை, நசிக்குமென்கிறவார்த்தை, இல்லை. (உ0) ஓமநஸ்ஸே! (இதை) முன்னம், விசாரித்து, அநுஸந்தி. (உச) கரு.

வ்யா.—அவ.—பதினைந்தாம் பாட்டில், (பார்த்தோர்) உன்னுடைய பூர்வ வ்ருத்தத்தை நினைத்தா லகலவேணும், அவனுடைய பூர்வ வ்ருத்தத்தை ஸ்மரித்தால் கிட்டலாமென்கிறது.

(பார்த்தித்யாதி) அணுகியெதிரிதாப்பார்த்து ஓர் - முன்னிட்டுப்பார்த்து விசாரி. (ஆர்த்தோதமித்யாதி) கடலானது ஆர்த்துக்கொண்டு தம்முடைய சிவந்த திருவடிகளை வருட அவஸரப்ரதீக்ஷையாய்க்கண்வளருகிறவருடையகுணங்களை, (படுதுயரமித்யாதி) தான் படுகிற துயரத்தைப் பொகட்டு அக்குணங்களை ஓத, அவனுடைய பெருமைக்கு அழிவென்னும் பேச்சில்லை. இத்தை முன்னிட்டறிந்து விசாரி. கரு.

அரு.—பதினைந்தாம்பாட்டு. [ஓதமார்த்துத்தம்மேனியையும் தம்முடையசெம்மேனித்தாளையும் தடவத்தாங்கிடந்துகண்வளருகிறவருடைய சீரை - படுதுயரம்பேர்த்தோதப் பீடழிவாம்பேச்சில்லை, நெஞ்சே எதிரிதாப்பார்த்தோர்] என்றந்வயம். கரு

சீரால் பிறந்து சிறப்பால் வளராது,
பேர்வாம னாகாக்கால் பேராளா,—மார்பாரப்
புல்கி நீ யுண்டுமிழ்ந்த பூமி நீரேற்பரிதே,
சொல்லுநீ யாமறியச் சூழ்ந்து. ௧௬.

அந்.—சீரால், பிறந்து, சிறப்பால், வளராது, பேர், (௫) வாமனனாகாக்கால், நீ, மார்பு, ஆர, புல்கி, (௧௦) உண்டு, உமிழ்ந்த, பூமி, நீர், ஏற்பு, (௧௫) அரிதே, பேராளா, நீ, சூழ்ந்து, யாம், (௨௦) அறிய, சொல்லு. (௨௨)

அர்.—செவ்வையாய்ப், பிறந்து, செவ்வையாய், வளராதே, பேரும், (௫) வாமன (குள்ள) னென்பதையுடையையாகாவிடில், (ராமக்ருஷ்ணாதிகளைப்போல்பிறந்துவளர்ந்து அவ்விததிருநாமத்தையும் தரித்தியாகில்), நீ, மார்பு, நிறையும்படி, (வராஹாவதாரத்தில்) அணைந்து, (௧௦) (ப்ரளயகாலத்தில்) விழுங்கி, (ஸ்ருஷ்டிகாலத்தில்) வெளிப்படுத்தின, பூமி, (இரந்து) தாநஜலத்தை, ஏற்று, (ப்பெறுகைக்குக்), (௧௫) கிடையாதோ? ஜகத்ரக்ஷணத்தில் வ்யாமோஹத்தையுடையவனே! நீ, ஆராய்ந்து, நாங்கள், (௨௦) அறியும்படி, சொல்லாய். (௨௨) ௧௬.

வ்யா.—அவ.—பதினாறும்பாட்டில், (சீரால்பிறந்து) அவஸரப்ரதீக்ஷனாயிருக்கிறவளவேயோ? இத்தைப் பெறுகைக்கர்த்தியாயன்றோ நிற்கிறதென்கிறார்.

(சீரால்பிறந்து) (க)“మహాత్తపసారామ మహాత్చాభికర్మణా-மஹாதாதபஸாராம மஹாதாசாபிகர்மணா” சக்ரவர்த்தி தான் தேடின வர்த்தமும் பண்ணின தபஸ்ஸுமழிய மாறிப் பெற்றாற்போலேயாதல், ஸ்ரீவஸுதேவர் †அநந்தவ்ரத மநுஷ்ட்டித்துப்பெற்றாற்போலேயாதல் பிறந்தாலாகாதோ? (சிறப்பால் வளராது) ஸ்ரீஸுமித்ரையாரும் வஸிஷ்ட்டாதிகளும் பேணி வளர்க்க வளர்ந்தாற்போலேயாதல், அநுகூலர்தேடின வெண்ணெயும் ப்ரதிகூலருடைய உயிரும் மாள வளர்ந்தாற்போலேயாதல் வளர்ந்தாலாகாதோ? (பேர்வாமனாகாக்கால்) நாட்டில் வாமநர்களெல்லாம் வளர்ந்தருளினவோபாதியாக வாமநனாகவேணுமோ? ஶ்ரியஃபதியென்றொரு பேரானாலாகாதோ? ஒருருஷிபத்நிபக்கலிலேபிறந்து பேணுவாரின்றிக்கே வளர்ந்து பேரும் வாமநனாகாவிட்டால், உன்கையிலே பருத்திபட்டபன்னிரண்டும் பட்டு அணைவது உண்பது உமிழ்வதான இந்த பூமி நீரேற்பரிதாய்ப்

(க) ஸ்ரீராமா - ஆரண்ய. ௬௬ - ௧௯.

பட்டாயோ? (பேராளா) கார்யஞ் சொல்லுவதுக்கு முன்னே "எத்திறம்" என்கிறார். உன்னுடைமையிலுனக்குக் கிடக்கிற ‡ஓரத்துக்கெல்லை காண்கிறிலோமீ! (மார்பித்யாதி) நீ இப்படி எளியையாய வதரிக்கைக்கடி சூழ்ந்துசொல்லு-புத்திபண்ணி யருளிச்செய்யவேணும். †ஸர்வேஶ்வரன்தானும் தன்னுடைய அவதாரத்தைப்பேசப் புக்கால், (க) "జన్మకర్మచమేదివ్యమ్-ஜந்மகர்மசமேதிவ்யம்" என்னுமத்தனை. வேதமும் பேசப்புக்கால் (உ) "తస్యధీరాః పరిజానన్తి యోనిమ్-தஸ்யதீராஃ பரிஜாநந்தியோநிம்." கசு.

அந்.—பதினாறாம்பாட்டு - (அநந்தவ்ரதம்) - சாடு. "சூழ்ந்து" - விசாரித்து., ஸர்வஜ்ஞனைச்சூழ்ந்துசொல்லு என்பானென்னென்ன, அருளிச்செய்கிறார் (ஸர்வேஶ்வரன்) இத்யாதி. கசு.

சூழ்ந்தடியார் வேண்டினக்கால் தோன்றாது விட்டாலும்,
வாழ்ந்திடுவர் பின்னும்தம் வாய்திறவார்,—சூழ்ந்தெங்கும்
வாள்வரைகள் போலரக்கன் வன்தலைகள்தாமிடியத்,
தாள்வரைவில் லேந்தினார்தாம். கஎ.

அந்.—எங்கும், சூழ்ந்து, அரக்கன், வாள், வரைகள்போல், (ரு) வன், தலைகள்தாம், இடிய, தாள், வரை, (கo) வில், ஏந்தினார்தாம், சூழ்ந்து, அடியார், வேண்டினக்கால், (கரு) தோன்றாதுவிட்டாலும், வாழ்ந்திடுவர், பின்னும், தம்வாய்திறவார். (ககூ)

அர்.—நாற்புறங்களிலும், சுற்றிக்கொண்டு, ராவணனுடைய, ஒளியையுடைய, மலைகள்போன்ற, (ரு) திண்ணிய, தலைகள், அழியும்படி, காலுரத்தையுடைத்தாய், மலைபோன்ற, (கo) வில்லைத், தரித்த (ஸமர்த்தரான) வர்தாமே, வளைத்துக்கொண்டு, (எனக்குநீங்கள்) தாஸராகவேணும்என்று, அபேக்ஷிக்கும்போது, (கரு) (சேதநர்) இசையாவிடினும், (தம்மபேக்ஷை ஸித்தித்ததில்லையென்று வெறுக்காமல், அவர்களபேக்ஷிதம் ஸித்தித்ததென்று) உகந்திருப்பர். அதற்குமேல், (இதைப்பிராட்டியோடும்) தம்முடையவாயைத்திறந்து சொல்லார். (ககூ). கஎ.

வ்யா.—அவ.—பதினேழாம்பாட்டில், (சூழ்ந்து) அவன்கிட்டப்புக்கால் இவர்கள்பண்ணும் வைமுக்ய மவன் நெஞ்சிற்படாதென்கிறது.

---

‡ ஓரம் - பக்ஷபாதம். (உ) கீதை. ச - கூ.
(ரு) புருஷஸூ.

(சூழ்ந்தடியாரித்யாதி) (க) "எதிர்சூழல்புக்கு" என்னும்படியே இவர்களைச் சூழ்ந்து "அடியார்வேணும்" என்றபேக்ஷித்தால் இவர்கள் தோன்றாவிட்டாலும் "இவர்களுக் குறுப்பாகப் பெற்றோமிறே" என்று வாழ்ந்திருப்பதுஞ் செய்வர். "வைமுக்யம் பண்ணினார்" என்று தனியிருப்பிலே பிராட்டிக்கு வாய்திறவார். ப்ரஜைகள் குற்றஞ்செய்யத்,தாய்க்கிறே சொல்லுவது; அவளுக்குச் சொல்லார். (சூழ்ந்தெங்குமித்யாதி) "பார்த்தவிடமெல்லாம் ராமசரம்" என்னும்படி சூழ்ந்து ஒளியையுடைய மலைபோலேயிருந்துள்ள ராக்ஷஸனுடைய தலைகளிடியும்படி திண்ணியவில்லை யேந்திய ஸர்வரக்ஷகன் சக்தராயிருக்கச்செய்தே அசக்தரைப்போலே யிருப்பர். "இவர்களுபேக்ஷித்தார்" என்று பிராட்டிக்கும் வாய்திறவார்.

† அடியாரானவர்களுபாஸித்தாலும் தோன்றிற்றிலராகில் சேஷபூதன் சேஷிசெய்தபடிகண்டிருக்குமத்தனையன்றோ? வென்றுவெறார்கள். (பின்னும் தம்வாய்திறவார்) பகவத்குணஹானி சொல்லுமவர்களுக்கும் வாய்திறவார். (சூழ்ந்தெங்குமித்யாதி) † தோன்றுமவர் நமக்குத் தோன்றிற்றிலரென்று வெறார்கள். கஎ.

அரு.—பதினேழாம்பாட்டு, தோன்றாவிடுகை - ஆபிமுக்யம்பண்ணாவிடுகை. "தாள்வரைவில் - வளைந்து மலைபோலேயிருக்கிறவில். ஈஶ்வரன்வெறானென்றதுகீழ்;" "தோன்றாதுவிட்டாலும்" - ஈஶ்வரன் முகங்காட்டாவிட்டாலும், அடியார்வெறாரென்று அடியார்பரமாக்கி யருளிச்செய்கிறார் (அடியாரானவர்கள்) இத்யாதி. "அடியார்சூழ்ந்து வேண்டினக்கால்" - புத்திபண்ணி உபாஸித்தால். (தோன்றுமவர்) - ராமாவதாரமாய்த்தோன்றுமவர். கஎ.

தாம்பா லாப்புண்டாலு மத்தழும்பு தானிளகப்,
பாம்பா லாப்புண்டு பாடுற்றாலும்,—சோம்பாதிப்
பல்லுருவை யெல்லாம் படர்வித்த வித்தா, உன்
தொல்லுருவை யாரறிவார் சொல்லு. கஅ.

அந்.—தாம்பால், ஆப்புஉண்டாலும், அத்தழும்புதான், இளக, பாம்பால், (ரு) ஆப்புண்டு, பாடு, உற்றாலும், சோம்பாது, இ, (க௦) பல், உருவை யெல்லாம், படர்வித்த, வித்தா, உன், (கரு) தொல், உருவை, யார், அறிவார், சொல்லு. (உ௦)

அர்.—(யசோதைப்பிராட்டியினால்) கயிற்றினால், கட்டுண்டாலும், அக்கட்டினாலுண்டான அடையாளமும், இல்லாதபடி, காளியனால், (ரு) கட்டுண்டு, வருத்தத்தை, அடைந்தாலும், (இந்த பாதைகளைநினைத்துப்) பின்

(க) திருவாய் - உ - எ - சு.

வாங்காமல், இந்த, (௧௦) அநேகவிதமான, (தேவமநுஷ்யாதி) ஸ்வரூபங்களை யெல்லாம், விஸ்த்ருதமாக்கின (ஸ்ருஷ்டித்த), காரணபூதனே! உன்னுடைய, (௧௫) அநாதியான, (அவிக்ருத) ஸ்வபாவத்தை, யார்தான், அறியத்தக்கவர்? சொல்லு. (௨௦) கஅ.

வ்யா.—அவ.—பதினெட்டாம்பாட்டில், (தாம்பால்) உகந்து முகவாதும் ஸம்ஸாரிகள்பண்ணும் பரிபவத்தைக்கண்டு தன் ரக்ஷணத்திலே நெகிழுகில்லானென்கிறது.

(தாம்பித்யாதி) "என்மகனிறே, நானிவனுக்கு நல்லள்" என்று யசோதைப்பிராட்டிதாம்பாலேகட்டினாலும். அவர்கள்கட்டினகட்டு அபிமதவிஷயத்தில் ஸம்ஶ்லேஷசிஹ்நம்போலேயிறே. அத்தழும்பு ஏதுமில்லாதபடி காளியனாலே படாதது பட்டாலும். (சோம்பாதித்யாதி) "இப்படி ஸம்ஸாரிகள் வைமுக்யம்பண்ணினார்கள்" என்று சோம்பாதே "நங்கார்யஞ்செய்கைநமக்கு எளிவரவோ?" என்று, காளியனிற்காட்டில் தோலாதாராயிருக்கிற ப்ரஜைகளையெல்லாம் விஸ்த்ருதமாக்கினகாரணத்வப்ரயுக்தமான * குடற்றுடக்கையுடையவனே! பழையதான உன்னுடைய † வடிவைவேறுசிலரறியப்போமோ? நீயேசொல்லு. பரிபவம்பண்ணினபோதோடு பண்ணாதபோதோடு வாசியற ஏகரூபமான உன்னுடைய ஸ்வரூபத்தை வேறுசிலரறியப்போமோ? நீயேசொல்லு. கஅ.

அரு.—பதினெட்டாம்பாட்டு. "தானிளக" - தழும்புதானில்லாதபடி. (வடிவை) - ஸ்வரூபத்தை. கஅ.

சொல்லில் குறையில்லை சூதறியா நெஞ்சமே,
எல்லிப் பகலென்னா தெப்போதும்,—தொல்லைக்கண்
மாத்தானைக் கெல்லா மோரைவரையே மாறாகக்,
காத்தானைக் காண்டுநீ காண். கக.

அந்.—சூது, அறியா, நெஞ்சமே, சொல்லில், குறையில்லை. (௫) தொல்லை, கண், மா, தானைக்குஎல்லாம், ஓர், (௧௦) ஐவரையே, மாறாக, எல்லி, பகல், என்னாது, (௧௫) எப்போதும், காத்தானை, காண்டும், நீ, காண். (௨௦)

அர்.—உபாயத்தை, அறியாத, ஓமநஸ்ஸே! சொல்லப்புகில், (அவன் குணங்களுக்கு) பரிச்சேதமில்லை. (௫) பழையதான, பூமியிலுள்ள, பெரிய, ஸேனைகளுக்கெல்லாம், ஸஹாயமின்றியிருக்கிற, (௧௦) பாண்டவர்களைந்து பேரையுமே, எதிரிகளாக, (ச்செய்து), இரவு, பகல், என்றநினையாமல், (௧௫)

* குடல்துடக்கு - சரீரஸம்பந்தம்.

ஸர்வகாலத்திலும், (சத்ருநிரஸநோபாயத்தைச்சிந்தித்தும், சண்டை செய்தும் அவர்களை) ரக்ஷித்தவனைக், காண்போம், நீ, பார். (உ0) கக.

வ்யா.—அவ.—பத்தொன்பதாம்பாட்டில், (சொல்லில்) கீழ்பருவம்கிரம்புவதற்கு முன்பு செய்தபடிசொல்லிற்று; வளர்ந்தபின்பு செய்தபடிசொல்லுகிறது.

(சொல்லில் குறையில்லை) பகவத்விஷயத்தைப் பேசப்புக்கால் † பேச்சில் குறையில்லை. (சூதறியா நெஞ்சமே) "பகவத் விஷயம் நன்று" என்றும், "விஷயப்ராவண்யமநர்த்தம்" என்றும், விடவும் பற்றவுமறியாத நெஞ்சே! (தொல்லையித்யாதி) பழையதான பூமிநெளியும்படியான மஹாஸேனைக்கெல்லாம், ‡தானே காத்தானென்னில் தங்களுக்குத்தோல்வி என்று அவர்களிசையாரென்று பாண்டவர்களைந்துபேரும் எதிராக (காத்தானைக்காண்டுநீகாண்) காண்போமென்று காணப்புக்கால்†. அவர்கள் பகல் யுத்தம்பண்ணி இரவுறங்கினாலும் இரவும் பகலு முறங்காதே அர்ஜுநன் தோள்பிடிப்பது வெல்லும்படி மநோரதிப்பதுஞ் செய்துகொடு நின்று காத்தவனை. (காண்டுநீகாண்) காண்போமென்று காணப்புக்கா லுள்ளபடியே காணலாங்காண். கக.

அந.—பத்தொன்பதாம்பாட்டு. (பேச்சில்குறையில்லை)-பேசிமுடியாது; எத்தனைபேசினாலும் விஷயத்தைப் பரிச்சேதிக்கப்போகாதென்றபடி. "சூது" விரகு. "கண்" என்று - இடமாய், பூமி. "தானை"- ஸேனை. (காண்போம் என்றுகாணப்புக்கால்.) காணலாங்காணென்றபூரிப்பது. [சூதறியாநெஞ்சமே சொல்லில் குறையில்லை - தொல்லைதொடங்கி. மாருக எல்லிப்பகலென்னாதெப்போதும் - காத்தானைக்காண்டும். நீகாண்] என்றந்வயம். கக.

காணப்புகி லறிவு கைக்கொண்ட நன்னெஞ்சம்,
நாணப்படு மன்றே நாம்பேசில்,—மாணி
யுருவாகிக் கொண்டுலகம் நீரேற்ற சீரான்,
திருவாகம் தீண்டிற்றுச் சென்று. உ0.

அந்.—மாணிஉருவாகிக்கொண்டு, உலகம், நீர் ஏற்ற, சீரான், திருஆகம், (ரு) சென்று, தீண்டிற்று, நாம், காணப்புகில், பேசில், (க0) அறிவு, கைக்கொண்ட, நல், நெஞ்சம், நாணப்படுமன்றே. (கரு)

அர்.—ப்ரஹ்மசாரிவேஷத்தையுடையனாய்க்கொண்டு, லோகத்தை, தாநஜலம்பிடித்து வாங்கிக்கொண்ட, அழகையுடையவனுடைய, திருமேனியைக், (ரு) கிட்டி, (லோகம்) ஸ்ப்ருசித்தத்தை, நாம், விசாரிக்கப்புகிலும்,

‡ இது "ஓர்" என்பதின் தாத்பர்யம். இவ்வாக்யம் ஸந்திக்தம்.

சொல்லப்புகிலும், (க0) விவேகத்தை, உடைய, விலக்ஷணமான, மநஸ்ஸு, வெட்கப்படவேண்டாவோ? (கரு) (அவ்வளவு பெரியனைத்தொடுகைக்கும் நமக்கு யோக்யதையில்லை). உ0.

வ்யா.—அவ.—இருபதாம்பாட்டில், (காணப்புகில்) நான் "காண்" என்று சொன்னால் தன்னை யறிந்து கிட்டவேண்டாவோ? வென்கிறார்.

(காணப்புகிலித்யாதி)நாமறியாதே காணப்புகுதல், அர்த்ததத்வமிருந்தபடியே பேசப்புகுதல் செய்தால் அறிவுக்கு வாய்த்தநிலையான நெஞ்சுக்கு நாண வேண்டாவோ? (மாணியித்யாதி) †இத்தைத்தீண்டுகைக்கு அவன் ப்ரவர்த்தித்தபடி. (திருவாகமித்யாதி) தன்னையறிந்தால் விலக்ஷணமான வடிவைச் சென்று தீண்டக்கடவதோ? உ0.

அரு.—இருபதாம்பாட்டு. "தீண்டிற்று" "நாணப்படுமென்றே"? - நாண வேண்டாவோ? என்று அவதாரிகைக்குத் தாத்பர்யம். (இத்தைத்தீண்டுகை)- இது தீண்டுகைக்கு. ஸர்வவிஷயமாக அவன்தீண்டுகையாலே இதுவும் லஜ்ஜியாமல் தீண்டிற்றென்றபடி. இத்தைத்தீண்டுகைக்காக. அவன்செய்த வ்யாபாரமாகையாலே இதுவுங்கூசாமல் தீண்டிற்றென்னவுமாம். [காணப்புகில்- நாம்பேசில் - அறிவுகைக்கொண்ட நன்னெஞ்சம் - மாணியுருவாகி - நீரேற்று உலகங்கொண்ட - சீரான். திருவாகம்சென்றுதீண்டிற்று - நாணப்படும்] என்றந்வயம், உ0.

சென்றங்கு வெந்நரகில் சேராமல் காப்பதற்கு,
இன்றிங் கென்னெஞ்சா லிடுக்குண்ட,—அன்றங்குப்
பாருருவும் பார்வளைத்த நீருருவும் கண்புதையக்,
காருருவன் தான் நிமிர்த்தகால். உக.

அந்.—அன்று, அங்கு, பார்உருவும், பார், வளைத்த, (ரு) நீர்உருவும், கண்புதைய, கார், உருவன், தான் நிமிர்த்த, (க0) கால், அங்கு, சென்று, வெம், நரகில், (கரு) சேராமல், காப்பதற்கு, இன்று, இங்கு, என்னெஞ்சால், (உ0) இடுக்கு உண்ட. (உக)

அர்.—மஹாபலியஜ்ஞம்செய்த அக்காலத்தில், அந்த தாநம்பண்ணின விடத்தில், பூமியாகிறவஸ்துவும், பூமியைச், சுற்றியிருக்கிற, (ரு) ஜலமாகிற வஸ்துவும், மறையும்படி, மேகம்போன்ற, வடிவையுடையவன், தான்வளர்த்தின, (க0) திருவடிகள், (நான்) அந்தலோகாந்தரம், போய், க்ரூரமான, நரகத்தில், (கரு) அடையாமற்படி, ரக்ஷிக்கைக்காக, இப்போது, இந்தஸம்ஸாரத்தில், என்னுடைய மநஸ்ஸினால், (உ0) நெருக்கப்பட்டது. (உக) உக.

வ்யா.—அவ.—இருபத்தோராம் பாட்டில், (சென்றங்கு)†ஓரிடத்திற் போகாதபடி நிஶ்ஶேஷமாக க்ரஹிக்கப்பார்த்தால் அவகாசம் பெற்றன்றோ க்ரஹிப்பதென்கிறது.

(சென்றித்யாதி) வெந்நரகென்று-அகலுகைக்குப்பேர், ஸம்ஸாரத்துக்கும் பேர். அறிவார்க்கு நரகமாவது-ஸம்ஸாரமிறே. (இன்றித்யாதி) கினைவின்றிக்கே என்னுடைய நெஞ்சிலே நெருக்குண்டது. (அன்றித்யாதி) இன்றிங்கென்னெஞ்சாலிடுக்குண்டது - பூமியும் பூமியடையச் சூழ்ந்த ஜலங்களும் மறையும்படி பரம்பினமேகம்போலே ஶ்யாமமான வடிவையுடையவனுடைய திருவடிகளென்னெஞ்சிலே இடுக்குண்டது. ௨௧

அரு.—இருபத்தோராம்பாட்டு. "இடுக்குண்ட" என்றத்தைப்பற்ற அவதாரிகையருளிச்செய்கிறார் (ஓரிடத்தில்) இத்யாதி. என்னெஞ்சிலே அகப்படுகையாலே புறம்பேபோகத்திருவடிகளுக்கவகாசமில்லாமையாலே ஸம்ஸாரிகள் ஓரிடத்திற்போகாதபடி நிஶ்ஶேஷமாகத் திருவடிகளை உள்ளே க்ரஹிக்கிறோமென்றாலும் இனிப்போகாதென்றபடி. [அன்றங்குப்பாருருவும் பார்வளைத்த நீருருவும் கண்புதைய-தான்நிமிர்த்தகாருருவன் கால்அங்கு சென்றுவெம்நரகில் சேராமல்காப்பதற்கு இன்றிங்குளன்னெஞ்சாலிடுக்குண்ட] என்றந்வயம். ௨௧.

காலே பொதத் திரிந்து கற்றுவரா மினநாள்,
மாலார் குடிபுகுந்தா ரென்மனத்தே,—மேலால்
தருக்குமிடம் பாட்டிநெடும் வல்வினையார் தாம், வீற்
றிருக்குமிடம் காணு திளைத்து. ௨௨.

அந்.—மாலார், என்மனத்தே, குடிபுகுந்தார், மேலால், தருக்கும், (௯) இடம்பாட்டிநெடும், வல், வினையார், தாம், வீற்றிருக்கும், (௧௦) இடம், காணாது, இளைத்து, கால், பொத, (௧௫) திரிந்து, இனநாள், கற்றுவராம். (௧௫)

அர்.—ஸர்வாதிகரானவர், என்னுடையஹ்ருதயத்தை, வாஸஸ்த்தானமாகப்ரவேசித்தார். முற்காலத்தில், நலிந்த, (௯) செல்வத்துடன், அதிக்ரூரமான, பாபமானது, தான், ஸுகமாகவஸிக்கைக்கு, (௧௦) இடம், அறியாமல், துர்பலமாய், கால், வெடிக்கும்படி, (௧௫) திரிந்து, இக்காலத்தில், கூப்பிடாநின்றது. (௧௫) ௨௨.

வ்யா.—அவ.—இருபத்திரண்டாம்பாட்டில், (காலே) நம்முடையப்ராப்திப்ரதிபந்தகமான கர்மங்கள் கால் †பொதும்படி தடுமாறிக்கூப்பிட்டுத்திரியுமத்தனையிறே இனநாளென்கிறார்.

(மாலாரித்யாதி) (க) "அரவத்தமளியினோடும்" இத்யாதிப் படியே ஸர்வேஸ்வரன் என்மநஸ்ஸிலே புகுந்தான். (மேலாலித்யாதி) பண்டு நம்மை ஹிம்ஸித்துப்போந்தவளவுடைமையோடேகூட வல்வினையார் விஸ்த்ருதமாக இருக்குமிடங்காணுதே இளைத்துக்கால் தேயும்படி தடுமாறிக் கூப்பிட்டுக் கொடுதிரியுமத்தனையிறே இனநாள்.

அரு.—இருபத்திரண்டாம்பாட்டு. (பொதும்படி) - வெடிக்கும்படி. முள்ளுத்தைக்கையுமாம். தருக்குகை-நெருக்குகையாய், ஹிம்ஸிக்கை. [என்மனத்தேமாலார்குடிபுகுந்தார் - வல்வினையார்தாம்மேலால் தருக்குமிடம்பாட்டினொடும்வீற்றிருக்குமிடங்காணுதிளைத்துகால்பொதத்திரிந்து இனநாள்சற்றுவராம்] என்றந்வயம். உஉ.

இளைப்பா யிளையாப்பாய் நெஞ்சமே சொன்னேன்,
இளைக்க நமன்தமர்கள்பற்றி—இளைப்பெய்த,
நாய்தந்து மோதாமல் நல்குவான் நல்காப்பான்,
தாய்தந்தை யெவ்வுயிர்க்கும் தான். உங.

அந்.—இளைக்க, நமன்தமர்கள், பற்றி, இளைப்புஎய்த, நாய், (௫) தந்து, மோதாமல், நல்குவான், நல்காப்பான், எவ்வுயிர்க்கும், (௧0) தான், தாய், தந்தை, நெஞ்சமே, இளைப்பாய், (௧௫) இளையாப்பாய், சொன்னேன். (௧௭)

அர்.—(பிடிக்கும்போதே) துர்ப்பலராகும்படியாக, யமபடர்கள், பிடித்து, (இன்னும்) துர்ப்பலராம்படி, (ப்ராணிகள்மேல்) நாய்களை, (௫) ஏவி, உபத்ரவியாமல், ரக்ஷிக்கிறானாகிலும்சரி, ரக்ஷியாதொழிவானாகிலும்சரி. ஸகலப்ராணிகளுக்கும், (௧0) தானே, தாயும், தந்தையுமாவான். ஓமநஸ்ஸே! (அவனைக்கிட்டாமல்) தளரில்தளரு; (௧௫) (கிட்டி) தளராதொழிகையாவது செய். (இப்பரமார்த்தத்தை உனக்கு) உபதேசித்தேன். உங.

வ்யா.—அவ.—இருபத்துமூன்றாம் பாட்டில், (இளைப்பாயித்யாதி) பற்றுவாய், பற்றாதொழிவாய். அவனைப்பற்றிலும் பற்று, விஷயத்தைப்பற்றிலும் பற்று. (நெஞ்சமே சொன்னேன்) "ஈஶ்வரனே ஸர்வவிதபந்து" என்னுமிடமொருத்தருக்குஞ் சொல்லுமதன்று. அந்தையுனக்குச் சொன்னேன். (இளைக்கவித்யாதி) பற்றும்போதே இளைக்கும்படிக் கிடாகப்பற்றி. (இளைப்பித்யாதி) இளைக்கும்படிக்கிடாக நாய்களைவிட்டு மோதாதபடி. (நல்குவான் நல்காப்பான்) ரக்ஷிக்கிலும் ரக்ஷிக்கிறான், ரக்ஷியாதொழியிலு மொழிகிறான். (தாய்

(க) பெரியாழ்வார் திரு - ௫ - உ - க0.

தந்தைஎவ்வுயிர்க்குந்தான்)ஸர்வரக்ஷகனவன் †"ரக்ஷகன் ரக்ஷணத்திலே நெகிழகின்றான்" என்று அரக்ஷகரைப் பற்றவொண்ணாதே. (௧) "களைவாய்துன்பம் களையாதொழிவாய்" என்னும்படியே.

அந.—இருபத்துமூன்றாம்பாட்டு. அவனைப்பற்றி இளையாமையும், விஷயங்களைப்பற்றி இளைக்கையும். நல்காவிட்டால் தாய்தந்தையானபடி எப்படியென்ன அருளிச்செய்கிறார் (ரக்ஷகன்) இத்யாதி. உ௩.

தானேதனித் தோன்றல் தன்னளப் பொன்றில்லாதான்;
தானே பிறர்கட்கும் தற்றோன்றல்,—தானே
இளைக்கிற்பார் கீழ்மேலாம் மீண்டமைப்பானானால்,
அளக்கிற்பார் பாரின்மேலார். உச.

அந்.—தனி, தோன்றல், தானே, தன், அளப்பு, (௫) ஒன்று, இல்லாதான், தானே, பிறர்கட்கும், தற்றோன்றல், (௧௦) தானே, தானே, இளைக்கில், பார், கீழ்மேலாம், (௧௫) மீண்டு, அமைப்பானானால், அளக்கிற்பார், பாரின்மேல், ஆர். (உ௦)

அர்.—அநந்யாதீநமான, அவதாரத்தை, உடையன், தானேயாகிறான். தனக்கு, உபமாநமாகிய, (௫) (வேறு) ஒருவஸ்து, இல்லாதவனும், தானேயாகிறான். அயலாருக்கும், ப்ரஸித்தமாக அந்தர்யாமியாமவனும், (௧௦) தானேயாகிறான், (இப்படி ஸகலகாரணபூதனான) தானே, (ரக்ஷணத்தில்) பின்வாங்கினால், பூமி, கீழது மேலதாம் (வ்யவஸ்த்தையற்றிருக்கும்). (௧௫) மறுபடியும், ரக்ஷிப்பானாகில், (அதை) அளவிட்டுச்சொல்லவல்லார், பூலோகத்தில், யாருண்டு? (ஒருவராலுமவனைப்பரிச்சேதிக்கவொண்ணாது). உச.

வ்யா.—அவ.—இருபத்துநாலாம்பாட்டில், (தானே) † அந்வயவ்யதிரேகங்களிரண்டாலும் அவனே ரக்ஷகனென்கிறது.

(தானே தனித்தோன்றல்) ஒரு † ஹேத்வந்தரத்தாலே தோற்றுமவனல்லன். (தன்னளப்பொன்றில்லாதான்) உபமாநரஹிதன். (தானே பிறர்கட்கும் தற்றோன்றல்) அல்லாதார்க்கும் ஸத்தை அவன். (தானேயித்யாதி) அவன் ரக்ஷணத்திலே நெகிழநிற்கில் பூமி அதரோத்தரையாம். (மீண்டமைப்பானானால்) அவன்றானே திரியட்டும் ரக்ஷிப்பானானால், (அளக்கிற்பார்பாரின்மேலார்) பூமியிலவனைப் பரிச்சேதிக்க வல்லாருண்டோ? உச.

அந.—இருபத்துநாலாம்பாட்டு. "இளைக்கில்" என்றது - வ்யதிரேகம். மீண்டமைக்கை - அந்வயம். ஹேத்வந்தரம் - கர்மம், அதடியாகப்பிறக்கு

(௧) திருவாய் - ௫ - எ - அ.

மவன்ன்றென்றபடி. "தற்ருேன்றல்" - தத்சப்தம் (௧) "அந்தர்யாம்யம்ருத: - அந்தர்யாம்யம்ருத:" என்றப்ரஸித்தியைப்பற்ற. உ௪.

ஆரானு மாதானுஞ்செய்ய, அகலிடத்தை;
ஆராய்ந் ததுதிருத்தலாவதே,—சீரார்
மனத்தலைவன் துன்பத்தை மாற்றினேன், வானோர்
இனத்தலைவன் கண்ணனால் யான். உ௫.

அந்.—ஆரானும், ஆதானும், செய்ய, அகல், இடத்தை, (௫) ஆராய்ந்து, அது, திருத்தலாவதே, யான், வானோர், இனம், (௧0) தலைவன், கண்ணனால், சீரார், மனத்தலை, (௧௫) வன், துன்பத்தை, மாற்றினேன். (௧௮)

அர்.—யாராகிலும், (ஸாம்ஸாரிகப்ரவ்ருத்திகளில்) ஏதாகிலும், செய்யட்டும். விசாலமான, பூமியை (த்திருத்தும் விரகுகளை), விமர்சித்து, அவர்கள் ப்ரவ்ருத்திகளை, (நம்மால்) சீர்படுத்தப்போமோ? (அயோக்யனான) நான், நித்யஸூரிகளுடைய,(௧0) ஸமூஹத்துக்கு, நிர்வாஹகனாய், (இருந்து), (நீர்மையாலேவந்தவதரித்த) க்ருஷ்ணனாலே, (அவனுடையநீர்மையைக்கண்டு), (பகவத்விஷயத்திலாபிமுக்யமாகிற) நன்மையையுடைய, மநஸ்ஸிலுண்டான, (௧௫) கொடிய, (விஶ்லேஷ) து:கத்தைப், போக்கினேன். (௧௮) உ௫.

வ்யா.—அவ.—இருபத்தைந்தாம் பாட்டில், (ஆரானும்) "பூமியிலுள்ளாரை யெல்லாம் நம்மாலே திருத்தப்போமோ? நாம் முன்னம் பகவத்விஷயத்தில் அவகாஹிக்கப்பெற்றோமிறே" என்று ஹ்ருஷ்டராகிருர். வழிபறிக்குமிடத்தே தப்பிப்போனவன் கிழிச்சிரையயவிழ்த்துப் பார்த்து "இது தப்பப்பெற்றோமே" என்று உகப்பானைப்போலே.

(ஆரானுமித்யாதி) எல்லாருமேதேனுஞ்செய்க; பூமிப்பரப்பையெல்லாம் நம்மாலே யாராய்ந்து திருத்தப்போமோ? (வானோரித்யாதி) நித்யஸூரிகளுக்குத் தலைவனாய்வைத்துத் தன்னை இதர ஸஜாதீயனாக்கி ஸுலபனான க்ருஷ்ணனாலே பகவத்ஸம்பந்தமாகிற ஐஶ்வர்யத்தை யுடைத்தான மநஸ்ஸின் தலையிலே கிடக்கிற ஸம்ஸார து:கத்தை மாற்றினேன்; எல்லாரையுந் தம்மாலே திருத்தப்போமோ? வென்கிருர். உ௫.

அந. — இருபத்தைந்தாம்பாட்டு. [வானோரினத்தலைவன் கண்ணனால் யான் சீரார்மனத்தலை வன் துன்பத்தைமாற்றினேன் - ஆரானுமாதானும் செய்ய அகலிடத்தை ஆராய்ந்ததுதிருத்தலாவதே] என்றந்வயம். உ௫.

(௧) ப்ருஹதாரண்யம். ௫ - ௭.

யானு மென்னெஞ்சு மிசைந்தொழிந்தோம், வல்வினையைக்
கானும் மலையும் புகக்கடிவான்,—தானோர்
இருளன்ன மாமேனி யெம் மிறையார்தந்த,
அருளென்னும் தண்டா லடித்து. உசு.

அந்.—ஓர் இருள்தான், அன்ன, மா, மேனி, எம், (ரு) இறையார், தந்த, அருள்என்னும், தண்டால், அடித்து, (க0) வல், வினையை, கானும், மலையும், புக, (கரு) கடிவான், யானும், என், நெஞ்சும், இசைந்தொழிந்தோம். (உ0)

அர்.—இருள்தானே, ஒருவடிவுகொண்டாற்போலிருக்கிற, ச்லாக்ய மான, வடிவையுடையரான, நம்முடைய, (ரு) ஸ்வாமியானவர், கொடுத்த, க்ருபையாகிற, தண்டத்தாலே, புடைத்து, (க0) க்ரூரமான, (நம்முடைய) பாபத்தைக், காட்டிலும், மலையிலும், ப்ரவேசிக்கும்படி, (கரு) ஓட்டுகைக்காக, நானும், என்னுடைய, மநஸ்ஸும், ஸம்மதித்தோம். (உ0) உசு.

வ்யா.—அவ.—இருபத்தாறும் பாட்டில், (யானும்) "மாற்றினேன்" என்று கர்த்ருத்வந் தோற்றச்சொன்னார், அந்த கர்த்ருத்வமாவது - அவன்மேல்விழ என்னுடைய விலக்காமையென்கிறார்.

(யானுமித்யாதி) இத்தலையில்குறைவற்றது. பொருந்தாததலையும் பொருந்திற்று, பொருந்துமவன் பொருந்தச்சொல்லவேண்டாவிறே. (தானோரிருளித்யாதி) † மற்றொன்றுகாணாமல் ச்ரமஹரமான வடிவையுடைய வென்ஸ்வாமியுடைய ப்ரஸாதமாகிற தண்டாலேஹிம்ஸித்து. (வல்வினையித்யாதி) அவன்பிரிவாகிற மஹாபாபத்தைக் காட்டிலும் மலையிலும் புகும்படியோட்டும்படிக்கீடாக யானுமென்னெஞ்சுமிசைந்தொழிந்தோம். உசு.

அரு.—இருபத்தாறும்பாட்டு. (மற்றொன்றுகாணாமல்) - வினையைப் போக்குகைக்கு வேறொருஉபாயங்காணாமல், அவனருளாலேபோக்கினனென்றபடி. உசு.

அடியால் படிகடந்த முத்தோ, அதன்றேல்
முடியால் விசும்பளந்த முத்தோ,—நெடியாய்
செறிகழல்கள் தாள்நிமிர்த்துச் சென்றுலக மெல்லாம்,
அறிகிலமால் நீயளந்த வன்று, உஎ.

அந்.—நெடியாய், நீ, செறி, கழல்கள், தாள், (ரு) நிமிர்த்து, உலகமெல்லாம், சென்று, அளந்த, அன்று, (க0) அடியால், படி, கடந்த, முத்தோ, அதன்றேல், (கரு) முடியால், விசும்பு, அளந்த, முத்தோ, அறிகிலம் ஆல். (உ0)

அர்.—ஸர்வர்திகனே! நீ, நெருங்கச்சாத்தின, தண்டைச்சிலம்புகளுடைய, திருவடிகளை, (௫) வளர்த்தி, லோகத்தையெல்லாம், போய், ஆக்ரமித்த, அக்காலத்தில், (௧௦) திருவடியினால், பூமியை, அளந்த, ஸந்தோஷமோ? அதல்லவாகில், (௧௫) திருவபிஷேகத்தினால், ஆகாசத்தை, ஆக்ரமித்த, ஸந்தோஷமோ? (இப்போதுனக்குண்டானது). (இன்னதென்று) அறிகிறிலோம். இதோராஸ்சர்யமே. (௨௦) உஎ.

வ்யா.—அவ.—இருபத்தேழாம்பாட்டில், (அடியால்) "இசைந்தொழிந்தோம்" என்கிறவித்தாலே தந்தலையில்குறையற்றது. "அருளென்னும்தண்டால்" என்கையாலேபெறுவது மவன்ப்ரஸாதத்தாலே யென்னுமிடம்சொல்லிற்று. இனியவர்க்கநுபவத்திலே யிறேயந்வயம், ஆகையாலே அநுபவிக்கிறார்.

(அடியித்யாதி) முத்தென்று - மௌக்த்யமாய், அத்தாலே லக்ஷணையாலே அழகாய், அடியாலே பூமியையளந்தவழகோ? திருமுடியாலே ஆகாசத்தையளந்தவழகோ? என்னவுமாம். "செறிகழல்" என்கையாலே - திருவடிகளிலே முத்துண்டாகையாலும்; (க) "நீண்முடிவெண்முத்தவாசிகைத்தாய்" என்கையாலே, திருமுடியிலேமுத்துண்டாகையாலும். அடியாலே படியையளந்தன முத்துக்களோ? முடியாலே விசும்மையளந்தன முத்துக்களோ? (உ) "சிலம்புஞ்செறிகழலும்" என்று இதுக்குள்ளீடான முத்துப்ரகாசமாதல், சாத்தினமுத்தாதல். (அறிகிலமால்) அறிகிறிலோம். இப்போதுனக்கோடுகிற ஹர்ஷம் - திருவடிகளின்கீழே பூமியையிட்டுக்கொண்ட ஹர்ஷமோ? திருமுடியாலே யாகாசாவகாசத்தையெல்லாம் வ்யாபித்த ஹர்ஷமோ? வென்றுமாம். [நெடியாய்செறிகழல்கள் தாள்நிமிர்த்துச்சென்றுலகமெல்லாம் நீயளந்தவன்று - அடியால் படிகடந்தமுத்தோ-அன்றேல் முடியால்விசும்பளந்த முத்தோ-அறிகிலமால்].உஎ.

அரு.—இருபத்தேழாம்பாட்டு. அடியாலும்முடியாலுமோ என்னுதல். அவற்றிலுண்டான முத்தாலேயோவென்னுதல். முத்தென்றது - அழகாதல், முத்துத்தானுதல், ஹர்ஷமாதல். அறிகிலம். ஆல் - ஆஸ்சர்யம். உஎ

அன்றே நங் கண் காணு மாழியான் காருருவம்,
இன்றேநாம் காணு திருப்பதுவும்,—என்றேனும்
கட்கண்ணால் காணுத வவ்வுருவை, நெஞ்சென்னும்
உட்கண்ணேல் காணு முணர்ந்து. உஅ.

---

(௧) திருவிருத்தம். ௫௦. (௨) மூன்றும் திருவந்தாதி. ௬௦.

அந்.—கண், கண்ணால், என்றேனும், காணாத, அவ்வுருவை, (ரு) நெஞ்சு என்னும், உள்கண், உணர்ந்து, காணுமேல், அன்றே, (கO) ஆழியான், கார், உருவம், நம்கண், காணும், (கரு) நாம், காணாதிருப்பதுவும், இன்றே. (கஅ)

அர்.—கண்ணென்றுபேரையுடைய (காணஅஸமர்த்தமானபுறக்) கண்ணாலே, காணவொண்ணாத, அத்திருமேனியை, (ரு) நெஞ்சாகிற, ஆந்தரத்ருஷ்டியானது, ஆராய்ந்து, ஸாக்ஷாத்கரிக்குமாகில், அப்போதே, (கO) திருவாழியையுடையவனுடைய, மேகம்போன்ற, திருமேனியை, நம்முடையகண், ஸாக்ஷாத்கரிக்கும். (கரு) நாம், ப்ரத்யக்ஷமாக அநுபவியாதிருப்பதும், (அதில்லாத) இப்போதே. (கஅ) உஅ.

வ்யா.—அவ.—இருபத்தெட்டாம்பாட்டில், (அன்றே) திருவுலகளந்தருளின வடிவையநுஸந்திக்கையாலே அவனைக்காணவாசைப்பட்டு அதுகிடையாமையாலே † வெறுத்தவர், † அவன்பக்கல்குறையுண்டோ? நம்முடையகுறையிறேயென்று த்ருப்தராகிறார்.

(அன்றேயித்யாதி) ஸர்வேஶ்வரன்கறுத்ததிருமேனியை நம்முடையகண் அன்றேகாணும். (என்றேனும் இத்யாதி) ஒருநாளும் பகவத்விஷயத்தைக்காணாமையாலே "பீலிக்கண்" என்றவோபாதி † கண்ணென்றுபேரானகண்ணால்காணப்போகாத அவனுடையதிருமேனியை நெஞ்சாகிற உட்கண்ணுணர்ந்துகாணுமாகில்அன்றே நங்கண்காணுமாழியான்காருருவம். (இன்றேநாங்காணாதிருப்பதுவும்) நெஞ்சாகிறஉட்கண்ணுணர்ந்து காணாதவின்றே நாம்காணாதிருப்பது. உணர்ந்துகாணுமன்று நங்கண்காணும். "யானுமென்னெஞ்சுமிசைந்தொழிந்தோம்" என்றுசொன்னாராகில், உட்கண் காணாதொழிகையாவதென்னென்னில்; பரமபக்திபிறந்து அவ்வஸ்துவையொழியச்செல்லாமை யாதொருபோதுபிறக்கும், அப்போதுகாணும் நங்கண்; அவ்வஸ்துவையொழியச்செல்லு மின்று காணப்போகாதென்கிறது. கட்கண்ணென்றது - பீலிபோலேயானபுறக்கண். உஅ.

அந. — இருபத்தெட்டாம்பாட்டு. த்ருப்திசொல்லுகையாலேவெறுப்பு அர்த்தாத்வந்தது. நெஞ்சென்னுமுட்கண்ணாலே உணர்ந்தால் இன்றுங்காணலாம், அதில்லாமையாலே காணப்போகாது, ஆகையாலே அவன்பக்கல் குறையுண்டோ நம்மதன்றோகுறையென்றுத்ருப்தராகிறாரென்றபடி. "கட்கண்"-மீமிசையாலே கண்ணென்றுபேராயிருக்கிற கண்ணென்றபடி. ஜ்ஞாநமுண்டாகில் காணலாம். இல்லாதபோது காணப்போகாதென்றபடி. [நெஞ்சென்னுமுட்கண்ணேல் காணஉணர்ந்தவன்று நங்கண்காணும். உணராதஇன்றேநாங்காணாதிருப்பதுவும்] என்றந்வயம். உஅ.

உணர வொருவர்க் கெளியனே செவ்வே,
இணரும் துழாயலங்க லெந்தை,—உணரத்
தனக்கெளிய ரெவ்வளவ ரவ்வளவ ரானல்,
எனக்கெளிய னெம்பெருமா னிங்கு. உகூ.

அந்.—இணரும், துழாய், அலங்கல், எந்தை, ஒருவர்க்கு, (ரு) செவ்வே, உணர, எளியனே, தனக்கு, எளியர், (கO) எவ்வளவர், அவ்வளவர், ஆனல், எனக்கு, இங்கு, (கரு) எம்பெருமான், உணர, எளியன். (கஅ)

அர்.—தழைத்த, திருத்துழாயின், மாலையையுடைய, என்ஸ்வாமி, (ஸ்வயத்நபரரான) ஒருவர்க்கு, (ரு) நன்ருக, அறிய, ஸுலபனே? (அன்று). தன் விஷயத்தில், ஸ்நேஹமுள்ளவர்கள், (கO) எவ்வளவுஸ்நேஹமுள்ளவராவர், (தானுமவர்களில்) அவ்வளவுஸ்நேஹமுள்ளவனுவன். ஆகையாலே, எனக்கு, இந்தலோகத்திலே, (கரு) என்னுடையஸ்வாமி, அறிந்துகாணும்படி, ஸுலபனுவான். (கஅ) உகூ.

வ்யா.—அவ.—இருபத்தொன்பதாம்பாட்டில், (உணர) எல்லார்க்குமிவ்வவஸ்த்தைபிறக்கை யரிது, † எனக்கிவ்வவஸ்த்தைபிறந்ததென்கிருர்.

(உணரவித்யாதி) ஒருத்தருக்கும் † ஈத்ருக்தயா † இயத்தயா உணரப்போகான் (க) "యస్యామతం తస్యమతమ్ - అవిజ్ఞాతంవిజానతామ్-யஸ்யாமதம் தஸ்யமதம் அவிஜ்ஞாதம்விஜாநதாம்." (இணருந்துழாயலங்கலெந்தை) அபரிச்சிந்நவஸ்துவினுடைய லக்ஷணம் தோளில் திருத்துழாய்மாலையையுடையவனுகை. (இணரும்) தன்னிலத்திலும் இவன்தோளில் விகஸியாநிற்கும். தேவர்கள்தோளில் மாலைவாடாது, ஸர்வாதிகனுகையாலே இவன்தோளிலிட்டது அரும்பியாநிற்கும். (உணரவித்யாதி) தனக்கு நல்லவர்களுணர எவ்வளவர்,அவ்வளவனுய்நிற்கும்.(உ) "ప్రియోహిజ్ఞానినోత్యర్థమ్-ப்ரியோஹிஜ்ஞாநிநோத்யர்த்தம்" (ங) "தம்மையுகப்பாரைத் தாமுகப்பர்" என்னும்படியே. (ஆனலெனக்கெளியனெம்பெருமானிங்கு) தனக்கு நல்லவர்கள் நினைத்தவளவிலேயமைக்குமாகையாலே என்ஸ்வாமி யெனக்கெளியன். உகூ.

(க) கேநோபநிஷத். உ - ங. (உ) கீதை. ௭ - கஅ.
(ங) நாய்ச்சியார் திரு. கக - கO.

அரு. — இருபத்தொன்பதாம்பாட்டு. "எனக்கெளியன்" என்கையாலே (எனக்கிவ்வவஸ்த்தை) என்கிறது. (ஈத்ருக்தயா)-த்ருஷ்டாந்ததயா. (இயத்தயா) - இவ்வளவென்றபரிச்சேதித்து. எளியர் - ஸ்நேஹிகள். உகூ.

இங்கில்லை பண்டுபோல் வீற்றிருத்தல், என்னுடைய
செங்கண்மால் சீர்க்கும் சிறிதுள்ளம்,—அங்கே
மடியடக்கி நிற்பதனில் வல்வினையார் தாம், மீண்
டடியெடுப்ப தன்றோ வழகு. ௩௦.

அந்.—இங்கு, பண்டுபோல், வீற்றிருத்தல், இல்லை, என்னுடைய, (ரு) செம், கண், மால், சீர்க்கும், உள்ளம், (க௦) சிறிது, வல், வினையார், தாம், அங்கே, (கரு) மடி, அடக்கி, நிற்பதனில், மீண்டு, அடியெடுப்பதன்றோ, (உ௦) அழகு. (உக).

அர்.—(என்னுடைய) இந்நெஞ்சத்தில், முன்போல், (வல்வினைக்குப்) பரம்பியிருக்க, (இனி அவகாசம்) இல்லை, என்னுடைய, (ஸ்வாமியாய்) (ரு) சிவந்த, கண்களையுடைய, வ்யாமுக்த்தனுடைய, குணங்களுக்கும், (இடமற்று) ஹ்ருதயம், (க௦) சிறுத்தது. க்ரூரமான, பாபமானது, தான், (முன்கிடந்த) அவ்விடத்திலேயே, (கரு) புடைவையைக், கடுக்கிக்கொண்டு, நிற்பதிற்காட்டிலும், மீளக், கால்வாங்குகையன்றோ, ? (உ௦) அழகு. (உக) ௩௦.

வ்யா.—அவ.—முப்பதாம்பாட்டில், (இங்கில்லை) அவனருமையும்பெருமையுங்கிடக்கிடீர், † நம்மைநலிந்துபோந்த பகவத்ப்ராப்திப்ரதிபந்தகமான கர்மங்களுக்கு நம்முடையபக்க லிருப்பிடமில்லையென்கிறார்.

(இங்கித்யாதி) பண்டுபோலிங்கு விஸ்த்ருத்மாக இருக்கவொண்ணாது - வீற்றிருக்கவொண்ணாது. (என்னுடையவித்யாதி) வகுத்தவிஷயத்துக்குமிடம்போராது. ஐஶ்வர்யவாத்ஸல்யஸூசகமானகண்களையுடைய ஸர்வேஶ்வரனுடையகுணங்களுக்கு என்னுள்ளஞ்சிறிது. (அங்கேமடியித்யாதி) அங்கேயொருமூலையிலேயொதுங்கித்திரிந்தாலோவென்னில்; முதன்மைசெய்தவூரிலே புடைவையை ஒதுக்கிக்கொடு திரிவதில் அங்குநின்றும் சடக்கெனக் கால்வாங்குகையன்றோ? அழகு. ௩௦.

அரு.—முப்பதாம்பாட்டு - "சீர்க்கும்" - குணங்களிருக்கஇடமொழியபாபத்துக்கிடமில்லையென்றபடி. குணஸ்மரணத்தாலே பாபம்போமென்று தாத்பர்யம். மடி - முன்றானை. (௩௦)

அழகு மறிவோமாய் § வல்வினையைத் தீர்ப்பான்,
நிழலு மடிதாறு மானோம்,—சுழலக்
குடங்கடலை மீதெடுத்துக் கொண்டாடி, அன்றத்
தடங்கடலை மேயார் தமக்கு. நக.

அந்.—வல், வினையை, தீர்ப்பான், அழகும், அறிவோமாய், (ரு) குடங்கள், தலைமீது, எடுத்துக்கொண்டு, சுழல, ஆடி, (கo) அன்று, அ, தடம், கடலை, மேயார்தமக்கு, (கரு) நிழலும், அடிதாறும், ஆனோம். (கஅ)

அர்.—க்ரூரமான, பாபத்தைப், போக்குகைக்காக, அழகியதாக (உபாயத்தை) அறிந்தவர்களானோமாய், (ரு) குடங்களைத், தலைமேலே, எறிட்டுக்கொண்டு, (அவை ஆகாசத்தில்) சுழன்றுவரும்படி, நர்த்தநம்பண்ணி, (கo) அப்போது, (அந்தஸ்ரமமாறுகைக்காக) அந்த, விசாலமான, திருப்பாற்கடலைப், பொருந்தி கண்வளர்ந்தருளுகிறவருக்கு, (கரு) நிழல்போலவும், திருவடிக்களவானபாதுகைபோலவும், ஆனோம். (கஅ) நக.

வ்யா.—அவ.—முப்பத்தோராம்பாட்டில், (அழகும்) ஸர்வேஸ்வரனைக்கொண்டே விரோதியையும்போக்கி அங்குத்தைக்குக் கைங்கர்யம்பண்ணும்படியுமானோமென்கிறார்.

(வல்வினையித்யாதி) புதுப்புடைவை யழுக்குக் கழற்றுமாபோலே, ‡ எலியெலும்பரானநாம் கர்மத்தாலே நம்முடையபாபத்தைப் போக்குகையன்றிக்கே † ஸர்வேஶ்வரனைக்கொண்டு நம்பாபத்தைப் போக்கு மழகையுடையோமாய், ஸர்வேஶ்வரனுக்குச் சாயைபோலவும், பாதுகை, பாதரேகைபோலவுமானோம். † அடிதாறு-அடிக்களவாயிருக்குமது. (சுழல் இத்யாதி) ஆகாசத்திலேசுழலும்படிக்கீடாகக்குடங்களையெடுத்தாடி, தன்னை § மன்றிலே ஸர்வஸ்வதாநம்பண்ணிக் குடமாடின † வேர்ப்புப்போகத் திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற விவனுக்குச்சாயைபோலவுமானோம். இளையபெருமாள் படைவீட்டிலும் காட்டிலுமொக்க வடிமைசெய்தாற்போலே க்ருஷ்ணாவதாரத்திலும் திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளுகிறவிடத்திலு மொக்க வடிமைசெய்யும்படியானோம். நக.

அரு.—முப்பத்தோராம்பாட்டு - [வல்வினையைத் தீர்க்கைக்காக அழகறிந்தோம்.] அவனைக்கொண்டே பாபத்தைப்போக்கிக்கொள்ளவேணுமென்கிற

§ வல்வினையும் என்றும் பாடம் காண்கிறது.
‡ எலியெலும்பர் - அல்ப சக்திகர். § மன்றிலே - ஸபையிலே.

ஜ்ஞாநத்தையுடையோமென்றபடி. "அடிதாறு" - பாதுகையாதல், பாதரேகையாதல். பாதுகையானதெப்படியென்ன அருளிச்செய்கிறார் (அடிதாருவது) இத்யாதி. "குடங்கடலை" - குடங்கள்தலை. ஆடினவன்றென்கையாலே (வேர்ப்புப்போக) என்கிறது. ௩௧.

தமக்கடிமை வேண்டுவார் தாமோதரனார்,
தமக்கடிமை செய்யென்றால் செய்யாது,—¶ எமக்கென்று
தாம்செய்யும் தீவினைக்கே தாழ்வுறுவர் நெஞ்சினார்,
யான்செய்வ திவ்விடத்திங் கியாது. ௩௨.

அந்.—அடிமை, தமக்கு, வேண்டுவார், தாமோதரனார்தமக்கு, அடிமை, (௫) செய், என்றால், செய்யாது, தாம், எமக்கு, (௧௦) என்று, செய்யும், தீ, வினைக்கே, நெஞ்சினார், (௧௫) தாழ்வுறுவர், இவ்விடத்து, இங்கு, யான், செய்வது, (௨௦) யாது. (௨௧)

அர்.—(ஒருவர்க்கு) அடிமைப்படுகையைத், தமக்கு, விரும்புகிறவராய், (அதற்காக யசோதையினால்கட்டுண்டு அத்தழும்பைத் திருவுதரத்திலேயுடைய) தாமோதரனாருக்குக், கைங்கர்யம், (௫) பண்ணு, என்றால், பண்ணாமல், தாம், (ஸ்வதந்த்ரமாய்) எமக்கு, (௧௦) என்று (ஒருஅபிநிவேசம்கொண்டு) செய்கிற, கொடிய, (அயோக்யதாநுஸந்தாநரூபமான) செயலிலேயே, மநஸ்ஸானவர், (௧௫) (ஊன்றிப்) பின்வாங்குவர். இந்தலோகத்தில், இப்போது, நான், செய்யவேண்டுவது, (௨௦) எது ? (௨௧) ௩௨.

வ்யா.—அவ.—முப்பத்திரண்டாம் பாட்டில், (தமக்கு) தாமடிமைசெய்ய நிஸ்சயிக்க நெஞ்சுப்ரக்ருதிஸம்பந்தத்தை யுணர்ந்துபிற்காலியா நின்றதென்கிறார்.

(தமக்கடிமைவேண்டுவார்) "கைத்ததுக்ப்பார், புளித்ததுகப்பார்" என்னுமாபோலே தமக்கடிமையை யுகக்குமவர். அதெங்கே கண்டோமென்றால், (தாமோதரனார்) அநுகூலையானதாயார்க்கடியுண்பது கட்டுண்பதான விடத்திலேகண்டோம். (எமக்கித்யாதி) †எம்மைவிட்டுத் தமக்கென்னவே யொருநினைவுடையராய்.(தாம்செய்யும் தீவினைக்கே தாழ்வுறுவர்நெஞ்சினார்) முதலியார். (யான்செய்வதிவ்விடத்திங்கு யாது) நம்முடைமையான நெஞ்சுக்காவோமோ? நம்மையுடையவர்க்காவோமோ ? ௩௨.

அநு.—முப்பத்திரண்டாம்பாட்டு - "தமக்கு அடிமைவேண்டுவார்" - தாம் ஆஸ்ரிதர்க்கடிமைசெய்கையைவேண்டியிருப்பாரென்றபடி - கீழ்மூலத்

¶ எமக்கென்றும் என்று உரையில் பாடம்.

திலே அர்த்தமாக்கி. "எமக்கென்று" என்றத்தைப்பற்ற அருளிச்செய்கிறார் (எம்மைவிட்டு) இத்யாதி. தமக்கு ஆஸ்ரிதரை அடிமைகொள்ளவேண்டியிருப்பரென்று அர்த்தமாக்கி "தமக்கடிமைசெய்யென்றாற்செய்யாது" என்கிறது. ௩௨.

யாதானுமொன்றறியில் தன்னுகக்கிலென்கொலோ,
யாதானும் நேர்ந்தணுகாவாறுதான்,—யாதானும்
தேறுமாசெய்யா வசுரர்களை, நேமியால்
பாறுபாறாக்கினான் பால். ௩௩.

அந்.—யாதானும், ஒன்று, அறியில், தன், உகக்கில், (௫) யாதானும், தேறுமா, செய்யா, அசுரர்களை, நேமியால், (௧௦) பாறுபாறு, ஆக்கினான்பால், யாதானும், நேர்ந்து, அணுகா, ஆறுதான், (௧௫) என்கொலோ. (௧௬)

அர்.—ஏதேனும், ஒருவஸ்துவை, அறியும்போது, (அவ்வறிவில் ஸர்வாந்தர்யாமியான தான் விஷயமாம்படி ஸர்வசரீரியாய்), (உகக்கிறவன்) ஸ்வஸ்வரூபத்தை, உகக்கில், (அவ்வுகப்புக்கும் தான் விஷயமானவனாய்), எவ்விதத்திலும், விஸ்வஸிக்கும்படியானசெயலைச், செய்யாத, அஸுரரைத், திருவாழியினால், (௧௦) துண்டுதுண்டாக, ஆக்கினவனான ஸர்வேஸ்வரன்பக்கல், (தன்னதல்லாததையாவது) ஏதேனுமொன்றைக், கொடுத்துக், கிட்டாதப்ரகாரம், (௧௫) ஏதோ? (௧௬) ௩௩.

வ்யா.—அவ.—முப்பத்துமூன்றாம்பாட்டில், (யாதானும்) அறிவுடைத்தாகிலவனைப்பற்றவேண்டாவோ? வென்கிறது.

(யாதானுமொன்றறியில்) ஏதேனுமொருபதார்த்தத்தையறியில். (௧) †"ஒண்டாமரையாள் கேள்வனொருவனையே நோக்குமுணர்வு" என்னும்படியே, ஏதேனுமொன்றினுடைய ஜ்ஞாநத்துக்குமவனைமுன்னிட்டறிய வேண்டுகையாலே அவனையறிந்ததாய்விடும். (தன்னுகக்கில்) ஒன்றையறியாவிட்டாலும் தன்னையுகக்கவேணுமே; தன்னை யுகக்கையாவது - அவனை யுகந்ததாய்விடும்; † அவனுகப்பொழியத் தனக்கொரு நன்மையில்லாமையாலே. (என்கொலோவித்யாதி) அவனதையவனுக்குக் கொடுத்தேயாகிலும் அவனைக்கிட்டவேண்டாவோ? †"நேர்ந்து" என்பானென்னென்னில்; ப்ராந்திதசையிலேகண்டதெல்லாம் "எனக்கு" என்னுமத்தனை, ஸ்வதந்த்ரனாகவுமிறே நினைத்திருப்பதும், இத்தையெல்லா மழிக்கிறானகையாலே "நேர்ந்து" என்னலாமிறே. (௨) † "தோள்களையார" என்று தொட

(௧) முதல் திருவந்தாதி - ௬௭. (௨) திருவாய். அ - ௧ - ௧௦.

ங்கி (௧) "கண்களாயிரத்தாய்" என்று உபகாரஸ்ம்ருதியாலே இவரவனுடைமையை "தம்மது" என்றுகொடுக்க, அவனும் தன்ன தல்லாதது பெற்ருற்போலே விஸ்த்ருதனானிறே, ஆகையாலத்தலைக்கு †அவத்யத்தை விளைத்தேயாகிலும் கிட்டவேண்டாவோ? (யாதானுமித்யாதி) தன்விரோதியைத் தான்போக்கிக்கொள்ளத்தானுங் கையிலே திருவாழியைப்பிடித்தானே? (யாதானுமித்யாதி) அஸுர வர்க்கத்திலே ஒருத்தன் அநுகூலிக்குமாகிலும் † அவ்வர்க்கமாக நோக்கும். இவனுக்கொருபடியும் விஶ்வஸிக்கப்போகாதபடி செய்த அஸுரர்களைத்திருவாழியாலே துணித்தாற்போலே தன்விரோதியைப்போக்கினவன்பக்கலி லெல்லாம் நேர்ந்தாகிலும் கிட்டவேண்டாவோ? அசக்தனுக்கு ஸர்வசக்தியைப் பற்றவேணும், ஆகையாலவனையே பற்றவேணும். ௩௩.

அ௩.—முப்பத்துமூன்றும்பாட்டு - "யாதானுமொன்றறியில்" - "ஜ்ஞேயம் இதம்" என்று புரோநிட்ட பதார்த்தங்களிலே ஒன்றையறியும்போதும் ஸர்வசப்தவாச்யனவனாகையாலே இத்தையறிகிற ஜ்ஞாநம் அவனளவும்போமென்றபடி. இவற்றையறிகிறஜ்ஞாநம் அவனளவும்போகிறபடி எப்படியென்ன அருளிச்செய்கிறார் (ஒண்டாமரையாள்) இத்யாதி. தன்னையுகந்தால் அவனை யுகந்ததாம்படி எப்படியென்ன அருளிச்செய்கிறார் (அவனுகப்பொழிய) இத்யாதி. நேர்கை - கொடுக்கை. அவனதை அவனுக்காக்கினல் நேர்ந்தென்று கனக்கச்சொல்லுவானென்னென்ன என்று சங்காபிப்ராயம். அவனதைத் தன்னதாக்கிக்கொடுத்தவிடமுண்டோவென்ன அருளிச்செய்கிறார் (தோள்களை) இத்யாதி. (அவத்யம்) - அவன்தன்னாத்மாவைத் தன்னதாக்கிக்கொடுக்கை. ப்ராந்திதசையிலே அவத்யத்தைவிளைத்துக் கொடுக்கவேணுமென்றபடி. [ஒன்றையறியவே தன்னையறியப்படுமவனாய், ஒன்றையுகக்கவே தன்னை யுகக்கப்படுமவனாய், விரோதிநிரஸநத்தைப்பண்ணுவானுமாயிருக்கிறவன்பக்கலிலே யாதானும் நேர்ந்தணுகாவாறு என்சொலோ] என்றந்வயம். ௩௩.

பாலாழி நீ கிடக்கும் பண்பை, யாம்கேட்டேயும்
காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்,—நீலாழிச்
சோதியா யாதியாய் தொல்வினையெம்பால் கடியும்,
நீதியாய் நிற்சார்ந்து நின்று. ௩௪.

அ௩.—நீல், ஆழி, சோதியாய், ஆதியாய், எம்பால், (௫) தொல், வினை, கடியும், நீதியாய், நின், (௧௦) சார்ந்துநின்று, பால்ஆழி, நீ, கிடக்கும், பண்பை, (௧௫) யாம், கேட்டேயும், கால், ஆழும், நெஞ்சு, (௨௦) அழியும், கண், சுழலும். (௨௩)

(௧) திருவாய்மொழி - அ - ௧ - ௧௦.

அர்.—கறுத்த, கடல்போன்ற, தேஜஸ்ஸையுடையவனே! (ஜகத்) காரணபூதனே! எம்மிடத்தில், (௫) அநாதியாயுள்ள, பாபத்தைப், போக்குகையை, ஸ்வபாவமாக உடையவனே! உன்னைப், (௧௦) பற்றிநின்று, திருப்பாற்கடலில், நீ, சயநித்த, அழகை, (௧௫) நாம், கேட்கும்போதே, கால், (மேலெழாமல்) அழுந்தும்; நெஞ்சு, (௨௦) சிதிலமாகும், கண், ப்ரமிக்கும். (௨௩) ௩௪.

வ்யா.—அவ.—முப்பத்துநாலாம்பாட்டில், (பாலாழி) ஏதேனும் நேர்ந்தாகிலும் அவனையே பற்றவேணுமென்றார்; †ஆகிலவனைக் கிட்டவொண்ணா தென்கிறார்.

(நீலாழிச்சோதியாய் பாலாழிநீகிடக்கும்) ஒருவெள்ளைக்கடலிலே யொரு கருங்கடல் சாய்ந்தாற்போலே யிருக்கிறபடி. (நீ கிடக்கும்) (க) "கிடந்ததோர் கிடக்கை" என்னும்படியே. (பண்பை யாம் கேட்டேயும்) அழகைக் கேட்டும். ஶ்ரவணமாத்ரத்திலே இப்படி அழிகிறவர், ஸாக்ஷாத்கரித்தாலென்படுகிறாரோ? (காலாழுமித்யாதி) †வடிவழகேயாய் ப்ராப்தியின்றிக்கே யிருக்கிறதோ? இதுக்குக் காரணமானவனே! (தொல்வினை யித்யாதி) †உபகாரகனுமானவனே! என்னுடைய விரோதியை என் பக்கலில் நின்றும் போக்குகையே ஸ்வபாவமாக வுடையவனே! (நிற்சார்ந்து நின்று) உன்னைப்பற்றி நின்று, பாலாழிநீ கிடக்கும்பண்பை யாங் கேட்டேயும் காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும். ௩௪.

அரு.—முப்பத்துநாலாம்பாட்டு. (ஆகில்) கிட்டவேணுமாகில். மூலத்திலே அர்த்தமாக்கி அருளிச்செய்கிறார் (வடிவழகேயாய்) இத்யாதி. விரோதியைப்போக்குகை - உபகாரம். ௩௪.

நின்று மிருந்தும் கிடந்தும் திரிதந்தும்,
ஒன்று மோவாற்றா னென் னெஞ்சகலான்,—அன்றங்கை
வன்புடையால் பொன்பெயரோன் வாய்தகர்த்து மார்விடந்தான்,
அன்புடைய னன்றே யவன். ௩௫.

அந்.—நின்றும், இருந்தும், கிடந்தும், திரிதந்தும், ஒன்றும், (௫) ஆற்றான், என், நெஞ்சு, அகலான், அன்று, (௧௦) அம், கை, வன், புடையால், பொன்பெயரோன், வாய், (௧௫) தகர்த்து, மார்வு, இடந்தான், அவனன்றே, அன்புடையன். (௨௦) ஓ - (௨௧)

அர்.—(அவதாரங்களில் ஆஶ்ரிதர்க்காக) (எழுந்து) நின்றும், வீற்றிருந்தும், சயநித்தும், உலாவியும், (இவ்வளவுசெய்தும் ஒன்றும் செய்யாதவனைப்

போல்), ஒருபடியாலும், (டு) தரிக்கமாட்டுகிறிலன். என்னுடைய, நெஞ்சை (விட்டுப்) பிரியான். ப்ரஹ்லாதனர்த்தித்தகாலத்தில், (கo) அழகிய, கையி னல், உரத்த, அடியினல், ஹிரண்யனுடைய, (நிந்தித்த) வாயை, (கடு) நெரி த்து, மார்பைப், பிளந்தான். அவனன்றே? (நம்மக்கல்) ஸ்நேஹமுள்ள வன். (உo) ஆஸ்சர்யம். (உக) ௩௫,

வ்யா.—அவ —முப்பத்தைந்தாம் பாட்டில், (நின்றும்) இவன் செவிதாழ்த்தால் அவன் படும்படி சொல்லுகிறது.

(நின்று மித்யாதி) உகந்தருளின தேசங்களிலே நிற்கிறது மிருக் கிறதும் கண்வளர்ந்தருளுகிறது முலாவுகிறது மெல்லாம் என்னைப் பெறுகைக்காக. (ஒன்றுமோவாற்றான்) எல்லாஞ் செய்துமொன் றும் செய்யாதானுயிருக்கும். "ஓ" என்று ஆஸ்சர்யத்திலே அசைச்சொல்லாய் கிடக்கவுமாம். (என்னெஞ்சகலான்) என்னெஞ் சுக்குப் புறம்பு காட்டுத் தீயோடொக்கும். (அன்றித்யாதி) பிராட்டி பக்கல் பரிமாறும்போது கூசிப் பரிமாறவேண்டும்படியான கையைக் கொண்டு, முரட்டு ஹிரண்யனுடைய, பண்ணின ப்ரதிஜ்ஞையை "இல்லை" என்றவாயை நெரித்து அவன் மார்பைக் கீண்டவனன் புடையனன்றே? பிதா பகையாக அவனிலண்ணிய உறவாய் வந்து தவினவன் அவனே? அன்புடையான்; அயோக்யனென்றகலுகிற நாமோ? அன்புடையோம். ௩௫.

அரு.—முப்பத்தைந்தாம்பாட்டு. "அங்கைவன்புடையால்" - புடை யென்று - வழியாய், வலியஸாதநமான் அழகியகையாலே என்றபடி. ௩௫.

அவனு மிவனு முவனும், மற்றும்ப
ரவனு மவனென்றிராதே,—அவனும்
அவனேயெனத் தெளிந்து கண்ணனுக்கே தீர்ந்தால்,
அவனே யெவனேனுமாம். ௩௬.

அந்.—அவன், அவன்ஆம், இவன்ஆம், உவன்ஆம், மற்று, (டு) உம்பர வனும், என்று இராதே, அவனே, அவனும், என, (சo) தெளிந்து, கண்ண னுக்கே, தீர்ந்தால், அவனே, எவனேனும் (கடு) ஆம். (கசு)

அர்.—அந்த ஸர்வேஸ்வரன், துர்லபனுவான்; ஸுலபனுவான்; மத் ய்ஸ்த்தனுவான்; அதற்குமேல், (டு) பரமபதநாதனுவான்; என்று ஸம்சயி யாமல், அவனே, ஆஸ்ரிதஸுலபனுவான், என்று, (கo) நிஸ்சயித்து, கண்ண னுக்கே, பரதந்த்ரனுனல், அந்த கண்ணனே, (ஆஸ்ரிதன்) எவனுகிலும், (கடு) (அவனுக்கு) ரக்ஷகனுவான். (கசு ௩௬.

வ்யா.—அவ.—முப்பத்தாறும் பாட்டில், (அவனும்) அவனிப் படியிருக்க அவன் பக்கலிலே ஸம்சயத்தைப் ப்ரவேசிப்பித்துக் கைவாங்குகை கார்யமன்றென்கிறது.

(அவனித்யாதி) † துர்லபனுயிருக்கும், † ஸுலபனு யிருக்கும்;— † அப்படியே யிருக்கும், இப்படியே யிருக்கும், அதுக்கு மேலாயிருக்கும் என்று ஸம்சயித்துக் கைவிடப்பாராதே. (அவனித்யாதி) (க) "ஆத்மாநம்நாதிவர்த்தேதா:-ஆத்மாநம்நாதிவர்த்தேதா:" என்னும்படியே † பாரதந்த்ர்யமே அவனுக்கு ஸ்வரூபமென்று தெளிந்து ஸுலபனான க்ருஷ்ணனுக்கேயற்றால். (அவனே யவனேனுமாம்) (உ) "யஸ்யமந்த்ரீச கோப்தாச ஸுஹ்ருச்சைவ ஜநார்தந:-யஸ்யமந்த்ரீச கோப்தாசஸுஹ்ருச்சைவ ஜநார்தந:" என்னும்படியே இவனுக்கெல்லாப்படியும் ரக்ஷகனும். ௩௬.

அரு.—முப்பத்தாறும் பாட்டு. (துர்லபன்) - திருப்பாற்கடல் நாயகன். (ஸுலபன்) - அர்ச்சாவதாரம். இவற்றைவிவரிக்கிறார். (அப்படியேயிருக்கும்) இத்யாதி. "உம்பர்" - மேலாய், பரமபதநாதன். "அவனுமவனே" - அவனே அவனுமென்றாய், அவனுக்காஸ்ரிதபாரதந்த்ர்யமேவடிவு என்றபடி. ௩௬.

ஆமாறறிவுடையா ராவதரிதன்றே,
நாமேயதுவுடையோம் நன்னெஞ்சே,—பூமேய்
மதுகரமே தண்டுழாய் மாலாரை, வாழ்த்தா
மதுகரமே யன்பாலமை. ௩௭.

அந்.— நல், நெஞ்சே, ஆறுஆம், அறிவு உடையாராவது, அரிதன்றே, (ரு) நாமே, அது, உடையோம், பூ, மேய், (க0) மதுகரம், மே, தண், துழாய், மாலாரை, (கரு) அன்பால், வாழ்த்துஆம், அது, கரம், அமை. (உ0)

அர்.—அநுகூலமான, மநஸ்ஸே! வழியான (யுக்தமான), புத்தியை யுடையராவது, வருத்தமன்றோ? (ரு) நாமே, அந்த புத்தியை, உடையரானோம். பூவிலே, சேர்ந்த, (க0) வண்டுகள், பொருந்திய, குளிர்ந்த, திருத்துழாயின், மாலையையுடைய ஸர்வேஸ்வரனை, (கரு) ப்ரீதியினால், மங்களாசாஸநம்பண்ணுகையாகிற, அதிலே, த்ருடமாகப், பொருந்து. (உ0) ௩௭.

வ்யா.—அவ.—முப்பத்தேழாம் பாட்டில், இப்படி யிருக்கை புறம்புள்ளார்க்கரிது, தமக்குண்டாயிற் றென்கிறார்.

(க) (உ) பாரதம் - ஆரண்ய - ௪௬ - உ0.

(ஆமாறித்யாதி) † வழியான வறிவுடையாராவதரிதன்றே? யுக்தமான வறிவுடையாராகை கிடையாது. (நாமே யதுவுடையோம்) நாம் நல்லவறிவுடையோம். (நல்நெஞ்சே) எல்லாத்துக்குமொரு மிடறுகையிறே இது ஸித்தித்தது. (க) "மநஏவ – மநுஷ்யாணாம்" இத்யாதியாலேபந்தமோக்ஷங்களிரண்டுக்குமடி இதிறே. (பூமேயித்யாதி) பூவிலே பொருந்தும் வண்டுமேவின திருத்துழாய்மாலையை யுடைய ஸர்வேஸ்வரனை அன்பாலே வாழ்த்தாகிறவத்தை † த்ருடமாக அமை.

அ௩.—முப்பத்தேழாம்பாட்டு. "ஆமாறு"-ஆறு வழியாய், (வழியான வறிவு). (ஒருமிடறு)-சாடு. "மே"-மேவி. வாழ்த்தாமது "கரம்" - (ஓ௫) கரமாய், (த்ருடமாக). "அமை" - சமைவாய், பொருந்தென்றபடி. ௩எ.

அமைக்கும் பொழுதுண்டே யாராயில் நெஞ்சே,
இமைக்கும் பொழுது மிடைச்சி—குமைத்திறங்கள்,
ஏசியே யாயினு மீன்துழாய் மாயனையே,
பேசியே போக்காய் பிழை. (௩அ)

அந்.—நெஞ்சே, ஆராயில், இமைக்கும்பொழுதும், அமைக்கும்பொழுது, (ரு) உண்டே, இடைச்சி, குமை, திறங்கள், ஏசியேயாயினும், (க0) ஈன், துழாய், மாயனையே, பேசி, பிழை, (கரு) போக்காய். (கரு)

அர்.—ஓமநஸ்ஸே! விசாரிக்கப்புகில், நொடிப்பொழுதாகிலும், ஆறியிருக்கைக்கவகாசம், (ரு) உண்டோ? இடைச்சியான யசோதை, நலிந்த, ப்ரகாரங்களை(ச்சொல்லி)ப், பழித்தாகிலும், (க0) போக்யமான, திருத்துழாயையுடைய, ஆஸ்சர்யபூதனையே, அநுஸந்தித்து, தோஷத்தைப், (கரு) போக்கிக்கொள்ளாய். (கரு) ௩அ.

வ்யா.—அவ.— முப்பத்தெட்டாம்பாட்டில், (அமைக்கும்) தாம் வாழ்த்தச் சொல்ல நெஞ்சிருய்க்க, அத்தைத் "தப்பச்செய்தோம்" என்கிறார்.

(அமைக்குமித்யாதி) நெஞ்சே! ஒரு ஆபாதப்ரதீதியன்றிக்கே உள்ளே யாராயப்புக்கால். (இமைக்கும்பொழுதும்) ஒரு க்ஷணமாத்ரமு மாறியிருக்கப்போதுண்டோ? (இடைச்சி இத்யாதி) பரமபதத்திலே சென்று ஸாக்ஷாத்கரித்தார்க்கன்றோ? விச்சேதமின்றிக்கே யநுபவிக்கலாவதென்னில், அதுவேண்டா, தன்னை இதரஸஜாதியனுக்கி ஸுலபனுக்க "என் மகன்" என்று எடுத்ததேகுடி

(க) ஸ்ரீவிஷ்ணுபுரா. ௬ - எ - உஅ.

யாக, தாயார் குழைக்கும் திறங்களை, ஏசியேயாயினும் பேசிப் போக்குகிறிலை. (பிழை) தப்பு. ஈன்துழாய் மாயனையே பேசிப் பிழையைப் போக்கா யென்னவுமாம். ஸ்நேஹித்துச் செய்தவற்றை ஸ்நேஹமில்லாத நாம்பேசினால் அவனுக்கேச்சாகாதோவென்னில், ஏச்சாகிலும் அவனைப்பேசாதே யிருக்கிறவிடம் தப்பு. ௩௮.

அரு.—முப்பத்தெட்டாம்பாட்டு. [நெஞ்சேஆராயில் இமைக்கும்பொழுதும் அமைக்கும்பொழுதுண்டே] ஏசுகை-ஸ்நேஹமின்றிக்கே சொல்லுகை.

பிழைக்க முயன்றோமோ நெஞ்சமே பேசாய்,
தழைக்குந் துழாய் மார்வன்றன்னை,—அழைத்தொருகால்
போயுபகாரம் பொலியக்கொள்ளாது, அவன் புகழே
வாயுபகாரங் கொண்டவாய்ப்பு. ௩௯.

அர்.—தழைக்கும், துழாய், மார்வன் தன்னை, அழைத்து, ஒருகால், (௫) போய், பொலிய, உபகாரம், கொள்ளாது, அவன் புகழே, (௧௦) வாய், உபகாரம்கொண்ட, வாய்ப்பு, நெஞ்சமே, பிழைக்க, (௧௫) முயன்றோமோ, பேசாய். (௧௭)

அர்.—தளிர்விடுகிற, திருத்துழாயைத், திருமார்பிலேயுடையவனைக், கூப்பிட்டு (அநுஸந்தித்து), ஒருகாலத்தில், (௫) (பரமபதத்திற்குப்) போய், மிக்க, உபகாரத்தை, ஸ்வீகரியாமல் (அநுபவத்தையாசைப்படாமல்), அவனுடைய குணங்களையே, (௧௦) வாய்க்கு, நன்மையாக அங்கீகரித்த, நேர்பாடு, ஓமநஸ்ஸே! தப்பாகச், (௧௫) செய்தோமோ? சொல். (௧௭) ௩௯.

வ்யா.—அவ.—முப்பத்தொன்பதாம்பாட்டில், (பிழைக்க) பேசவென்று புக்கவாறே போக்யமுமாய் நெஞ்சுக்குப் பொருந்தினவாறே "நாம் பார்த்தவிடம் † தப்பச் செய்தோமோ? நெஞ்சே!" என்கிறார்.

(தழைக்குமித்யாதி) ஒரு வாடல்மாலையையிட்டாலும் தழைக்கும் துழாய் மார்வையுடையவனை யழைத்து, அவன் கிட்டக்கொண்டு, பரமபதத்திலே † வந்து, "அஸங்குசிதமான போகத்தை † புஜிப்பிக்கிறேன்" என்னாதே, வாய்க்குபகாரமாகக்கொண்ட விந்த வாய்ப்புத் தப்பமுயன்றோமோ? சொல்லா யென்கிறார். † ஜ்ஞாநமுண்டாயிருக்க சரீரஸமநந்தரத்திலேயிறே கைங்கர்யம்பண்ணுகையாவது - பகவத்விஷயத்தில் ருசியில்லாமையிறே. ௩௯.

அரு.—முப்பத்தொன்பதாம்பாட்டு. (தப்பச்செய்தோமோ) - தப்பச் செய்யவில்லையே, நன்றாகச்செய்தோம் நெஞ்சே என்கிறார். (வந்து) - பரம

பதத்திலே போயென்றபடி. நெஞ்சே உன்னை (புஜிப்பிக்கிறேனென்னாதே). பரமபதத்துக் கைங்கர்யமிங்கேகூடுமோவென்ன அருளிச்செய்கிறார்(ஜ்ஞாநமுண்டாயிருக்க) இத்யாதி. ௩௯.

வாய்ப்போ விதுவொப்ப மற்றில்லை வாநெஞ்சே,
போய்ப்போய் வெந்நரகில் பூவியேல்,—தீப்பால
பேய்த்தா யுயிர்களாய்ப் பாலுண்டு, அவளுயிரை
மாய்த்தானை வாழ்த்தே வலி. ௪௰.

அந்.—வா நெஞ்சே, இதுஒப்ப, வாய்ப்பு, மற்று, இல்லை, (௫) போய்ப்போய், வெம், நரகில், பூவியேல், தீப்பால, (௧௰) தாய், பேய், உயிர், பால், களாய், (௧௫) உண்டு, அவள், உயிரை, மாய்த்தானை, வாழ்த்தே, (௨௰) வலி, (௨௧)

அர்.—வாராய் ! ஓமநஸ்ஸே ! இத்தோடொத்த, நன்மை, வேறு, கிடையாது. (௫) மிகவுமகன்று, க்ரூரமான, விஶ்லேஷதுஃகத்தில், (என்னை) ப்ரவேசிப்பியாதேகொள். கொடிய ஸ்வபாவத்தையுடையளாய், (௧௰) தாய்வேஷங்கொண்ட, பேயானபூதனையின், ப்ராணனைப், பாலோடே, கலந்து, (௧௫) உண்டு, அவளுடைய, ப்ராணனை, முடித்தவனை, மங்களாசாஸநம்செய்கையிலே, (௨௰) துணி. ௪௰.

வ்யா.—அவ. —நாற்பதாம்பாட்டில், (வாய்ப்பித்யாதி) இத்தோடொக்கும் நேர்பாடு மற்றில்லை நெஞ்சே ! (போயித்யாதி) "அயோக்யன்" என்று அகலுகையாகிற கொடிய நரகத்திற் புகுவியாதே கொள். (௧) † "निरयो या त्वया विना - நிரயோயஸ்த்வயாவிநா" (பேய்த்தாய் இத்யாதி) பெற்றதாய்வேஷத்தைக்கொண்டுவந்தபேயினுடைய உயிரைப் பாலோடே கலசியுண்டு அவளுயிரை முடித்தவனை வாழ்த்துகை நமக்குமிடுக்கு. வாழ்த்துகையிலே துணியென்றுமாம். ௪௰.

அரு.—நாற்பதாம்பாட்டு. அகலுகை நரகமோவென்ன அருளிச்செய்கிறார். (நிரயோயஸ்த்வயாவிநா) என்று. "தீப்பால பேய்த்தாய்" பொல்லாதஸ்வபாவத்தையுடைய பேய்ச்சி. உயிர் - களாய் - கலசி. ௪௰.

வலியமென நினைந்து வந்தெதிர்ந்த மல்லர்,
வலிய முடியிடிய வாங்கி,—வலிய நின்
பொன்னாழிக் கையால் புடைத்திடுதி கீளாதே,
பன்னாளும் நிற்கு மிப்பார். ௪௧.

அந்.—வலியம், எனநினைந்து, வந்து, எதிர்ந்த, மல்லர், (௫) வலியமுடி, இடிய, வாங்கி, பொன், ஆழி, (௧௰) நின், வலிய, கையால், கீளாதே, புடைத்திடுதி, (௧௫) பல்நாளும், இ, பார், நிற்கும். (௧௯)

---

(௧) ஸ்ரீராமா - அயோ - ௩௰ - ௧௮.

அர்.—(நாம்) பலமுடையோம், என்றெண்ணி, (யுத்தத்திலே) வந்து, மேலிட்ட, மல்லருடைய, (ரு) வலிவையுடைய தலையை, இடிந்து விழும்படி, பறித்து, அழகிய, திருவாழியையுடைத்தான், (கo) உன்னுடைய, வலியை யுடைய, திருக்கையினால், கிழித்துப் பொகடாமல், அடித்துவிட்டாய். (கரு) (ஆகையினால்தான்) அநேக காலம், இந்த, பூமி, நிலைபெற்றது. (கக). சக.

வ்யா.—அவ.—நாற்பத்தோராம்பாட்டில், (வலியமென) பூதநா ப்ரஸங்கத்தாலே மல்லரை நிரஸித்தபடி சொல்லுகிறது.

(வலியமித்யாதி) வெல்வோமென்றுநினைத்து வந்தெதிர்த்த மல் லருடைய திண்ணியதான முடியை வாங்கி, மிடுக்கை யுடைத்தான திருவாழியைப் பிடித்தகையாலே கேசியைப்போலே வாயைக்கிழி யாதே மல்லுக் கிடாகப் புடைத்திடுதி. (பல்நாளும் நிற்குமிப்பார்) தனியே முறட்டு மல்லரை வென்ற வெற்றிக்கு என்றும் ஸாக்ஷி பூமியிறே. அம்மல்லரை ஜயித்த ஜயத்தாலேயிறே பூமி நிலை நின்ற தென்றுமாம். (கீளாதே பல்நாளும் நிற்குமிப்பார்) ஸுகுமார மான திருவடிகளைக்கொண்டு முரட்டு மல்லரோடே பொருகிறபடி கண்டால் இப்பூமியில் சேதநர் முடியவேண்டாவோ? அதுகண்டு ஸஹித்திருந்த இவர்களுக்கு நூறேபிராயம். (க) "న సమం యుద్ధమి త్యాహుః-நஸமம்யுத்தமித்யாஹு:" என்றமாத்ரமும் சொல்லாத இவர்களுக்கு ஒருநாளு மழிவில்லை யென்றுமாம். சக.

அரு.—நாற்பத்தோராம்பாட்டு. "முடியிடிய"-முடியிடியும்படி, புடைத்திடுதி. "இப்பார்" - பாரிலுள்ளார். "நிற்கும்" - ஸாக்ஷிநிற்குமென்னுதல், ஸத்தைநிற்குமென்னுதல், ஈடுபட்டழியாதேநிற்குமென்னுதல். சக.

பாருண்டான் பாருமிழ்ந்தான் பாரிடந்தான் பாரளந்தான்,
பாரிடமுன் படைத்தானென்பரால்,—பாரிட
மாவானும்தானானா லாரிடமே, மற்றொருவர்க்
காவான் புகாவா லவை. சஉ.

அந்.—பார், உண்டான், பார், உமிழ்ந்தான், பார், (ரு) இடந்தான், பார், அளந்தான், பார், இடம், (கo) முன், படைத்தான், என்பர், பார்இடம், ஆவா னும், (கரு) தான், ஆனால், இடம், ஆர், அவை, (உo) மற்றுஒருவர்க்கு, ஆவான் புகா. (உஉ)

அர்.—(ஸர்வேஸ்வரன்) பூமியை, விழுங்கினான், பூமியை, வெளிப்படுத் தினான், பூமியைக், (ரு) குத்தியெடுத்தான்; பூமியை, அளந்தான், பூமியோடு

(க) ஸ்ரீராமா - யுத்த - கoரு - கூ.

கூடிய, ஜகத்தை, (௧௦) ஆதியில், ஸ்ருஷ்டித்தான், என்று (ப்ராமாணிகர்) சொல்லுவர்கள். (ஜகத்ஸ்ருஷ்டிஸ்த்திஸம்ஹாரகாரகனுகையால்) பூமியோடு கூடிய, ஜகத்தாகச், சொல்லப்படுகிறவனும், (௧௫) தானேயாகிறான். இப்படியாகில், (அவற்றுக்கு) ஆதாரபூதர், (வேறு) யாராவார். அவை (௨௦) வேறொருவர்க்கும், சேஷமாக ஆகமாட்டா. (௨௨) ௪௨.

வ்யா.—அவ. — நாற்பத்திரண்டாம்பாட்டில், (பாருண்டான்) "ஸர்வேஶ்வரனே ஆஶ்ரயமாகவேண்டாவோ? என்கிறது.

(பாருண்டானித்யாதி) ப்ரளயம்வருகிறதென்று தன்வயிற்றிலேவைத்து ரக்ஷித்தும், வெளிநாடுகாண உமிழ்ந்தும், அண்டபித்தியில்நின்றும் பூமியை வராஹரூபியாய் ஒட்டுவிடுவித்தும், மஹாபலியபஹரிக்க எல்லைநடந்தும், கரணகளேபரவிதுரமாய் போகமோக்ஷ சூந்யமான இவற்றை ஸ்ருஷ்டித்தும், இப்படி யானைத்தொழில்கள் செய்வானென்று நிர்த்தோஷப்ரமாணமும், ப்ரமாணத்தை அங்கீகரித்த ருஷிகளும் சொல்லுகையாலே - ஜகத்தாகிறான் ஈஶ்வரன். †ரக்ஷ்யரக்ஷகபாவாதிஸம்பந்தங்களாலே ஐக்யம்; ஸ்வரூபதஃ அன்று. (க) "సర్వంఖల్విదంబ్రహ్మ - ஸர்வம் கல்விதம்ப்ரஹ்ம" என்று ப்ரபஞ்சத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் ஐக்யத்தைச்சொல்லி (க) "తజ్జలానితి - தஜ்ஜலாநிதி" என்று ஹேதுசொன்னாற்போலே. (ஆனலாரிடமே) இப்படியான விஜ்ஜகத்துக்கு ஆஶ்ரயமாவாரார்? (மற்றொருவர்க்காவான்புகாவாலவை) ஜகத்திலிச்சேதநர் வேறொருவனுக்கு சேஷமாவான் புகா. உண்டுமிழ்ந்தென்கிறதொழில்கள் வேறொரு வ்யக்திக்காகாவென்றுமாம். ௪௨.

அரு.—நாற்பத்திரண்டாம்பாட்டு. "பாரிடமாவான்" என்று ஸ்வரூபைக்யஞ்சொல்லுகிறதோவென்ன அருளிச்செய்கிறார் (ரக்ஷ்யரக்ஷகபாவ) இத்யாதி. "அவை" - சேதநராதல், கீழ்ச்சொன்ன வ்யாபாரமாதல். ஆவான் புகா. ஆல் - அசை. ௪௨.

அவயமென நினைந்து வந்த சுரர் பாலே,
நவையை நளிர்விப்பான்றன்னைக்,—கவையில்
மனத்துயர வைத்திருந்து வாழ்த்தாதார்க் குண்டோ,
மனத்துயரை மாய்க்கும் வகை. ௪௩.

(க) சாந்தோக்யம் - ௩ - ௧௪.

அந்.—அவயம், என, நினைந்து, வந்த, சுரர்பால், (ரு) நவையை, நளிர்விப்பான்தன்னை, கவை, இல், மனத்து, (கo) உயரவைத்து, இருந்து, வாழ்த்தாதார்க்கு, மனத்துயரை, மாய்க்கும்வகை, (கரு) உண்டோ. (கசு)

அர்.—அபயப்ரதாநம்பண்ணவேணும், என்று, மநோரதித்து, வந்த, தேவதைகள்பக்கலுள்ள, (ரு) துக்கத்தை, நடுங்கப்பண்ணினவனை, ஸம்சயம், அற்றிருக்கிற, மநஸ்ஸில், (கo) உத்துங்கமாகஸ்த்தாபித்து, ஸ்த்திரமாயிருந்து, மங்களாசாஸநம்பண்ணுதவர்களுக்கு, மநோதுக்கத்தைப், போக்கும்வழி, (கரு) உண்டோ? (கசு.)

வ்யா.—அவ.—நாற்பத்துமூன்றும்பாட்டில், (அவயம்) ப்ரபல ப்ரதிபந்தகங்களைப் போக்குமவனைப் பற்றுதார்க்கு வரும் மநோ துக்கங்களைப் போக்கவொண்ணுது.

(அவயமித்யாதி) (க) “ పరావరేశం శరణమ్ - பராவரேசம்சரணம்” என்னும்படி “அபயம்” என்று நினைத்துவந்த தேவதைகளை அந்த துக்கத்தை நடுங்கப்பண்ணிப்போக்குமவன் தன்னை. நவையென்று துக்கஹேதுவான குற்றமாகவுமாம். (கவையித்யாதி) இவ் விஷயங்களைப்பற்றுவோமோ? ஈஶ்வரனைப்பற்றுவோமோ? அயோக்யரென்றகலுவோமோ? அகலாதொழிவோமோ? என்று இரண்டுமின்றிக்கேயிருக்கிற மநஸ்ஸிலே இவனை உயரவைத்து மங்களாசாஸநம்பண்ணுதார்க்குமுண்டோ மனத்துயர்மாய்க்கும்ப்ரகாரம். சங.

அந.—நாற்பத்துமூன்றும்பாட்டு. “நவை” - துக்கமாதல், பாபமாதல்.

வகைசேர்ந்த நன்னெஞ்சும் நாவுடைய வாயும்,
மிக வாய்ந்து வீழா வெனிலும்,—மிகவாய்ந்து
மாலைத்தாம் வாழ்த்தா திருப்ப ரிதுவன்றே,
மேலைத்தாம் செய்யும் வினை. சச.

அந்.—வகை, சேர்ந்த, நல், நெஞ்சும், நாஉடைய, (ரு) வாயும், மிக, வாய்ந்து, வீழாவெனிலும், மிக, (கo) வாய்ந்து, மாலை, தாம், வாழ்த்தாதிருப்பர், இதுவன்றே, (கரு) மேலை, தாம், செய்யும், வினை. (கக)

அர்.—(ஜ்ஞாநோதயத்துக்கு) உபாயமாகச்,சேர்ந்த, விதேயமான, மநஸ்ஸும், நாக்கையுடைய, (ரு) வாயும், மிகவும், ப்ரவணமாய், (இவன்பக்கல்) அடையாவிடிலும், மிகவருந்தி, (கo) கிட்டி, (இந்த்ரியங்களை அவனிடத்தில் வைத்து) ஸர்வேஶ்வரனைத், தாங்கள், மங்களாசாஸநம்பண்ணுதிருப்பர்கள். இதுவன்றே! (கரு) மேலுள்ளகாலமெல்லாம்,தாங்கள், செய்யும், பாயம்.(கக)

(க)

வ்யா.—நாற்பத்துநாலாம்பாட்டில், (வகை) இதுக்கு, பட்டரொருபடியும் பிள்ளை திருநறையூரரைய ரொருபடியு மருளிச்செய்வர். (வகைசேர்ந்தநல்நெஞ்சும்) சரீரபரிக்ரஹம்பண்ணின ஆத்மாவுக்கு ஜ்ஞாநப்ரஸரத்துக்காகச்சேர்ந்தநெஞ்சும். (நாவுடையவாயும்) ஸர்வேஶ்வரனை ஸ்துதிக்கக்கண்டவாயும். (மிகவாய்ந்துவீழாவெனிலும்) குணத்ரயவஶ்யராகையாலே ரஜஸ்தமஸ்ஸுக்கள் வர்த்தித்தபோது இவன்பக்கல் வந்தனவில்லையாகிலும். (மிகவித்யாதி) (க) "ஸத்த்வாத்ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் - ஸத்வாத்ஸஞ்ஜாயதேஜ்ஞாநம்" என்று ஸத்வகார்யமானஜ்ஞாநத்தாலே ரஜஸ்தமஸ்ஸுக்களைத்தள்ளி ஸர்வேஶ்வரனைவாழ்த்தாதேயிருப்பர்கள். (இதுவித்யாதி) இதுவன்றே † ஸம்ஸாரம் நித்யமாக இவர்கள் பண்ணினபாபம்.

† ஈஶ்வரனுடையகுணங்களிலேசேர்ந்தநெஞ்சும், குணமொன்றையுமே ஏத்தும்வாயும் † அல்லாதகுணங்களிலு முள்புக்கதில்லையாகிலும் எல்லாகுணங்களிலு முள்புகும்படி யாராய்ந்து ஸர்வேஶ்வரனை யேத்தாதிருப்பர்கள், இதுவன்றே பண்ணினபாபத்தினுடைய பலம் என்று பிள்ளை திருநறையூரரையர்நிர்வாஹம். ௪௪.

அரு.—நாற்பத்துநாலாம்பாட்டு. "மேலை"-மேலைக்கு; (ஸம்ஸாரம் நித்யமாக). அரையர்நிர்வாஹம் (ஈஶ்வரனுடைய) இத்யாதி. மேலை - பண்டு. "வினை" - பாபமாதல், பாபபலமாதல். ௪௪.

வினையார் தரமுயலும் வெம்மையை யஞ்சித்,
தினையாம் சிறிதளவும் செல்ல—நினையாது,
வாசகத்தா லேத்தினேன் வானோர் தொழுதிறைஞ்சும்,
நாயகத்தான் பொன்னடிக்கள் நான். ௪௫.

அந்.—வினையார், தர, முயலும், வெம்மையை, அஞ்சி, (௫) தினையாம் சிறிது அளவும், செல்ல, நினையாது, நான், வானோர், (௧௦) தொழுது, இறைஞ்சும், நாயகத்தான், பொன், அடிக்கள், (௧௫) வாசகத்தால், ஏத்தினேன். (௧௭)

அர்.—விஶ்லேஷமானது, தருகைக்கு, உத்ஸாஹிக்கிற, து꞉கக்ரௌர்யத்தை (நினைத்து), பயப்பட்டு, (௫) அத்யல்பகாலமும், (பிரிந்து) செல்லுவதாக நினையாமல், நான், நித்யஸூரிகள், (௧௦) (மநஸ்ஸினாலும் வாக்கினாலும்) ஆஶ்ரயித்து, (சிரத்தினால்) வணங்குகிற, பரமசேஷியினுடைய, ஸ்ப்ருஹணீயமான, திருவடிகளை, (௧௫) வாக்கினால், புகழ்ந்தேன். (௧௭) ௪௫.

வ்யா.—அவ.—நாற்பத்தைந்தாம்பாட்டில், (வினை) நீரிதில் செய்ததென்னென்னில், பிரிந்தால்வரு மநர்த்தத்தைநினைத்து அவன் திருவடிகளை யேத்தினேனென்கிறார்.

(க) கீதை - ௧௪ - ௧௭.

(வினையாரித்யாதி) †பிரிவாலேபிறக்கும் வெம்மையையஞ்சி க்ஷணமாத்ரமும் அவனையொழியக் காலம்செல்லப்பாராதே வாகிந்த்ரியத்தைக்கொண்டு ஏத்தினேன். (வானோரித்யாதி) நித்யஸூரிகள் மநோவாக்காயங்களாலே அடிமைசெய்யும் ஸர்வேஶ்வரனுடைய் விலக்ஷணமான திருவடிகளைப்பெற்று அதைப் பிழைக்கவொண்ணாதென்று ஏத்தினேன். சரு.

அரு.—நாற்பத்தைந்தாம்பாட்டு. "வினையார்" வினையென்று - பாபகார்யமானவிஶ்லேஷம். "தரமுயலும்" - கொடுக்க உத்யோகிக்கிற. இத்தால் (பிரிவாலேபிறக்கும்) என்றபடி. சரு.

நான்கூறும் கூற்றாவ தித்தனையே, நாளும்
தேங்கோத நீருருவன் செங்கண்மால்,—நீங்காத
மாகதியாம் வெந்நரகில் சேராமல் காப்பதற்கு,
நீகதியா நெஞ்சே நினை. சசு.

அந்.—தேங்கு, ஓதம், நீர், உருவன், செம், (ரு) கண், மால், நீங்காத, மா, கதியாம், (கo) வெம், நரகில், சேராமல், காப்பதற்கு, கதியாம், (கரு) நெஞ்சே, நீ, நினை, நாள்நாளும், நான், (உo) கூறும், கூற்றாவது, இத்தனையே. (உரு)

அர்.—தேங்கின, கடலின், நீர்போன்ற, வடிவையுடையனாய், சிவந்த, (ரு) திருக்கண்களையுடையனான, ஸர்வேஶ்வரன், பிரியத்தகாத (நித்யாநுபவயோக்யமான), பரமமான, ப்ராப்யனாகும்; (கo) க்ரூரமான, ஸம்ஸாரத்தில், கிட்டாதபடி, ரக்ஷிக்கைக்கு, உபாயமாகும்; (கரு) ஓமநஸ்ஸே! நீ, அநுஸந்தி. ப்ரதிதிநமும், நான், (உo) (உனக்குச்) சொல்லுகிறவார்த்தையாவது, இவ்வளவே. (உரு) சசு.

வ்யா.—அவ.—நாற்பத்தாறும்பாட்டில், (நான்கூறும்) கீழே தேஹயாத்ரைசெல்லும்படிசொல்லிற்று, இதில் "ப்ராப்யப்ராபகங்கள் அவனேயென்று நினைத்திரு" என்கிறார்.

(நான்கூறும் கூற்றாவதித்தனையே). ஒருநாளேயோ இப்படி சொல்லுவதென்னில், (நாணாளும்) என்று மித்தனையே. (தேங்கோதமித்யாதி) தேங்கினகடல்போலேயிருந்த திருமேனியையும், ஐஶ்வர்யஸூசகமான கண்களையுமுடைய ஸர்வேஶ்வரனை, மீட்சியில்லாத ப்ராப்யமாகவுமாம், ஸம்ஸாரத்திலேசேராதபடிக்கீடான ப்ராபகமாகவுமாம், நெஞ்சே! நினை. இத்தால் ப்ராப்யப்ராபகங்களுமவனேயென்னுமிடமும் ப்ராப்தாவுக்கு ப்ரதிபத்திமாத்ரமேயென்னுமிடமும்

ப்ரபந்நனுக்கு இருகால்மட்டொன்றும் சொல்லவேண்டுவதில்லை யென்னுமிடமும் சொல்லுகிறது. ௬௬.

அரு.—நாற்பத்தாறும்பாட்டு. "நினை" என்கையாலே. ப்ரதிபத்தியும், அதுதான் ஒருகால் என்னுமிடமும் தோற்றுகிறது. ௬௬.

நினைத்திறைஞ்சி மானிடவ ரொன்றிரப்ப ரென்றே,
நினைத்திடவும் வேண்டாநீ நேரே,—நினைத்திறைஞ்ச
எவ்வளவ ரெவ்விடத்தோர் மாலே, அதுதானும்
எவ்வளவு முண்டோ வெமக்கு. ௬எ.

அந்.—மானிடவர், நினைத்து, இறைஞ்சி, ஒன்று, இரப்பர், (௫) என்று, நீ, நினைத்திடவும், வேண்டா, நேரே, நினைத்து, (௧0) இறைஞ்ச, எவ்வளவர், எவ்விடத்தோர், மாலே, அதுதானும், (௧௫) எமக்கு,எவ்வளவும்உண்டோ.(௧எ)

அர்.—மநுஷ்யர், (நம்மை) அநுஸந்தித்து, வணங்கி, ஒரு (அல்ப) விஷயத்தை, யாசிப்பர்கள், (௫) என்று, நீ, நினைக்கவும்வேண்டா. (விஷயாந்தரங்களைவிட்டு) ஸாக்ஷாத்தாக, (உன்னையே ப்ரயோஜநமாக) எண்ணி, (௧0) வணங்குகைக்கு (ஸம்ஸாரிகள்) எவ்வளவு ஜ்ஞாநவான்கள்? எத்தேசத்திலுள்ளார்? (எங்கும் ஒருவருங்கிடையாது). ஸர்வாதிகனே! அந்த ப்ரயோஜநாந்தரபரதைதான், (௧௫) (உன் கடாக்ஷம்பெற்ற) எங்களுக்கு, எவ்வளவாகிலும் (அணுவாகிலும்) உண்டோ? (௧எ) ௬எ.

வ்யா.—அவ.—நாற்பத்தேழாம்பாட்டில், (நினைத்து) "நீர்நம்மை ப்ராப்யப்ராபகமாகவும், நம்மையேத்துகையே தேஹயாத்ரையாகவுமாக இராநின்றீர், இதுக்கு விபரீதமாயிருப்பானேன் ஸம்ஸாரம்" என்ன, உன்கடாக்ஷமில்லாதபடியிருக்கை குற்றமோ? வென்கிறார்.

(நினைத்தித்யாதி) நம்மைநினைத்து நம்காலிலேவிழுந்து உம்மைப்போலே நம்மையே ப்ரயோஜநமாகப்பற்றாதே ப்ரயோஜநாந்தரத்துக்கும் அடியொப்பரென்று நினைக்கவேண்டா. (நேரே இத்யாதி) நீயேப்ராப்யமும் ப்ராபகமும் என்று நினைத்திறைஞ்ச எங்குள்ளார்க்குப்போம்? †எவ்வளவிலுள்ளார்க்குப்போம்?(மாலே)உன்னைச்சிலவராலே பரிச்சேதிக்கப்போமோ? (அதுதானுமெவ்வளவுமுண்டோ வெமக்கு) உன்கடாக்ஷம்பெற்றவர்களுக்கு ப்ரயோஜநாந்தரத்திலே முதலடியிடவேண்டா; உன்கடாக்ஷமில்லாதார் இப்படிசெய்தாரென்று உனக்கு வெறுக்கவொண்ணுமோ? ௬எ.

அரு.—நாற்பத்தேழாம்பாட்டு. "எவ்வளவர்" - எவ்வளவிலுள்ளார். எப்படிப்பட்ட ஜ்ஞாநத்தையுடையார்? அதுதானும் அந்தப்ரயோஜநத்தைக் கொள்ளுகை. சஎ.

எமக்கியாம் விண்ணாட்டுக் குச்சமதாம் வீட்டை,
அமைத்திருந்தோ மஃதன்றே யாமாறு,—அமைப்பொலிந்த
மென்தோளி காரணமா வெங்கோட்டே றேழுடனே,
கொன்றானையே மனத்துக் கொண்டு. சஅ.

அந்.—அமை, பொலிந்த, மெல், தோளிகாரணமா, வெம், (ரு) கோடு, ஏறு எழு, உடனே, கொன்றானையே, மனத்து, (க0) கொண்டு, யாம், விண்நாட்டுக்கு, உச்சமதாம், வீட்டை, (கரு) எமக்கு, அமைத்திருந்தோம், அஃதன்றே, ஆம் ஆறு. (கக)

அர்.—(பசுமை சுற்றுடைமைமுதலிய குணங்களால்) மூங்கிலைக்காட்டிலும், சிறந்திருக்கிற, ம்ருதுவான, புஜங்களையுடைய நப்பின்னைப் பிராட்டி நிமித்தமாக, கொடிய, (ரு) கொம்புகளையுடைய, எருதுகளேழையும். ஒரு காலத்திலேயே, கொன்ற க்ருஷ்ணனை, ஹ்ருதயத்திலே, (ச0) (உபாயமாக) ஸ்வீகரித்து, நாங்கள், ப்ரஹ்மாதிலோகங்களுக்கும், மேலான, பரமபதத்தை, (கரு) எங்களுக்கு, உண்டாக்கப்பாரித்தோம்; அதுவன்றோ, யுக்தமானப்ரகாரம். (கக) (சஅ)

வ்யா.—அவ.—நாற்பத்தெட்டாம் பாட்டில், எமக்கு ப்ரபல ப்ரதிபந்தகம் போக்குமவனையுபாயமாக நெஞ்சிலேகொண்டு அவனால் பெறுவதும் பரமபதமென்று நினைத்திருந்தோம், இதன்றோ விருக்கும்படி யென்கிறார்.

நமக்கு நாம் ப்ரஹ்மாதிகளுடைய †மேலான பரமபதத்தைப் †பாரித்திருந்தோம். இதுவன்றே செய்யும்வழி. ப்ரஹ்மாதிகளுடைய லோகத்துக்குமேலாய், பரமபதத்துக்குப் புறம்பாயிருக்கும் கைவல்யமோக்ஷத்தை (அமைத்திருந்தோம்)-†வேண்டாவென்றிருந்தோமென்றுமாம். †பெருமாள் குணங்களிலேபழகின உடம்பொழிய பரமபதம்வேண்டாவென்றிருந்தாற்போலே, அஸாதாரணையாய் வேய்போலேவிளங்கி ம்ருதுவான தோளையுடைய நப்பின்னைப்பிராட்டிக்காக வெவ்வியகோட்டையுடைய எருதுகளேழையுமுடனே செற்றவனையே நெஞ்சிலேகொண்டு இவ்வநுபவத்திற் காட்டில் பரமபதம் வேண்டாமென்றிருந்தோமென்றுமாம். சஅ.

அரு.—நாற்பத்தெட்டாம்பாட்டு - "உச்சமதாம்" - மேலானவீட்டை, "அமைத்திருந்தோம்" அமைவு - சமைவாய், பாரித்திருந்தோமென்னுதல்;

அமைவு - அமையுமென்ருய், வேண்டாவென்னுதல் ; பரமபதந்தன்னையும் வேண்டாவென்னுதல். இந்தவர்த்தத்தைத் திருவடியை த்ருஷ்டாந்தமாக்கி அருளிச்செய்கிருர் (பெருமாள்) இத்யாதி. "கோடு" கொம்பு. சஅ.

கொண்டல்தான் மால்வரைதான் மாகடல்தான் கூரிருள்தான்,
வண்டருப் பூவைதான் மற்றுத்தான்,—கண்டநாள்
காருருவங் காண்டோறு நெஞ்சோடும், கண்ணனூர்
பேருருவென் றெம்மைப் பிரிந்து. சகூ.

அந்.—கொண்டல்தான், மால், வரைதான், மா, கடல்தான், (ரு) கூர், இருள்தான், வண்டு, அரு, பூவைதான், (கo) மற்று, கார், உருவம் தான், கண்டநாள், காண்தோறு, (கரு) நெஞ்சு, கண்ணனூர், பேர், உருவு என்று, எம்மை, (உo) பிரிந்து, ஓடும். (உஉ)

அர்.—மேகங்களையும், பெரிய, மலைகளையும், பரந்த, கடலையும், (ரு) செறிந்த, இருளையும், வண்டுகள், மாருத, பூவைப்பூவையும், (கo) மற்றும், கறுத்த, ரூபங்களையுடைய வஸ்துக்களையும், பார்க்குங்காலத்தில், பார்த்த போதெல்லாம், (கரு) (என்) மநஸ்ஸு, (இது) கண்ணபிரானுடைய, பெரிய (அழகையுடைய), திருமேனியென்று நினைத்து, எம்மை, (உo) விட்டு, (அங்கே) ஓடாநின்றது. (உஉ) சகூ.

வ்யா.—அவ. — நாற்பத்தொன்பதாம்பாட்டில், (கொண்டல்) "அவனேப்ராபகன்" என்றறுதியிட்டார்க்கு சரீராவஸாநத்தளவுமிருக்கும்படி சொல்லுகிறது.

(கொண்டல்தானித்யாதி) உபமாநங்களைக்கண்டால் உபமேயமென்று நம்மைவிட்டு நெஞ்சு ஓடாநின்றது. மேகத்தை, கறுத்த மலையை, கடலை, கூரியவிருளை, வண்டுமாருத பூவை என்கிற வ்ருக்ஷத்தைக்கண்டபோது, (காருருவங்காண்டோறும்) †அநுக்தமான கறுத்த பூங்குவளை நீலம் காயாஇத்யாதி, † காணுந்தோறும் †என்றுமாம். †வடிவென்றுகண்டால், இதுக்கு, "அவனன்றுகாண்" என்று கேட்டறிந்தாலும் பின்னையுங்கண்டபோதெல்லாம், (கண்ணனூர்பேருருவென்று) இதின் நெடுவாசியறிகிறதில்லை, பேருருவென்றேயோடாநின்றது. சகூ.

அரு.—நாற்பத்தொன்பதாம்பாட்டு "மற்றுக்காருருவம்" என்றுகூட்டியருளிச்செய்கிருர் (அநுக்தமான) இத்யாதி. (என்றுமாம்) என்றது - அர்த்தாந்தரமன்று, உண்டானாலும் ப்ரதிகோடிகண்டுகொள்வது. வர்த்தமாநத்தைப் பற்ற அருளிச்செய்கிருர் (வடிவென்று) இத்யாதி. [நெஞ்சானதெம்மைப் பிரிந்து பேருருவென்றே ஓடாநின்றது] என்றபடி. சகூ.

பிரிந்தொன்று நோக்காது தம்முடைய பின்னே,
திரிந்துழலும் சிந்தனையார் தம்மைப்,—புரிந்தொருகால்
ஆவா வெனவிரங்கா ரந்தோ வலிதேகொல்,
மாவாய் பிளந்தார் மனம். ருய.

அந்.—பிரிந்து, ஒன்று, நோக்காது, தம்முடையபின்னே, திரிந்து, (ரு) உழலும், சிந்தனையார்தம்மை, ஒருகால், புரிந்து, ஆவாவென, (கo) இரங்கார், அந்தோ, மா, வாய், பிளந்தார், (கரு) மனம், வலிதேகொல். (கஎ)

அர்.—(தம்மை) விட்டு, வேறொன்றைப், பாராதே, தம்முடைய பின்னே, அலைந்து, (ரு) தடுமாறுகிற, மநஸ்ஸினுரை, ஒருகாலாகிலும், ஸ்நேஹித்து, ஐயோ! என்று, (கo) தயைபண்ணுகிறிலர். ஐயோ! (என்பாபமா). கேசியின், வாயைக், கிழித்த கண்ணபிரானுடைய, (கரு) மநஸ்ஸு, திண்ணிதாய்விட்டதோ? (கஎ) ருo.

வ்யா.—அவ.—ஐம்பதாம்பாட்டில், (பிரிந்தொன்று) "உபமாநங்களைக்கண்டு உபமேயமென்றிருக்கும்படியான † எம்மை இவர் நோக்காதொழிவதே!" என்று வெறுக்கிறார். (க) † "எதிர்சூழல்புக்கெனைத்தோர் பிறப்பும்" என்னும்படியை எண்ணுகிறிலர். அவன் கொடுத்த சரீரங்கொண்டு ருசிபிறந்தபின்பு இவனைத்தாழ்த்ததும் குற்றமாய்த் தோற்றுகின்றது. தான்பரிக்ரஹித்த சரீரந்தோறும் அவஸரப்ரதீக்ஷணாய்த் தம்பக்கல் முகம்பெறாதே திரிந்தது தோற்றுகிறதில்லை. இத்தலையில் அபேக்ஷபிறந்தால் அவனுக்கு வாராதேயிருக்கை முறையன்றுபோலேகாணும். † ப்ரஜை எல்லாத் தீம்புஞ்செய்தாரேயாகிலும் பசித்தபோது சோறிட்டிலளாகில் தாய்க்குக் குற்றமாகக்கடவதிறே.

(பிரிந்தித்யாதி) வேறொன்றை அநுஸந்தியாதே தம்மையேபற்றித்திரிகிற (சிந்தனையார்தம்மை) "தம்மையொழிய வேறொருத்தரில்லை" என்று புரிந்துபார்த்து "ஐயோ" என்றிரங்குகிறிலர். (மாவாய் பிளந்தாரித்யாதி) ஆஶ்ரிதர்க்காக விரோதிநிரஸநம்பண்ணிப்போந்தவருடைய மநஸ்ஸு இப்போது திண்ணிதானபடியென்! மாவாய் பிளந்தாருடைய மனம் அந்தோ! வலிதேகொல். ருய.

அரு. ஐம்பதாம்பாட்டு - (எம்மை) எங்களை. தம்மைப்பெறுகைக்கு யத்நம்பண்ணினவனை வெறுப்பானென்னென்ன அருளிச்செய்கிறார் (எதிர்சூழல்)

(ர) திருவாய்மொழி - உ - எ - சு.

இத்யாதி. தம்முடைய குற்றங்கிடக்க அவன் அல்பந்தாழ்த்ததைக் குற்றமாகக் கொள்ளலாமோவென்ன அருளிச்செய்கிருர் (ப்ரஜை எல்லா) இத்யாதி. ௫௰.

மனமாளு மோரைவர் வன்குறும்பர் தம்மைச்,
சினமாள்வித் தோரிடத்தே சேர்த்துப்,—புனமேய
தண்டுழாயானடியே தாங்காணுமஃதன்றே,
வண் துழாம் சீரார்க்கு மாண்பு. ௫க.

அந்.—மனம், ஆளும், ஓர், ஐவர், வன், (௫) குறும்பர்தம்மை, சினம், மாள்வித்து, ஓரிடத்தே, சேர்த்து, (க0) புனம், மேய, தண், துழாயான், அடியேதான், (க௫) காணும், அஃதன்றே, வண், துழாம், சீரார்க்கு, (௨0) மாண்பு. (௨க)

அர்.—மநஸ்ஸைத், தங்கள்வசமாக்கிக்கொள்ளுகிற, (நலிகையில்) அத்விதீயராய், ஐந்துவகைப்பட்ட, ப்ரபலராய், (௫) ஸ்வதந்த்ரரான இந்த்ரியங்களை, கோபத்தை, நசிப்பித்து, ஸர்வேஸ்வரனிடத்தில், ப்ரவணமாம்படி பண்ணி, (க0) தன்நிலத்தில், பொருந்தியிருந்தாற்போல் செவ்விபெற்று, குளிர்ந்த, திருத்துழாயையுடையவனுடைய, திருவடிகளையே, (க௫) ஸேவிக்கையாகிற, அதுவன்றே, உதாரமாய்ப், பரந்த, குணங்களையுடைய ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு, (௨0) அழகு. (௨க) ௫க.

வ்யா.—அவ.—ஐம்பத்தோராம்பாட்டில், (மனமாளும்) † சேஷபூதன் சேஷிசெய்தபடி கண்டிருக்கு மத்தனையல்லது வெறுத்துத் தப்பச்செய்தோமென்கிருர்.

பள்ளிகள்கலஹம்போலே, ஈஸ்வரனுக்கு ஆத்மாசேஷமாய், ஆத்மாவுக்கு மநஸ்ஸு சேஷமாய், மநஸ்ஸு போனவழியே போகக் கடவவானஇந்த்ரியங்களிருக்கும் முறையன்றிக்கே, மநஸ்ஸை இந்த்ரியங்களாளும்படி யிருக்கை. (வன்குறும்பர்) மநஸ்ஸைத் தாங்கள் போனவழியே கொடுபோகவல்லராயிருக்கை. † "இன்னதனைத்ரவ்யத்துக்கு † அரசுசெய்வாரைக் கிடைக்கும்" என்னும் வன்னியரைப்போலே. (ஓரைவர் வன்குறும்பர்தம்மைச் சினமாள்வித்து) கர்மபலமான் க்ரோதத்தைமுடித்து (க) "𑌕𑌾𑌮𑌾𑌤𑍍 𑌕𑍍𑌰𑍋𑌧𑍋𑌽𑌭𑌿𑌜𑌾𑌯𑌤𑍇- காமாத் க்ரோதோபிஜாயதே" பகவத்வ்யதிரிக்தவிஷயங்களெல்லாம் இந்த்ரியங்களுக்கிரைபோராதிறே. எல்லா இந்த்ரியங்

(க) கீதை - ௨ - ௬௨.

களும் அநுபவிக்கப்புக்கால் அநுபாவ்யாம்சம் பெருத்திருப்பது பகவத்விஷயமிறே. (க) † "இன்னங்கெடுப்பாயோ" என்றும் (உ) "பாவியேனைப் பலநீகாட்டிப் படுப்பாயோ" என்றும் (உ) "சிற்றின்பம்" என்றுமிறே இதரவிஷயங்கள். எல்லா இந்த்ரியங்களும் புஜித்தாலும் போக்யதை அளவிறந்திருக்குமென்னுமிடத்தைச் சொல்லுகிறது (புனமேயதண்டுழாயானடி) என்று. (வண்டுழாம் சீரார்க்குமாண்பு - மனமாளுமோரைவர்வன்குறும்பர்தம்மைச் சினமாள்வித்தோரிடத்தேசேர்த்துப் புனமேயதண்துழாயானடியேதான் காணுமஃதன்றே). ஆத்மகுணோபேதர்க்கு - வண்மைதுழாவினசீரையுடையவர்களுக்கு அழகாவது - இந்த்ரியங்களை ஜயித்து அவ்விந்த்ரியங்களெல்லாவற்றையும் பகவத்விஷயத்திலே சேர்த்து, செவ்வித்திருத் துழாய்மாலையையுடையனாயிருந்துள்ள ஸர்வேஸ்வரன்திருவடிகளைக் காண்கையன்றோ? முறை; "அந்தோவலிதேகொல்" என்று வெறுக்கக்கடவதோ? ருக.

அ.—ஐம்பத்தோராம்பாட்டு - "வண்டுழாஞ்சீரார்" என்கையாலே சேஷிசெய்தபடி கண்டிருக்கையொழிய வெறுக்கக்கூடாதென்கிறது. "தம்மை" என்றத்தை யருளிச்செய்கிறார் (இன்னதனைத்ரவ்ய) இத்யாதி. (அரசுசெய்வார்) கைக்காயிரத்துக்குச் சேவிப்பார். "சினமாள்வித்து"—சினத்தை முடித்து; அத்தால் வந்தக்ரோதத்தைப்போக்க என்றபடி. இதரவிஷயங்கள் அநர்த்தகரமுமாய் அல்பமுமாயிருக்குமோவென்ன அருளிச்செய்கிறார் (இன்னங்கெடுப்பாயோ) இத்யாதி. "மாண்பு" - அழகு - முறையென்றாய், ப்ராப்தமென்றபடி. ருக.

மாண்பாவித் தஞ்ஞான்று மண்ணிரந்தான், மாயவள்நஞ்
சூண்பாவித் துண்டான தோருருவம்,—காண்பான்நங்
கண்ணவா மற்றொன்று காணுறு, சீர்பரவா
துண்ண வாய்தானுறுமோ வொன்று. ருஉ.

அ.—அஞ்ஞான்று, மாண், பாவித்து, மண், இரந்தான், (ரு) மாயவள், நஞ்சு, ஊண், பாவித்து, உண்டானது, (கo) ஓர், உருவம், காண்பான், நம் கண், அவா, (கரு) மற்று ஒன்று, காண்உறு, வாய்தாய், சீர், பரவாது, (உo) ஒன்று, உண்ண, உறுமோ. (உரு)

அ.—இந்த்ரன் அர்த்தித்தவன்று, ப்ரஹ்மசாரிவேஷத்தைப், பாவனை செய்துகொண்டு, பூமியை, யாசித்தவனாய், (ரு) வஞ்சகியான பூதனையின், விஷத்தை, தாரகமாக, விரும்பி, அமுதுசெய்தவனானவனுடைய, (கo)

(உ) திருவாய் - சு - கூ - அ. (ரு) திருவாய் - சு - சு - கூ.

அத்விதீயமான (அழகையுடைய), திருமேனியை, ஸேவிக்கைக்காக, நம்முடைய கண்களுக்கு, ஆசை. (கரு) வேறொன்றைக், காண ஆசைப்படாது. வாகிந்த்ரியந்தான், (அவனுடைய) கல்யாணகுணங்களை, ஸ்துதியாமல், (உ௦) ஒன்றை, புஜிக்க, ஆசைப்படுமோ? ருஉ.

வ்யா.—அவ.—ஐம்பத்திரண்டாம்பாட்டில், (மாண்பாவித்து) பொதுவிலேசொன்னேன், அதுதானெனக் குண்டாயிற்றென்கிறார்.

(மாணித்யாதி) மாண்பாவிக்கையாவது - மஹாபலி "நான்தரு வேனென்றால் இன்னுமகல இரக்கமாட்டாயோ?" என்ன; "இரந்ததுக்குமேலேவேண்டா" என்றிருக்கிற பால்யம் பாவித்து. அத்தைப் பொய்யென்கிறதன்று; அத்தையும் மெய்யாக்குகை.

(மாயவளித்யாதி)தாய் வேஷத்தைக்கொண்டு "இவனுக்குமுலை கொடாவிடில் தரியேன்" என்று அவள் முலைகொடுத்தாற்போலே இவனும் "உண்ணுவிடில் தரியேன்" என்று தாரகமாகவுண்டான், (க) "பேய்முலை நஞ்சூணாகவுண்டான்" என்னும்படியே. (காண்பான் நங்கண்ணவா) கண்ணுக்கவா ஊண்பாவித்துண்டானதோருருவங் காண்பான். (மற்றொன்றுகாணுறு) † அதொன்றுங்காண்கை செய்யென்று காண்கை. நாணி வேறொன்று காணுமையேமுடியும். நயநேந்த்ரியத்துக்கன்று, இந்தவர்த்தம் வாகிந்த்ரியத்துக்குமொக்கும். (சீர்பரவாதுண்ணவாய்தானுறுமோவொன்று) அவனுடைய கல்யாணகுணங்களைச்சொல்லாதே வாக்கு வேறொன்றை உண்ணஉறாது.

அரு.—ஐம்பத்திரண்டாம்பாட்டு — (அதொன்றும்) என்ற வாக்யம் பிழை. (ருஉ)

ஒன்றுண்டு செங்கண்மால் யானுரைப்பது, உன்னடியார்க்
கென்செய்வ னென்றே யிருத்திநீ,—நின்புகழில்
வைகும் தம் சிந்தையிலும் மற்றினிதோ, நீயவர்க்கு
வைகுந்த மென்றருளும்வான். ருரு.

அந்.—செம், கண், மால், யான், உரைப்பது, (ரு) ஒன்று, உண்டு, நீ, உன், அடியார்க்கு, (க௦) என்செய்வன், என்று, இருத்தி, நின், புகழில், (கரு) வைகும், தம்சிந்தையிலும், மற்று, அவர்க்கு, நீ, (உ௦) அருளும், வைகுந்தம்என்று, வான், இனிதோ. (உ௪)

அர்.—சிவந்த, திருக்கண்களையுடைய, ஸர்வேஸ்வரனே! நான், (உனக்குச்) சொல்லுவது, (ரு) ஒருவார்த்தை, உண்டு; நீ, உன்னுடைய, தாஸபூ

(க) முதல் திருவந்தாதி - கக.

தர்க்கு, எந்தஉபகாரத்தைச்செய்வேன், என்று (சிந்தாக்ராந்தனாய்), இருக்கிறாய். உன்னுடைய, கல்யாணகுணங்களில், (கரு) தங்குகிற, தங்களுடைய சிந்தையி (அத்யவஸாயத்தி)லும் காட்டில், அதற்குமேல், அவர்களுக்கு, நீ, (உ௦) க்ருபைபண்ணுகிற, ஸ்ரீவைகுண்டமென்று ப்ரஸித்தமான, பரமாகாசம், போக்யமாகுமோ? (உச) ருரு.

வ்யா.—அவ.—ஐம்பத்துமூன்றாம்பாட்டில்,(ஒன்றுண்டு) "என்னுடைய இந்த்ரியங்களுமுன்னை யநுபவிக்கும்படியாயிற்று" என்ன; "அவ்வளவேயோ? இன்னும்சிலவுண்டுகாணுமுமக்குச் செய்யக்கடவது" என்ன; "எனக்குச் செய்யாததுண்டோ?" என்கிறார்.

(ஒன்றித்யாதி) † ஆரேனுமாகத் தெளிந்தார் கலங்கினார்க்குச் சொல்லக்கடவதிறே. (உன்னடியார்க்கித்யாதி) நிரபேக்ஷர்க்கு "என் செய்வன்"என்றிருக்கிற தர்மந்தான் எப்போதுமொருபடிப்பட்டிருக்கும். (க) "ஙுணஂ ப்ரவ்ருத்தமிவமே—ருணம்ப்ரவ்ருத்தமிவமே" பாண்டவர்கள் முடிசூடினவன்றும் த்ரௌபதி குழல்முடித்தபின்பும், பர்த்தாக்கள் ஸந்நிஹிதராயிருக்க அவர்களை "ரக்ஷகர்" என்று நினையாதே தன்பேர் சொன்னவளுக்குத் திருவுள்ளத்திலே † தனிசுபட்டிருக்குமாபோலே, அந்த ஆநுகூல்யமுடையார்க்கு என்றும் "என் செய்வேன்" என்றிருத்தி. (நின்புகழித்யாதி) உன்புகழிலேதங்குகிற சிந்தையிற்காட்டிலினிதோ? நீபோரப்பொலியச் சொல்லிக்கொடுக்கிற பரமபதம். ஸித்தத்துக்கிடைநிற்குமோ? ஸாத்யம். இதுக்கது § உத்திஸாரமே காரணம். ருங.

அரு.—ஐம்பத்துமூன்றாம் பாட்டு.—சேஷியைக்குறித்து "சொல்லுகிறேன்" என்னலாமோ வென்ன அருளிச்செய்கிறார் (ஆரேனுமாக) இத்யாதி. (தனிசு)-ருணம். பரமபதம் ஶ்லாக்யமன்றோவென்ன அருளிச்செய்கிறார் (இதுக்கது உத்திஸாரம்) இத்யாதி. ருரு.

வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ,
கானோ வொருங்கிற்றும் கண்டிலமால்,—ஆனீன்ற
கன்றுயரத் தாமெறிந்து காயுதிர்த்தார் தாள்பணிந்தோம்,
வன்துயரை யாவா மருங்கு. ருச.

(க) பாரதம் - உத்யோக - ருகூ - உஉ.

§ குணாநுபவயோக்யமான இந்த ஜன்மத்திற்காட்டில் பரமபதம் ஶ்லாக்யமென்கைக்குக் காரணம் பரமபதம் உத்திஸாரமாயிருப்பதே என்று யதாஶ்ருதபங்க்தி தாத்பர்யம்.

அந்.—ஆன், ஈன்ற, கன்று, தாம், உயர, (ரு) எறிந்து, காய், உதிர்த் தார், தாள், பணிந்தோம், (கo) வன், துயரை, மருங்கு, கண்டிலம், ஆல், (கரு) வானோ, மறி, கடலோ, மாருதமோ, தீயகமோ, (உo) கானோ, ஒருங்கிற்று, ஆவா. (உரு)

அர்.—பசு, பெற்ற, வத்ஸாஸுரனைத், தாம், உயர, (ரு) எறிந்து, விளங் கனியை, விழவிட்டவனுடைய, திருவடிகளை, ஆஶ்ரயித்தோம் ; (கo) வலிய, பாபத்தை, (நம்) ஸமீபத்திலும், கண்டிலோம். ஆகையால், (கரு) (அது) ஆகா சத்திலோ, அலையெறிகிற, கடலிலோ, காற்றிலோ, அக்நியிலோ, (உo) காட் டிலோ, சேர்ந்தது. ஐயோ. (உரு) ருசு.

வ்யா.—அவ.—ஐம்பத்துநாலாம்பாட்டில், (வானோ) "உம்மு டைய ப்ரதிபந்தகம் செய்ததென்?" என்ன, "நானுமறிகிறிலேன்" என்கிறார்.

(வானித்யாதி) ஆகாசகமநம்பண்ணிற்றோ? கடலிலே புக்கு முடிந்ததோ? காற்றோடே கலந்துபோயிற்றோ? அக்நிப்ரவேசம் பண்ணிற்றோ? † மஹாப்ரஸ்த்தாநம்பண்ணிற்றோ? (ஒருங்கிற்று) இவ ற்றிலெங்கேசேர்ந்தது? (மருங்கும் கண்டிலமால்) ஸமீபத்திலே காணுதொழிகையால். ‡ "ஒருங்கிற்றுங்கண்டிலமால்" என்றதிலே மருங்கென்றது பொருளின்றிக்கேநிற்கும். (ஆனித்யாதி) ப்ரபல ப்ரதிபந்தகங்களைப்போக்குமவர் திருவடிகளிலே பணிந்திருந்தோம்: நம்மோடே நெடுநாள் பழகிப்போந்த வலியதுயரை அருகுங்கண் டிலோம். இவரெங்கே புக்குமுடிந்தார்; ஐயோ ஐயோ வென் கிறார். ருச.

அரு.—ஐம்பத்துநாலாம் பாட்டு.— (மஹாப்ரஸ்த்தாநம்) —மஹாவிந்த் யம். கண்டிலமென்னவமையாதோ, "மருங்கு" என்று விசேஷிப்பானென் னென்ன அருளிச்செய்கிறார் (ஒருங்கிற்றும்) இத்யாதி. என்னருகிற் கானோ மென்றபடி. ருச.

மருங்கோத மோதும் மணி நாகணையார்,
மருங்கேவர வரியரேனும்,—ஒருங்கே
எமக்கவரைக் காணலா மெப்பொழுது முள்ளால்,
மனக்கவலை தீர்ப்பார் வரவு. ருரு.

அந்.—வரவு, மனம், கவலை, தீர்ப்பார், மருங்கு, (ரு) ஓதம், மோதும், மணி, நாகுஅணையார், மருங்கே, (கo) வரஅரியரேனும், எமக்கு, உள்ளால், எப்பொழுதும், ஒருங்கே, (கரு) அவரை, காணலாம். (கஎ)

அர்.—(தம்முடைய) வரவாலே, மநஸ்ஸிலுள்ள, க்லேஶத்தைப், போக்குமவராய், ஸமீபத்தில், (ரு) திரைகள், அடிக்கும் (ஸ்ப்ருசிக்கும்)படி, மணிகளையுடைய, திருவநந்தாழ்வானுகிற படுக்கையையுடையரானவர்,ஸமீபத்தில், (கo) சென்றுகிட்ட துர்லபராயினும், நமக்கு, மநஸ்ஸினுல், எப்போதும், ஒருபடிப்பட, (கரு) அவரை, ஸேவிக்கலாம். (கஎ) ருரு.

வ்யா.—ஐம்பத்தைந்தாம்பாட்டில்,(மருங்கித்யாதி)வரவாலென் மனக்கவலை தீர்ப்பார், அருகே கடலில் திரைத்திவலை துடைகுத்த த்திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகிறவர் அருகேசெல்லவரியரேலும் நமக்கொருபடிப்பட ஹ்ருதயத்திலே எப்போதுமுளர்.

அரு.—ஐம்பத்தைந்தாம்பாட்டு.—[வரவுமனக்கவலைதீர்ப்பார், மருங்கோதம் மோதும்மணிநாகணையார் மருங்சேவரவரியரேலும் - நமக்கு - ஒருங்கே-உள்ளால் எப்பொழுதும் காணலாம்.] மநஸ்ஸிலே ஒருபடிப்பட எப்போதுங் காணலாமென்றபடி. ருரு.

வரவாறென்றில்லையால் வாழ்வினிதால், எல்லே
ஒருவாறொருவன் புகாவாறு,—உருமாறும்
ஆயவர்தாம் சேயவர்தா மன்றுலகம் தாயவர்தாம்,
மாயவர்தாம் காட்டும் வழி. ருகூ.

அந்—ஒரு ஆறு, ஒருவன், புகாஆறு, உருமாறும், ஆயவர்தாம், (ரு) சேயவர்தாம், அன்று, உலகம், தாயவர்தாம், மாயவர்தாம், (கo) காட்டும், வழி, வரஆறு, ஒன்று, இல்லை, (கரு) வாழ்வு, இனிது, எல்லே, (கஅ) ஆல்.

அர்.—ஒருஉபாயத்தில், ஒருசேதநன், ப்ரவேசியாதபடி, (அவர்களுக்காகத்தன்) ஸ்வரூபத்தைவேறாக்கின, க்ருஷ்ணனாய், (ரு) (பிறர்க்கு) தூரஸ்தராய், அக்காலத்தில், லோகத்தை, அளந்தத்ரிவிக்ரமனாய், ஆஶ்சர்யசேஷ்டிதங்களையுடையரானவர், (கo) காட்டின, உபாயம், வந்தப்ரகாரம், ஒருபடியாலும், அறிகிறிலேன். (கரு) பலம், போக்யமாயிருக்கிறது. இதென்ன ஆஶ்சர்யம். (கஅ) ஆலென்றது அசை.

வ்யா.—அவ.—ஐம்பத்தாறும்பாட்டில், (வரவாறு) "எல்லார்க்குமருகும் செல்லவரியவ னுமக்கு எளியனானபடியென்?" என்ன; "நானுமறியேன்" என்கிறார்.

(வரவாறென்றில்லையால்). அடியில்லையாகில் பலம்சுருங்கியிருக்குமோ வென்னில், (வாழ்வினிதால்) பலமதிகமா யிருக்கும். (எல்லே ஒருவாறொருவன் புகாவாறுருமாறும்) "நமக்கடியில்லை" என்றாராய வேண்டாதபடி ஒருவழியிலொருவனைப் புகாதபடி தன்

னுடைய ஸ்வரூபஸ்வபாவங்களை யழியமாறும். எல்லா உபாயங்களையும் விட்டென்னையே பற்றென்கை. போக்தாவினுடைய உபாயாநுஷ்ட்டாநங்களை அவர்க்காகத் தான் † அநுஷ்ட்டிக்குமென்று கருத்து. எல்லாம் விட்டென்னைப் பற்றென்னுமிவர், (சேயவர்தாம்) அர்ஜுநனுக்குக் கையாளாயிருக்கச்செய்தே துர்யோதநாதிகளை அம்புக்கிரையாக்கி அவர்களுக்குத் தூரியாயிருக்குமவர். (அன்றுலகம் தாயவர்தாம்) நினைத்தபோது தாமேவந்து கிட்டுமவர். (மாயவர்தாம் காட்டும்வழி) இப்படி ஆஶ்சர்யபூதரானவர் காட்டுமுபாயம், வரவாறென்றில்லையால் வாழ்வினிதால். ருசு.

அரு.—ஐம்பத்தாறும்பாட்டு—"ஒருவன் ஒருவாறு புகாவாறு" - உபாயாந்தரங்களிலே புகாதப்ரகாரம். "உருமாறும்" - தாமே யுபாயமென்று காட்டுகைக்குத் தம்மையழியமாறி யவதரிக்குமவர்தாம். (அநுஷ்ட்டிக்கை) இவர்களுக்காக அவதரித்துத் தன்னையே உபாயமாகக்காட்டுகை. வாழ்வினிதால் - எல்லே - இதென்ன ஆஶ்சர்யம். ருசு.

வழித்தங்கு வல்வினையை மாற்றானோ நெஞ்சே,
தழீஇக்கொண்டு போரவுணன் றன்னைச்,—சுழித்தெங்கும்
தாழ்விடங்கள் பற்றிப் புலால்வெள்ளம் தானுகள,
வாழ்வடங்க மார்விடந்த மால். ருஎ.

அந்.—நெஞ்சே, போர், அவுணன்தன்னை, தழீஇக்கொண்டு, தாழ்வு, (ரு) இடங்கள், எங்கும்பற்றி, புலால்வெள்ளம்தான், சுழித்துஉகள, வாழ்வு, (௧0) அடங்க, மார்வு, இடந்த, மால், வழி, (௧ரு) தங்கு, வல், வினையை, மாற்றானே. (௧௧)

அர்.—ஓமநஸ்ஸே! யுத்தத்திலே, ஹிரண்யாஸுரனைக், கட்டிக்கொண்டு, தாழ்ந்த (பள்ளமான), (ரு) ப்ரதேசங்கள், முழுமையும்வ்யாபித்து, ரக்தப்ரவாஹம், சுழித்துக்கொண்டு புரளும்படியாகவும், (அவனுடைய) ஐஶ்வர்யம், (௧0) அடங்கும்படியாகவும், மார்பைப், பிளந்த, ஸர்வேஶ்வரன், இடையிலே (௧ரு) தங்கப்பண்ணுமதாய்(ப்ரதிபந்தகமாய்), ப்ரபலமான, பாபங்களைப், போக்கானோ? (ருஎ)

வ்யா.—ஐம்பத்தேழாம்பாட்டில், (வழித்தங்கு) வந்தேறிகளான அவித்யாதிகளையும் ப்ராப்யாபாஸங்களையும் போக்கானோ? ஹிரண்யனைப் போக்கினவனுக்கு இதொருபொருளோ? (நெஞ்சே தழீஇ இத்யாதி) முரட்டு ஹிரண்யனை ஸ்பர்சித்துப் †பள்ளமெல்

(௧) திருமொழி - ௧௧ - ௪ - ௪.

லாம்ருதிரவெள்ளம் சுழிக்கும்படி (க) "பெருநீரில்மும்மைபெரிது" என்னும்படி ருதிரம்வெள்ளமிட அவனைஸ்வர்யமொடுங்க மார்விடந்தஸர்வேஸ்வரன், வழித்தங்கு வல்வினையைமாற்றுனே நெஞ்சே.

அரு.—ஐம்பத்தேழாம்பாட்டு—போரவுணன்" - யுத்தோந்முகன். "தாழ்விடம்" - தாழ்ந்தவிடமாய், பள்ளமென்றபடி. "புலால்வெள்ளம்" - ரக்தவெள்ளம். ருஎ.

மாலேபடிச்சோதி மாற்றேல், இனியுனது
பாலேபோல் சீரில் பழுத்தொழிந்தேன்,—மேலால்
பிறப்பின்மை பெற்றடிக்கீழ்க் குற்றேவ லன்று,
மறப்பின்மை யான் வேண்டும் மாடு. ருஅ.

அ'—மாலே, படிச்சோதி, உனது, பால்போல், சீரில், (ரு) பழுத்து ஒழிந்தேன், இனி, மாற்றேல், மேலால், பிறப்புஇன்மை, (கo) பெற்று, அடிக்கீழ், குற்றேவல், அன்று, மறப்புஇன்மை, (கரு) யான், வேண்டும், மாடு. (கஅ)

அர்.—(ஆஸ்ரித) வ்யாமுக்தனே! திவ்யவிக்ரஹதேஜஸ்ஸையுடையவனே! உன்னுடைய, பால்போலதிபோக்யமான, கல்யாணகுணங்களில், (ரு) (அவகாஹித்து) பக்வனாய்விட்டேன். இனிமேல், (அதை) மாற்றுதொழியவேணும். மேலுள்ளகாலத்திலே, ஜந்மநிவ்ருத்தியை, (கo) அடைந்து, (உன்) திருவடிகளின்கீழ், கைங்கர்யத்தை, அன்று (நானாசைப்படுவது); (எப்போதும் திருவடிகளின்) விஸ்ம்ருதியில்லாமையே, (கரு) நான், ஆசைப்படும், தநம். (ருஅ)

வ்யா.—அவ.—ஐம்பத்தெட்டாம்பாட்டில், (மாலே) "இனி யுன்னுடையவநுபவத்துக்கு அவிச்சேதமே வேண்டுவது" என்கிறார்.

(மாலேபடிச்சோதி) ஸர்வேஸ்வரத்வத்தையும் †ஸ்வாபாவிகமானவிக்ரஹத்தையும் சொல்லுகிறது. ஆசாலேசமுடையார்பக்கல் வ்யாமோஹத்தையும் த்வேஷம்பண்ணினாலும் விடப்போகாதபடியையும் சொல்லுகிறதென்றுமாம். †ஆத்மகுணங்களையும் தேஹகுணங்களையுஞ் சொல்லுகிறதென்றுமாம். (மாற்றேலினி) வைத்த §இறையிலியை மாற்றுதேகொள், இறையிலியேதென்னில், (உனது பாலேபோல் சீரில்பழுத்தொழிந்தேன்) இவ்விறையிலியை மாற்றுதேகொள். (மேலாலித்யாதி) ஸம்ஸாரநிவ்ருத்தி பூர்வகமாகப் பரமபதத்திலே யுன்திருவடிகளிலே யடிமைசெய்கையன்று எனக்கு தநம்;

§ இறையிலி - அநந்யபோக்யத்வம்.

பரமபதத்தில் நீயிருக்குமிருப்பை மறவாமை. †பரமபதத்திலே போனாலல்லது மறவாமை யில்லாமையாலே பரமபதமும் வேண்டினாராய்ப்பலித்தது. †ஸாவித்ரியினுடைய பர்த்தாவை ம்ருத்யுகொடுபோக, "என்பர்த்தாவைத்தரவேணும்" என்று அவனையபேக்ஷிக்க, "இதொன்று மொழிய வேறே சில வேண்டிக்கொள்" என்ன, "இவன்வயிற்றிலே எனக்கொரு ப்ரஜையுண்டாகவேணும்" என்று வேண்டிக்கொண்டாற்போலே. இவர்க்கு மறப்புத்தானுண்டோவென்னில்; ப்ரக்ருதி ஸம்பந்தமுடையார்க்கு வருமது நமக்கும் வாராதோ" என்று பயப்படுகிறார். ஊரடைய வெந்துகொண்டு வாராநின்றால், "நம்மகமொன்றும் பிழைக்கும்" என்று பயங் கெட்டிருப்பாருண்டோ? ௫அ.

அரு.—ஐம்பத்தெட்டாம்பாட்டு—"படிச்சோதி"ஸ்வாபாவிகமான விக்ரஹமென்னுதல், விக்ரஹத்தினுடைய காந்தி என்னுதல். விவரணம் - (ஆத்மகுணங்களையும்) இத்யாதி. மறவாமையமையுமோ, பரமபதம் வேண்டாவோவென்ன அருளிச்செய்கிறார் (பரமபதத்திலேபோனால்) இத்யாதி. இத்தையபேக்ஷிக்கவே அதுபலித்ததெப்படியென்ன அருளிச்செய்கிறார் (ஸாவித்ரி) இத்யாதி. ௫அ.

மாடே வரப்பெறுவராமென்றே, வல்வினையார்
காடானு மாதானும் கைக்கொள்ளார்,— ஊடேபோய்ப்
பேரோதம் சிந்துதிரைக் கண்வளரும், பேராளன்
போரோதச் சிந்திக்கப் பேர்ந்து. ௫கூ.

அந்.—பேர், ஓதம், சிந்து, திரை, ஊடேபோய், (௫) கண்வளரும், பேராளன், பேர், ஓத, சிந்திக்க, (க) வல், வினையார், பேர்ந்து, காடானும், ஆதானும், (கரு) கைக்கொள்ளார், மாடே, வரப்பெறுவராமென்றே. (கஅ)

அர்.—பெரிய, ஸமுத்ரத்தில், சிதறின, அலைகள், உள்ளே (ஸமீபத்தில்) வந்து, (ஸ்பர்சிக்கும்படி,) (௫) கண்வளருகிற, பெருமையையுடையவனுடைய, திருநாமங்களைச், சொல்லவேணுமென்று நினைக்கப்புகில், (க0)க்ரூரமான, பாபமானவர்(நம்மை) விட்டுப்போய், காட்டையாவது, மற்றெதையாவது, (கரு) பற்றுகிறிலர். (இதுக்கடிமுன்போல்,) நம்ஸமீபத்தில், வரலாமென்றோ? (கஅ) ௫கூ.

வ்யா.—ஐம்பத்தொன்பதாம்பாட்டில், (மாடே)(ஊடேபோய்ப் பேரோதம் சிந்துதிரைக்கண் வளரும்பேராளன் பேரோதச் சிந்திக்கப்பேர்ந்து - வல்வினையார் காடானுமாதானும் கைக்கொள்ளார் -

மாடேவரப் பெறுவராமென்றே) கடலில்திரைகள் முறிந்துவந்து சிறுதிவலையாய்த் துடைகுத்தக் கண்வளராநின்று ஆஸ்ரிதவிஷயத்தி லோரத்துக் கெல்லையின்றிக்கேயிருக்கிறவருடைய திருநாமம் சொல்ல நினைத்ததறிந்தால், வல்வினையாரிங்குநின்றும் பேர்ந்து தமக்குப்புகலாக மலையாகிலும் கடலாகிலும் ஏதேனுமொன்று கைக்கொள்ளுகிறிலர்; கைக்கொள்ளாதொழிகிறது என்னருகே வரலாமென்றே? ருகூ.

அநு.—ஐம்பத்தொன்பதாம்பாட்டு—"ஊடேபோய்" - உள்ளேபோய்; திருமேனியண்டையிலேபோயென்றபடி. ருகூ.

பேர்ந்தொன்று நோக்காது பின்னிற்பாய் நில்லாப்பாய்,
ஈன்துழாய் மாயனையே யென்னெஞ்சே,—பேர்ந்தெங்கும்
தொல்லைமா வெந்நரகில் சேராமல் காப்பதற்கு,
இல்லைகாண் மற்றோ ரிறை. சுய.

அந்.—என்நெஞ்சே! தொல்லை, மா, வெம், நரகில், (ரு) சேராமல், காப்பதற்கு, எங்கும், பேர்ந்து, மற்று, (கo) ஓர், இறை, இல்லைகாண். பேர்ந்து, ஒன்று, (கரு) நோக்காது, ஈன், துழாய், மாயனையே, பின்நிற்பாய், (உo) நில்லாப்பாய். (உக)

அர்.—என்னுடைய ஹ்ருதயமே! பழையதாய்ப், பெரிதாய், க்ரூரமான, நரகத்தில், (ரு) அடையாதபடி, ரக்ஷிக்கைக்கு, எங்கேயாகிலும், (இவனை) விட்டு, வேறு, (கo) ஒரு, நிர்வாஹகன், கிடையாதுகிடாய். (ஆகையால்) இவனைவிட்டு,வேறொன்றையும்,(கரு) பாராமல்,போக்யமான, திருத்துழாய் மாலையையுடைய, ஆஸ்சர்யபூதனையே, பின்தொடரிலும் தொடரு; (உo) பின்தொடரா தொழியிலுமொழி. (உக) சுo.

வ்யா.—அறுபதாம்பாட்டில், (பேர்ந்தொன்று) வேறொருபதார்த்தத்தை நோக்காதேயவனை யநுவர்த்திக்கிலு மநுவர்த்தி, உனக்குரியையாய் அநர்த்தப்படிலும்படு. (ஈன்துழாயித்யாதி) ஸம்ஸார ஸம்பந்தமறுகைக்கு எங்குப்புக்காலு மவனையொழிய ஆஸ்ரயணீய தத்வமில்லை. அவனையநுவர்த்தி; ஸ்வதந்த்ரமாய்க் கெடிலுங்கெடு.

அநு.—அறுபதாம்பாட்டு — [என் நெஞ்சே! தொல்லைமாவெம்நரகில் சேராமல் காப்பதற்கு எங்கும்பேர்ந்துமற்றோரிறையில்லைகாண் - ஆனபின்பு பேர்ந்தொன்று நோக்காது - ஈன்துழாய்மாயனையே - பின்நிற்பாய், நில்லாப்பாய்] என்றந்வயம். சுய.

இறைமுறையான் சேவடிமேல் மண்ணளந்த வந்நாள்,
மறைமுறையால் வானாடர்கூடி,—முறைமுறையின்
தாதிலகு பூத்தெளித்தா லொவ்வாதே, தாழ்விசும்பின்
மீதிலகித் தான் கிடக்கும் மீன். சுக.

அந்.—இறை, முறையான், மண், அளந்த, சே, (ரு) அடிமேல்,அந்நாள், வானாடர், கூடி, முறைமுறையின், (கo)மறை முறையால், தாது, இலகு, பூ, தெளித்தாலொவ்வாதே, (கரு) தாழ், விசும்பின்மீது, இலகி, கிடக்கும், மீன் தான். (உo)

அர்.—ஸ்வாமியான, ப்ராப்தியையுடையவனுடைய, பூமியை, ஆக்ரமித்த, சிவந்த, (ரு) திருவடிகளின்மேலே, அந்த த்ரிவிக்ர மாவதாரகாலத்தில், தேவர்கள், சேர்ந்து, வரிசைக்ரமமாயிருந்து, (கo) வேதோக்தப்ரசாரத்தினால், தாதுகளினாலே, விளங்காநின்றுள்ள, புஷ்பங்களைச், சிதறினாற்போலேயிருந்தது, (கரு) வெளியான, ஆகாசத்தின்மேல், ஒளிவிட்டுப், பரம்பியிருக்கிற, நக்ஷத்ரங்கள். (உo) சுக.

வ்யா.—அவ.—அறுபத்தோராம்பாட்டில்,(இறை) †லோகயாத்ரையை அநுஸந்திக்கப்புக்காலும் அவனைமுன்னாகவல்லது காணமாட்டாமை சொல்லுகிறது. சிறியாச்சான்,“சப்தாதிவிஷயங்களில் நின்றும் நாம்மீளமாட்டாதாற்போலே ஆழ்வார்கள் பகவத்விஷயத்தில் நின்றும்மீளமாட்டார்கள்” என்று பிள்ளைக்குப்பணித்தான். ப்ரஹ்மாதிகளுக்குப் பரமபதத்திலிருக்குமிருப்பு அநுபவிக்க நிலமன்று, உகந்தருளினவிடங்களிலே யநுபவிக்குமத்தனை.

(இறையித்யாதி) ஈஶ்வரனான முறையாலே திருவுலகளந்தருளினவனுடைய திருவடிகளிலே. (வானாடரித்யாதி) தேவர்கள்வேதம் சொன்னமுறையாலே திருவுலகளந்தருளின திருவடிகளிலே உஜ்ஜ்வலமான புஷ்பங்கள் தெளித்தாற்போலேயன்றோ? ஒத்தவிசும்பின் மேல் கிடக்கிற நக்ஷத்ரங்களிருக்கிறது. சுக.

அரு.—அறுபத்தோராம்பாட்டு — (லோகயாத்ரை) - ஆகாசத்தைப் பார்க்கை. புறம்பே கண்வைக்கும்போதும் அவனையொழியக் கண்வையார்களென்னுமதுக்கு ஸம்வாதமாக அருளிச்செய்கிறார் (சிறியாச்சான்) இத்யாதி. “முறைமுறையின்” - முறைமுறையாக - வரிசையடைவே. [இறைமுறையான் மண்ணளந்த சேவடிமேல் அந்நாள்வானாடர்கூடி, முறைமுறையின்-முறை முறையாக, தாதிலகு தொடங்கி—கிடக்கும்] என்றந்வயம். சுக.

மீனென்னும் கம்பில் வெறியென்னும் வெள்ளிவேய்,
வானென்னும்கேடிலா வான் குடைக்குத்,—தானோர்
மணிக்காம்புபோல் நிமிர்ந்து மண்ணளந்தான், நங்கள்
பிணிக்காம் பெருமருந்து பின். சுஉ.

அந்.—மீன்என்னும், கம்பில், வெறி, வெள்ளி, என்னும், (ரு) வேய், வான்என்னும் கேடுஇலா, வான், குடைக்கு, (கo) தான், ஓர், மணிக்காம்பு போல், நிமிர்ந்து, மண் அளந்தான், (கரு) பின், நங்கள்பிணிக்கு, பெருமருந்து, ஆம். (கசு)

அர்.—நக்ஷத்ரங்களாகிற, கம்புகளையுடையதாய், நக்ஷத்ரங்களுக்குஅரசனாகிய சந்த்ரன், சுக்ரன், என்று ப்ரஸித்தமானவற்றைக், (ரு) குழையாக உடைத்தாய், ஆகாசமென்று பேரையுடைய, அழிவில்லாத, பெரிய, குடைக்குத் (கo) தான், ஒரு, நீலமணிமயமான காம்புபோல், வளர்ந்து, பூமியையளந்தவன், (கரு) அதற்குமேல், நம்முடைய (ஸம்ஸாரமாகிற) நோய்க்குப், பெரிய, ஔஷதமாவான், (கஅ) சுஉ.

வ்யா.—அறுபத்திரண்டாம்பாட்டில், (மீனித்யாதி) நக்ஷத்ரங்களாகிற கம்புகளையும், (க) "உடுபதி" என்னுமாபோலே நக்ஷத்ரங்களுக்கு ராஜாவான சந்த்ரசுக்ரர்களைக் குழலாக உடைத்தான,நித்யமாய்ப் பெருத்த ஆகாசமாகிறகுடைக்கு நீலமணியாலே சமைந்ததொரு காம்புபோலே வளர்ந்து பூமியையளந்தான். (நங்களித்யாதி)திருவுலகளந்து தேவர்களுடைய துஃகத்தைப்போக்கினாற்போலே நம்முடைய ஸம்ஸாரத்துக்கு பரமான ஔஷதம். சுஉ.

அரு.—அறுபத்திரண்டாம்பாட்டு.—மண்ணளந்தஅபாதாநத்தைக்குடையுங் காம்புமாக்கி நிரூபிக்கிறார். (வெறி) சந்த்ரன். தாராபதி. (வெள்ளி) சுக்ரன் இவர்கள். "வேய்" என்று குடையிலடியிலே யிருக்கிற மூங்கில் குழல்.

பின்துரக்கும் § காற்றிழந்த சூல்கொண்டல் பேர்ந்தும்போய்,
வன்திரைக்கண் வந்தணைந்த வாய்மைத்தே,—அன்று
திருச்செய்ய நேமியான் தீயரக்கி மூக்கும்,
† பருச்செவியு மீர்ந்த பரன். சுங.

(க)

§ ப்ராசீந தாளபத்ர மூலவ்யாக்யாந கோசங்களில் காற்றிழந்த என்ற பாடம் வ்யாக்யாநத்துக்கும் சேர்ந்திருக்கும். ஆதுநிககோசங்களில் மாத்ரம் காற்றிழிந்த என்று காண்கிறது.

† பரிச்செவியும் என்றுரையில் பாடம். பரி - குதிரையினுடைய செவி போன்ற என்று பொருள்.

அந்.—பின், துரக்கும், காற்று, இழந்த, சூல், (ரு) கொண்டல், திரு, செய்ய, நேமியான், அன்று, (க0) தீ, அரக்கி, மூக்கும், பரு, செவியும், (கரு) ஈர்ந்த, பரன், பேர்ந்தும், போய், வன், (உ0) திரைக்கண், வந்து, அணைந்த, வாய்மைத்து. (உச)

அர்.—பின்னேநின்று, ஓடப்பண்ணுகிற, வாயுவை, விஸ்லேஷித்த (ஸ்வஸ்த்தாநத்திலேயிருக்கிற), கர்ப்பத்தையுடைய, (ரு) மேகமானது, வீர ஸ்ரீயையுடைய, சிவந்த, திருவாழியையுடையனாய், வநவாஸம் சென்ற வன்று, (0) கொடியளான, சூர்ப்பணகையென்னும் ராக்ஷஸியினுடைய, மூக் கையும், பருமனான, செவிகளையும், (கரு) அறுத்த, ஸர்வாதிகன், (இப்பூ மியில்நின்றும்) கிளம்பிச், சென்று, வலிய, (உ0) அலைகளையுடைய திருப் பாற்கடலில், வந்து, சேர்ந்த, ஸ்வபாவத்தை யுடைத்தாயிருந்தது. (உச) சுங.

வ்யா.—அறுபத்துமூன்றாம்பாட்டில், (பின்துரக்குமித்யாதி) பின்னேதுரக்கிறகாற்றையிழந்த சூல்கொண்டல், திரியட்டும் கடலி லேபுக்குக்கிடந்த வாய்மையன்-மெய்யானஒப்பையுடையன், என்று- வாய்மைத்து என்றத்தை வாய்மையனென்று † வசநத்தை மாறாடிக் கொள்ளவுமாம். பருச்செவியுமீர்ந்தபரன்படிஎன்றுஅத்யாஹரித்துக் கொள்ளவுமாம். " ஒன்றுக்கு வசநவ்யத்யயம்பண்ணவேணும், ஒன் றுக்கு படிஎன்று அத்யாஹரிக்கவேணும்; இரண்டுமிறுக்குமொ ழிய உபமாநோபமேயங்களைமாறாடாதே நேரேயோஜிக்கப்போம்" என்று ஜீயருக்குவிண்ணப்பம்செய்தபடி. [பின்துரக்கும்காற்றிழந்த சூல்கொண்டல் - அன்றுதிருச்செய்ய நேமியான் தீயரக்கிமூக்கும் பருச்செவியுமீர்ந்தபரன் - பேர்ந்தும்போய், வன்திரைக்கண் வந்த ணைந்த வாய்மைத்து] பின்துரக்குங் காற்றிழந்த சூல்கொண்டல் பெருமாள் ராவணவிஜயம்பண்ணி, திரியட்டும் திருப்பாற்கடலிலே போய்க் கண்வளர்ந்தாற்போலே யிருந்தது. சுங.

அரு.—அறுபத்துமூன்றாம்பாட்டு—(வசநத்தைமாறாடுகை) - வாய்மைத் தென்ற நபும்ஸகத்தை வாய்மையன்என்று புல்லிங்கமாக்குகை. படியெ ன்று ஸ்வபாவமாய்,அத்யாஹார்ய பக்ஷத்தில் லிங்கவ்யத்யயம் வேண்டா. நம் பிள்ளைக்கு, மேகத்தின் ஸ்வபாவம்போலே யிருக்கிறது, பெருமாள்படி யென் றால் மிறுக்குண்டு; பெருமாளுடைய ஸ்வபாவம்போலே யிருக்கிறது மேகத் தின்படியென்றால் மிறுக்கில்லையென்று கருத்து. மேகமானது ராவணவதம் பண்ணித் திருப்பாற்கடலிலே அணைந்தவாய்மைத்து - ஸ்வபாவத்தை யுடை த்து என்றுபலிதம். சுங.

பரனுமவனுதல் பாவிப்பராகில்,
உரனு லொரு மூன்றுபோதும்,—மரமேழன்
றெய்தானைப் புள்ளின்வாய் கீண்டானையே, அமரர்
கைதான் தொழாவே கலந்து. சுச.

அந்.—அன்று, எழ்மரம், எய்தானை, புள்ளின்வாய், கீண்டானை, (ரு) பரனுமவனுதல், உரனல், ஒரு, மூன்றுபோது, பாவிப்பராகில், (கo) அமரர், கைதான், கலந்து, தொழாவே. (ககூ)

அர்.—முற்காலத்தில், எழுமராமரங்களை, அடித்துவிழவிட்ட சக்ரவர்த்தி திருமகனையும், பகாஸுரனுடைய வாயைக், கிழித்தக்ருஷ்ணனையும், (ரு) பராத்பரனுயிருக்குமவனென்று, ஹ்ருதயத்தினல், அத்விதீயமான, மூன்று (ஸந்த்யா) காலங்களிலும், (தங்களோடு ஸஜாதீயபுத்திபண்ணுமல்) த்யானித்தார்களேயாகில், (கo) தேவதைகளுடைய, கைகள், சேர்ந்து, (அஞ்சலிபண்ணி), ஆஶ்ரயியாவோ? (அவனிடத்தில் ஸஜாதீயபுத்திபண்ணி ஆஶ்ரயியாமல் கெட்டுப்போகிருர்கள்). சுச.

வ்யா.—**அவ.**—அறுபத்துநாலாம்பாட்டில், (பரன்)“மநுஷ்யத்வே பரத்வத்தை யநுஸந்தித்தாராகில் பரமபதமென்று வேறே ஆஶ்ரயணீயஸ்தலம் வேணுமோ?” என்கிறது. (பரனித்யாதி) மநஸ்ஸாலே மூன்றுபோதும் “அவன்பரன்” என்றநுஸந்திப்பராகில் ஆஶ்ரிதவிரோதி நிரஸநம்பண்ணினவனையே, அபிமாநிகளான தேவர்களுடைய கையுங்கலந்துதொழுமிறே; அபிமாநத்தாலே தங்களோடு ஸஜாதீயனுக புத்திபண்ணி அநர்த்தப்படுகிருர்களிறே.

அரு.—அறுபத்துநாலாம்பாட்டு.—இங்கே பரத்வமநுஸந்தித்தால் பரத்வந்தேடிப்பரமபதத்துக்குப்போகவேண்டாவென்றபடி. உரனென்று - உரஸ்ஸாய், அத்நாலே நெஞ்சைச் சொல்லுகிறது. “பாவிப்பராகில்” என்கையாலே, அநுஸந்தித்தால் தொழுவர்கள், அநுஸந்தியாமையாலே தொழார்களென்றபடி. சுச.

கலந்து நலியும் கடுந்துயரை நெஞ்சே,
மலங்கவடித்து மடிப்பான்,—விலங்கல்போல்
தொன்மாலைக் கேசவனைநாரணனை மாதவனைச்,
சொன்மாலை யெப்பொழுதும் சூட்டு. சுரு.

அந்.—நெஞ்சே, கலந்து, நலியும், கடும், துயரை, (ரு) மலங்க, அடித்து, மடிப்பான், விலங்கல்போல், தொல், (கம) மாலை, கேசவனை, நாரணனை, மாதவனை, எப்பொழுதும், (சரு) சொல்மாலை, சூட்டு. (கஎ)

அர்.—ஓமநஸ்ஸே! கூடிநின்று, பாதிக்கிற, க்ரூரமாய், துஃகஹேதுவான பாபத்தை, (ரு) நடுங்கும்படி, புடைத்துத், திருப்பியோட்டுகைக்காக, மலை போன்ற (சலிப்பிக்கவொண்ணாத) வனாய், பழையனாய், (கo) பெரியனாய், அழகியகுழலையுடையனாய், ஆச்ரிதவத்ஸலனாய், ச்ரியஃபதியானவனை (உத்தேசித்து), ஸர்வகாலமும், (கரு) சொல்லாகிறமாலையை (ப்ரபந்தத்தை), ஸமர்ப்பி (ஸ்தோத்ரம்செய்.) (கள) சுரு

வ்யா.—அறுபத்தைந்தாம்பாட்டில், (கலந்து) உடனேவந்து கலந்து நலியாநின்ற அநுபவவிநாச்யமான பாபத்தை மலங்கவடித்துத் திரியவிடுகைக்காக, அபேத்யனாய் அபரிச்சிந்நனாய் ப்ரசஸ்தகேசனாய் ஆச்ரிதவத்ஸலனாயிருந்த ச்ரியஃ பதியை,†பரிமளம்மாறுத மாலையை எப்போதும் சூட்டும்படி தன்னைத்தாழ்த்துத்தரும். சுரு.

அரு.—அறுபத்தைந்தாம்பாட்டு.— ச்ரீஸூக்தியாகையாலே மற்றை மாலையை வ்யாவர்த்தித்து (பரிமளம்மாறுத) என்கிறது.

சூட்டாய நேமியான் தொல்லரக்க னின்னுயிரை,
மாட்டே துயரிழைத்த மாயவனை,—ஈட்ட
வெறிகொண்ட தண்டுழாய் வேதியனை, நெஞ்சே
அறிகண்டாய் சொன்னே னது. சுசு.

அந்.—சூடுஆய, நேமியான், தொல், அரக்கன், இன், (ரு) உயிரை, மாட்டே, துயர்இழைத்த, மாயவனை, ஈட்ட, (கo) வெறி, கொண்ட, தண், துழாய், வேதியனை, (கரு) நெஞ்சே, அறிகண்டாய், அது,சொன்னேன், (கசு.)

அர்.—சூடத்தகுந்த ஆபரணமான, திருவாழியையுடையனாய், பழையனான, ராவணாஸுரனுடைய, இனிய, (ரு) ப்ராணனை, ஸமீபத்தில்நின்று, க்லேசப்படுத்தின, ஆச்சர்யபூதனாய், திரண்ட, (கo) பரிமளத்தை, உடைய, குளிர்ந்த, திருத்துழாய்மாலையையுடையனாய், வேதப்ரதிபாத்யனான ஸர்வேச்வரனை, (கரு) ஓமநஸ்ஸே! தெரிந்துகொள்; அந்தரஹஸ்யத்தைச், சொன்னேன். (கசு) சுசு.

வ்யா.—அறுபத்தாறும்பாட்டில், (சூட்டாயநேமியான்) விரோதிநிரஸநம்பண்ணுகையன்றிக்கே யழகுக்குமான திருவாழியையுடையவன். (தொல்லரக்கனித்யாதி) ராவணன் பேணிப்போந்தஉயிரை, அருகே ஸ்ம்ருதிவிஷயமாய்நின்று முடித்த ஆச்சர்யபூதனை. (க) “ స్మరన్ రాఘవబాణానాం వివ్యథే రాక్షసేశ్వరః” ஸ்மரந்ராகவபாணாநாம்விவ்யதே ராக்ஷஸேச்வரஃ” ஆண்டபடையெல்லாம் பெருமா

(க) ஸ்ரீராமா - யுத்த. சுo - ரு.

ளென்றெழுத்து வெட்டின திருச்சரங்களை நினைத்துக்கிடந்து குலைக்கும்போது அழுக்குகைக் குடலானதன்னை. (ஈட்டவித்யாதி) பரிமளம்திரண்ட திருத்துழாயை யுடையவனுமாய் வேதங்களாலே ப்ரதிபாத்யனுமானவனை. நெஞ்சே! அறிகண்டாய் சொன்னேனுனக்கு அத்தை. விரோதிநிரஸநம்பண்ணுவானுமாய் போக்யனுமாய் வகுத்தவனுமானவனை அறி என்று சொன்னேன், இதுசிலர்க்குச் சொல்லுமதன்று, இத்தை புத்திபண்ணு. சுசு.

அரு.—அறுபத்தாறும்பாட்டு - அப்படி ஸ்ம்ருதிவிஷயமாய் துஃகப்பட்டானேவென்ன அருளிச்செய்கிறார் (ஸ்மரந்) இத்யாதி. வேதவேத்யனென்கையாலே வகுத்தவனென்கிறது. சுசு.

அதுவோ நன்றென் றங் கமருலகோ வேண்டில்,
அதுவோ பொருளில்லையன்றே,—அதுவொழிந்து
மண்ணின்றாள்வேனெனிலும் கூடுமட நெஞ்சே,
கண்ணன்தாள் வாழ்த்துவதே கல். சுஎ.

அந்.—அது, நன்றுஎன்று, அங்கு, அமர், உலகு, (ரு) வேண்டில், அது, பொருள்இல்லையன்றே அதுஒழிந்து, மண், நின்று, (கo) ஆள்வேன் எனிலும், கூடும், மடம், நெஞ்சே, கண்ணன், (கரு) தாள், வாழ்த்துவதே, கல். (கஅ)

அர்.—அந்த பகவதநுபவம், விலக்ஷணமென்று (அறிந்து), அவ்வநுபவயோக்யமாய், நித்யஸூரிகள் நித்யவாஸம்செய்கிற, லோகத்தை (பரமபதத்தை) (ரு) அபேக்ஷிக்கில், அது, ஒருசரக்கில்லையன்றோ? (பெறுதற்கு அசக்யமன்று). அதைவிட்டு, பூமியிலிருந்து, (கo) (போகங்களை) புஜிக்கக் கடவேன் என்றாலும், ஸம்பவிக்கும். (ஸர்வேஸ்வரன் உபயவிபூதியையும் கொடுக்கும்). விதேயமான, மநஸ்ஸே! (அவற்றைவிட்டு) கண்ணனுடைய, (கரு) திருவடிகளை, மங்களாசாஸநம்பண்ணுவதையே, அப்யஸிக்கக்கடவாய். (கஅ) சுஎ.

வ்யா.—அறுபத்தேழாம்பாட்டில், (அதுவித்யாதி) கண்கண்டதொழியப்போகை † யரிது. † இது பொல்லாதென்று "பரமபதம் வேணும்" என்றிருக்கில் அவனுகப்பதாகையாலே அது தருகையிலவனுக்குப் பொருளில்லை. (அன்றேயித்யாதி) அதுவொழிய "பூமியையாள்வோம்" என்று நினைக்கில் அதுவும்தரும். (மடநெஞ்சே இத்யாதி) பவ்யமானநெஞ்சே! அவனுக்கோ அது தருகையில்குறையில்லை, நம்முடைய ஆபிமுக்யமரிது. (கண்ணன்) ஸௌலபனனவனுடைய திருவடிகளைக்கற்றாகிலும் வாழ்த்தப்பார். சுஎ.

அ௩.—அறுபத்தேழாம்பாட்டு—(அரிது) ஆசைப்பட்டும் போகையரிது. காணுதத்தையாசைப்பட்டாலும் தருமென்றபடி. "அது" என்கையாலே, அதுக்குப் ப்ரதிகோடியாக, "இது" என்று ஸம்ஸாரம் (பொல்லாதென்று பரமபதம் வேணுமென்று இருக்கில்) என்கிறது. அவன் உபயவிபூதியுந் தந்தாலும் நீ அத்தைவிட்டு அவனை வாழ்த்துகையையே கல்லென்றபடி, சுஎ.

கல்லும் கனைகடலும் வைகுந்தவானுடும்,
புல்லென்றொழிந்தனகொ லேபாவம்,—வெல்ல
நெடியான்நிறங்கரியா னுள் புகுந்து நீங்கான்,
அடியேன துள்ளத் தகம். சுஅ.

அ௩.—வெல்ல நெடியான், நிறம் கரியான், உள்புகுந்து, அடியேனது, உள்ளத்துஅகம், (ரு) நீங்கான், கல்லும் கனை, கடலும், வைகுந்தம், (க0) வான், நாடும், புல்என்று, ஒழிந்தனகொல், ஏபாவம். (கரு)

அர்.—மிக்க உயர்த்தியையுடையனுய், நிறத்தால் கரியனுனவன், உள்ளே ப்ரவேசித்து, அடியேனுடைய, ஹ்ருதயத்தினுள்ளில் நின்றும், (ரு) பிரிகிறிலன். (ஆகையால்) திருமலையும், கோஷிக்கிற, திருப்பாற்கடலும், ஸ்ரீவைகுண்டமென்கிற, (க0) பரமாகாசத்திலுள்ள, தேசமும், அல்பமென்னும்படி போய்விட்டது. என்னபாவம்! (கரு) சுஅ.

வ்யா.—அவ.—அறுபத்தெட்டாம்பாட்டில், (கல்லும்) கீழவனுடைய திருவடிகளை வாழ்த்துகையொழிய போகமோக்ஷங்களை வேண்டாவென்னும்படி தம்முடைய † ஐக்யம்சொல்லுகிறது.

(கல்லுமித்யாதி) திருமலையை "கல்" என்றும், திருவனந்தாழ்வானை "பாம்பு" என்றும், தன்னை "மாணியாய் மண்ணளந்தாய்" என்றும் சொல்லலாம்படி உறவுடைமையிருக்கிறபடி. திருமலையும் திருப்பாற்கடலும் பரமபதமுமென்கிற தேசங்கள் சில §உளவாகவுமாம்; அவற்றிலேதனக்கு ருசியுண்டாகவுமாம்; தோற்றும்படி இருக்கிறிலன். என்னோடு கலந்தபின்பு, † ஸௌபரி ஐம்பதுபெண்களோடே கலந்துபோருகிறவிடத்தில் தன்மக்களைத் தனித்தனியே பிதா "உனக்குக் குறையில்லையே" என்று கேட்க, "என்னுடன்பிறந்தாரை ஒருத்தரையுமறியாதே எப்போதுமென்னோடேயிருக்குமிதுவே வெறுப்பு, வேறொரு குறையில்லை" என்று சொன்னாற்போலே இவரும் "தம்முடைய எல்லா ஸ்தாநங்களையும்

---

§ அரும்பதத்துக்கு "அளவாகவுமாம்" என்று பாடமாய் இப்படி சில ப்ரதேசங்கள் விசாலமாக இருக்கவுமாமென்று அர்த்தம்.

மறந்து என்னையல்லதறிகிறிலர்'' என்கிறார். (ஏபாவம்) †பாபத்தினுடைய ப்ராசுர்யத்தைச் சொல்லுகிறது; விவக்ஷிதார்த்தமாக ஒரு சப்தத்தைப் ப்ரயோகியாமையாலே. (வெல்லநெடியான்) கடக்க நெடியான்; இனி நெடியானில்லையென்னும்படி நெடியவன். (நிறங்கரியான்) குணங்களில்லை யென்னிலும் விடவொண்ணாத வடிவழகையுடையவன். (உள்புகுந்தித்யாதி) அடியேனுடைய ஹ்ருதயத்தினுள்ளே நீங்குவானாயிருக்கிறிலன். "புறப்படிலிவனைக் கிடையாது'' என்னும்படி யிராநின்றான். சுஅ.

அரு.—அறுபத்தெட்டாம்பாட்டு—(ஐக்யம்) - அவன் தம்மிடத்திலே வந்திருக்கையாலே அவனுக்கும் தமக்குமுண்டான ஐக்யமிப்பாட்டிலே சொல்லுகிறதென்றபடி. திருமலையைக் கல்லென்னலாமோவென்ன அருளிச்செய்கிறார் (திருமலை) இத்யாதி. (அளவாகவும்) - விசாலமாகவும் - "புல்லென்று'' புல்லியதாக, குறையாக நினைத்து. ஆறுலந்தஸ்த்தலங்களிலில்லையோவென்ன அருளிச்செய்கிறார் (ஸௌபரி) இத்யாதி. எல்லாஸ்த்தலங்களையும் விட்டுவிட்டானே என்கிற வெறுப்பாலே (பாபத்தினுடையப்ராசுர்யம்) என்கிறது. விவக்ஷிதார்த்த வாக்யந்தெரியாது. "வெல்ல" ஐயிக்க என்னுதல், மிகவுமென்னுதல். சுஅ.

அகம்சிவந்த கண்ணினராய் வல்வினைய ராவார்,
முகம்சிதைவராமன்றே முக்கி,—மிகுந்திருமால்
சீர்க்கடலை யுள்பொதிந்த சிந்தனையேன் றன்னை,
ஆர்க்கடலாம் செவ்வே யடர்த்து. சுகூ.

அந்.—வல், வினையராவார், அகம் சிவந்த, கண்ணினராய், முக்கி, (ரு) முகம் சிதைவராமன்றே, மிகும், திருமால், சீர் கடலை, உள்பொதிந்த, (க0) சிந்தனையேன்தன்னை, செவ்வே, அடர்த்து, ஆர்க்கு, அடலாம். (கரு)

அர்.—க்ரூரமான, பாபமானவர், (தனக்கிருக்கப் பெருமையாலே கோபத்தினால்) உள்ளே சிவந்த, கண்களையுடையராய், வருந்தி, (ரு) முகம் வாடினவராவரத்தனை யன்றோ? ஸர்வாதிகனான, ஶ்ரியඃபதியினுடைய, கல்யாண குணங்களாகிற ஸமுத்ரத்தை, உள்ளே அடக்கின, (க0) ஹ்ருதயத்தையுடைய என்னைச் செவ்வையாக, நெருக்கி, ஆர்க்குத்தான், உபத்ரவிக்கப் போகும்? (கரு) சுகூ.

வ்யா.—அவ.—அறுபத்தொன்பதாம்பாட்டில், (அகம்) இவன் பண்ணின ஐகாந்த்யத்தாலே சரீராரம்பத்துக்கடியான பாபமும் போயிற்று என்கிறார்.

(அகமித்யாதி) முதலியாராய் வர்த்தித்த நம்பாபத்தினர் கோபத்தினலே சிவந்தகண்ணையுடையராய், "செருக்கராய்த் திரிந்த நாமிப்படிபடுவதோ?" என்று முக்கி முகம் கீழ்ப்பட்டு, இழப்புண்டு சிதைந்தமுகமுமாய்த் திரியுமத்தனையிறே. (மிகுமித்யாதி) (க) "గుణానామాకరో మహాన్ – குணநாமாகரோமஹாந்" என்று அபரிச்சிந்நவிஷயத்தைப் † பரிச்சிந்நமாக்கினேன். (சிந்தனையித்யாதி) இனியென்னைப் பரிச்சிந்நர்க்குப் புகுந்து நேரே நலியப்போமோ?

அந.—அறுபத்தொன்பதாம்பாட்டு.—"உள்பொதிந்த" என்கையாலே (பரிச்சிந்நமாக்கினேன்) என்கிறது. "செவ்வேயடர்த்து ஆர்க்கடலாம்?" என்னை ஒருத்தர்க்கு மடர்க்கப்போகாதென்றபடி. — சுகூ.

அடர்பொன் முடியானை யாயிரம்பேரானைச்,
சுடர்கொள் சுடராழியானை,—இடர்கடியும்
மாதாபிதுவாக வைத்தே னெனதுள்ளே,
யாதாகில் யாதேயினி. (எO)

அந்.—அடர், பொன், முடியானை, ஆயிரம்பேரானை, சுடர்கொள், (ரு) சுடர், ஆழியானை, இடர், கடியும், மாதாபிதுவாக, (கO) எனது உள்ளே, வைத்தேன், இனி, யாதுஆகில், யாது. (கரு)

அர்.—§ பொருந்திய, அழகையுடைய, கிரீடத்தையுடையனாய், ஸஹஸ்ரநாமங்களையுடையனாய், அழகியதேஜஸ்ஸையுடைய, (ரு) உஜ்ஜ்வலமான, திருவாழியையுடையனானவனை, துக்கத்தைப், போக்கும், மாதாபிதாக்களாக, (கO) என்னுடைய ஹ்ருதயத்திலே, இருத்தினேன். இனி, (பாபத்தின் நாசத்திலும் வ்ருத்தியிலும்) எதுவாகில், என்ன? (கரு) எO.

வ்யா.—எழுபதாம்பாட்டில், (அடர்பொன்முடியானை) தர்சநீயமாய் ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகத்தையுடையவனை. இவ்வழகுக்கு வாசகமான அநேகந்திருநாமங்களையுடையவனை. (சுடர்கொள்சுடராழியானை) விரோதிநிரஸநத்துக் கன்றிக்கே அழகுக்குமான திருவாழியையுடையவனை. (இடரித்யாதி) சரீரத்தைப்பூண்கட்டி இடரைவிளைக்கும் மாதாபிதாக்களிறே யல்லாதார். † இவன் சரீரபரிக்ரஹம்பண்ணுகைக்கு நோன்புநோற்கு மவர்களிறே யவர்கள். (யாதாகில்யாதேயினி) இனி பாபந்தன்னை யநுபவிக்கிலெனக்கு வந்ததென்? எO.

(க) ஸ்ரீராமா - கிஷ்கி - கரு - உக.

§ சத்ருக்களை அடர்க்கிற என்று அரும்பதாநு குணமான அர்த்தம்.

அரு.—எழுபதாம்பாட்டு.—(அடர்பொன்முடி) அடர் - எல்லாரையுமடர்க்கிற முடியென்றபடி. பூண்கட்டுகைக்கு ஜ்ஞாபகமேதென்ன அருளிச்செய்கிறார் (இவன் சரீர) இத்யாதி. "யாதாகில் யாதே" - பாபத்தையநுபவிக்கிலென்? அநுபவியாதொழியிலென்? பாபநிமித்தமாக பயமில்லையென்றபடி.

இனிநின்று நின்பெருமை யானுரைப்ப தென்னே,
தனிநின்ற சார்விலா மூர்த்தி,—பனிநீர்
அகத்துலவு செஞ்சடையா னகத்தான், நான்கு
முகத்தான் நின்னுந்தி முதல். எக.

அந்.—தனி, நின்ற, சார்வுஇலா, மூர்த்தி, பனி, (ரு) நீர், அகத்து, உலவு, செம், சடையான், (கo) ஆகத்தான், நான்குமுகத்தான், நின்உந்தி, முதல், இனி, (கரு) யான், நின்று, நின்பெருமை, உரைப்பது, என்னே. (உo)

அர்.—ஒருவனுமே, (காரணமாய்) நின்றவனாய், (வேறொரு) ஆஸ்ரயமில்லாத, ஸர்வேஸ்வரனே! குளிர்ந்த, (ரு) ஜலத்தையுடைய கங்கை, உள்ளே, ஸஞ்சரிக்கிற, சிவந்த, சடையையுடைய ருத்ரன், (கo) (உன்) திருமேனியையாஸ்ரயித்து வஸிக்கிறான். சதுர்முகனான ப்ரஹ்மா, உன்னுடைய திருநாபியைக், காரணமாக உடையவன். இனிமேல், (கரு) நான், உத்யுக்தனாயிருந்து, உன்மஹிமையைச், சொல்லுவது, எங்ஙனே! (என்னாலே பேசமுடியாது). எக.

வ்யா.—அவ.—எழுபத்தோராம்பாட்டில், (இனி) "ப்ரஹ்மருத்ராதிகளுக்ககப்பட உடம்புகொடுத்தான்" என்கிற நீர்மையைச் சொல்லிற்றாகவுமாம்; "அவர்களுக்கு ஸத்தாஹேதுவானான்" என்கிற ஐஸ்வர்யத்தைச் சொல்லுகிறதென்றுமாம்.

(இனியித்யாதி) உன்னைஸ்வர்யத்தை நான்தானே சொல்லுவதுண்டோ? வென்னவுமாம்; உன்னுடைய நீர்மையை நான்சொல்லுவதுண்டோ? வென்னவுமாம். (தனியித்யாதி) கார்யஜாதமெல்லா மழிந்துகாரணாவஸ்த்தமாய், நாமரூபவிபாகாநர்ஹமாய், "தான்" என்கிற சொல்லிலேயடங்கித் தனக்கு வேறொரு அபாஸ்ரயமின்றிக்கே நின்றவனே! (க) "పతిం విశ్వస్య-பதிம்விஸ்வஸ்ய" என்ன, (க) "ఆత్మేశ్వరమ్-ஆத்மேஸ்வரம்" என்னுமாபோலே. (உ) "రుద్రంస మాశ్రితా దేవా రుద్రో బ్రహ్మాణమాశ్రితః- ருத்ரம்ஸமாஸ்ரிதா தேவா ருத்ரோப்ரஹ்மாணமாஸ்ரிதः" என்றித்யாதிப்படியே. † தனக்குச் சேர்த்துச்சொல்லலா மொப்பையுடையனல்லனென்றுமாம். (பனி

(க) தைத்திரியோபநிஷத் - ௬ - கக. (உ) விஷ்ணு தர்மம்.

நீரித்யாதி) கங்கையை ஜடையிலேதரித்தானு யிருக்கிறருத்ரன், (க) "வலத்தனன்" என்னுமாபோலே உன்னுடைய திருமேனியிலேகதேசத்திலானுன். (நான்கித்யாதி) சதுர்முகன் உன்னுடைய திருநாபியைக் காரணமாகவுடையவன். இனிநின்பெருமை யானுரைப்பதென்னே! எக.

அரு.—எழுபத்தோராம்பாட்டு.—"சார்வு" ஆஶ்ரயமாதல், ஒப்பாதல்.

முதலாம் திருவுருவம் மூன்றென்பர், ஒன்றே
முதலாகும் மூன்றுக்கு மென்பர்,—முதல்வா
நிகரிலகு காருருவா நின்னகத்த தன்றே,
புகரிலகு தாமரையின் பூ. எஉ.

அந்.—திருஉருவம், மூன்று, முதலாம், என்பர், மூன்றுக்கும், (ரு) ஒன்றே, முதலாகும், என்பர், முதல்வா, நிகர், (கo) இலகு, கார், உருவா, புகர், இலகு, (கரு) தாமரையின்பூ, நின் அகத்ததன்றே. (கள)

அர்.—அழகிய ரூபத்தையுடைய, (ப்ரஹ்மவிஷ்ணுசிவாத்மகமான) மூன்றுவஸ்துக்கள், ஜகத்காரணங்களாகும், என்று (சிலர்) சொல்வர். இம்மூன்று வஸ்துக்களுக்கும், (ரு) (மேலானது) ஒரு வஸ்துவே, காரணமாகும், என்று (சிலர்) சொல்வர். ஜகத்காரணபூதனே! தகுதியாய், (கo) விளங்குகிற, மேகம்போன்ற, திருமேனியை யுடையவனே! (ஜகத்காரணத்வப்ரயுக்த) தேஜஸ்ஸினுல், விளங்குகிற, (கரு) தாமரைப்பூ, உன்னுடைய திருமேனியிலுண்டானதன்றோ? (கள) எஉ.

வ்யா.—அவ.—எழுபத்திரண்டாம் பாட்டில், (முதலாம்) கீழ்ப்பாட்டிலே "எல்லார்க்குமாஶ்ரயணீயன்" என்று சொல்லிற்று; இதிலே, வேறு ஸமாஶ்ரயணீயராயிருப்பாரும் ஆஶ்ரயிப்பாரும் சிலருமுண்டாயிருக்க "இவனே யாஶ்ரயணீயன்" என்று சொல்லும்படி எங்ஙனேயென்ன, அல்லாதாருடைய மதங்களை உபஸ்த்தாபித்து தூஷித்து ஸ்வஸித்தாந்தத்தை யருளிச்செய்கிறுர்.

(முதலித்யாதி) ஜகத்துக்குக் காரணபூதர் மூவரென்பர்கள். (ஒன்றித்யாதி) மூவர்க்குங் காரணபூதன் வேறேயொருவனென்பர்கள். "என்பர்" என்கிற வித்தால் ஸ்வஸித்தாந்தமன்றென்கிறது. (முதல்வா) இதுக்கெல்லாம் காரணபூதனே! (நிகரிலகு காருருவா) மேகமென்று சொல்லலாம்படி வடிவையுடையவனே! (நின்னகத்தவித்யாதி) ப்ரஹ்மாவுக்கு உத்பத்திஸ்த்தாநமான தாமரைப்பூ உன் திரு

(க) திருவாய்மொழி. ச - ரு - கூ.

னாயியதன்றே? இத்தால், ப்ரஹ்மருத்ராதிகளிவனுக்கு ஸமரல்லரென்னுமிடமும், அவர்களிலேயொருவன் ஜகத்துக்குக் காரணமென்னுமிடமும், †மூவரையுமொழிய வேறொன்று ஜகத்துக்குக் காரணமன்றென்னுமிடமும் சொல்லுகிறது. (க) †"స్రుష్టిస్థిత్యన్తకరణీమ్- ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகரணீம்" இத்யாதி என்னும்படியே. (உ) †"బ్రహ్మవిష్ణురుద్రేన్ద్రాస్తే సర్వే సంప్రసూయన్తే- ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே ஸர்வே ஸம்ப்ரஸூயந்தே" என்கிறவிது-அவதார விஷயம். (ங) †"మధ్యేవిరిఞ్చగిరిశం ప్రథమావతారః - மத்யேவிரிஞ்சகிரிசம் ப்ரதமாவதாரঃ" என்னும்படியே. எஉ.

அந.—எழுபத்திரண்டாம்பாட்டு.—(மூவரையுமொழிய) மூவரிலும் ப்ரதாநராயிருக்கிற விஷ்ணுவையுமொழிய. மூவரிலுமவனே காரணமென்னுமதுக்கு ப்ரமாணமருளிச்செய்கிறார் (ஸ்ருஷ்டிஸ்திதித்யந்த கரணீம்) இத்யாதி. விஷ்ணுவுக்கும் பிறப்புண்டாகச் சொல்லாநிற்க அவன் காரணமானபடி எப்படி என்ன அருளிச்செய்கிறார் (ப்ரஹ்மவிஷ்ணு) இத்யாதி. அவதரித்தானென்றவிடமுண்டோவென்ன அருளிச்செய்கிறார் (மத்யேவிரிஞ்ச) இத்யாதி. எஉ.

பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற,
காவி மலரென்றும் காண்டோறும்,—பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும், அவ்வவை
யெல்லாம் பிரானுருவே யென்று. எங.

அந்.—பூவையும், காயாவும், நீலமும், பூக்கின்ற, காவிமலர், (ரு) என்றும், காண்தோறும், அவ்வவையெல்லாம், பிரான் உருவேஎன்று, பாவியேன், (கo) மெல், ஆவி, மெய், மிக, பூரிக்கும். (கரு)

அர்.—பூவைப்பூவையும், காயாம்பூவையும், கருநெய்தல்பூவையும், பூக்கின்ற, செங்கழுநீர்ப்பூவையும், (ரு) எப்போதும், பார்க்கும்போதெல்லாம், அவ்வவ வஸ்துக்களெல்லாம், எம்பெருமானுடைய திருமேனியென்று நினைத்து, (அநுபவிக்கப்பெறாத) பாபத்தையுடைய என்னுடைய, (கo) ம்ருதுவான, மநஸ்ஸும், சரீரமும், அதிகமாகப், பருமனாகும். (கரு) எங.

வ்யா.—அவ—. எழுபத்துமூன்றாம் பாட்டில், (பூவை) "இவனேயாச்ரயணீயன்" என்றறுதியிட்டால்பின்னை அநுபவமிறேயுள்ளது.

(க) ஸ்ரீவிஷ்ணு புராணம் - க - உ - ருரு. (உ) அதர்வசிகோபநிஷத்.
(ங) ஸ்ரீரங்க ராஜஸ்தவம் - உ - ருக.

(பூவையித்யாதி) பூவை, காயா, நீலம், பூவா நின்ற காவிமலர் இவை கண்டபோதெல்லாம், பிரானுருவேயென்றறிவுடைய நெஞ்சு பூரிக்கையன்றிக்கே உடம்பு மகப்படப் பூரியா நின்றது. எங.

அரு.—எழுபத்துமூன்றும்பாட்டு.—"காவி" செங்கழுநீர் "ஆவி" நெஞ்சு. "மெய்" உடம்பு. எங.

என்று மொருநா ளொழியாமை யானிரந்தால்,
ஒன்று மிரங்கா ருருக்காட்டார்,—குன்று
குடையாக வாகாத்த கோவலனார், நெஞ்சே
புடைதான் பெரிதே புவி. எச.

அந்.—ஒருநாள், ஒழியாமை, என்றும், யான், இரந்தால், (ரு) குன்றம், குடையாக, ஆ, காத்த, கோவலனார், (க0) ஒன்றும், இரங்கார், உருக்காட்டார், நெஞ்சே, புவிதான், (கரு) புடைபெரிது. (கசு)

அர்.—ஒருநாளும், தப்பாமே, ஸர்வகாலத்திலும், நான், யாசித்தால், (ரு) கோவர்த்தநமலையைக், குடையாக (வெடுத்து), பசுக்களை, ரக்ஷித்த, கோபாலன், (க0) கொஞ்சமும், தயைபண்ணுகிறிலர். (தன்) திருமேனியையும் ஸேவிக்கச்செய்யார். ஓ! மநஸ்ஸே! (இந்த) பூமிதான், (கரு) சாலப் பரப்புடைத்தாயிருந்தது (அவர்க்ருபை யேறிப்பாயாத மேடாயிருந்தது.) (கசு) எச.

வ்யா.—அவ.—எழுபத்துநாலாம்பாட்டில், (என்றும்) சரீர பரிக்ரஹம்பண்ணி ருசிபிறந்த பின்பு அபேக்ஷித்தது காலமெல்லா மிரந்தாராய்த் தோற்றுகிறபடி.

(என்று மித்யாதி) காலமெல்லாம் நானிரந்து போர "இருந்த விடத்திலே யிருந்தாலும் இவன் நம்மை இரவாநின்றான்" என்று இரங்குவதும் செய்கிறிலர்; தம் வடிவைக் காட்டுவதும் செய்கிறிலர். (குன்றமித்யாதி) இரங்கியுருக் காட்டாதவர் காட்டிற்றிலராகில் தரிக்கலாமிறே; உபகாரமறியாத பசுக்களுக்குமுதவுமவர் கிடீர் நமக்குதவாதொழிகிறார். (நெஞ்சேபுடைதான் பெரிதேபுவி) அவர்க்கு நீர்மையில்லை யென்னப் போகாதிறே, அவர்நீர்மை யேறிப் பாயாததோரிடந்தேடி எங்கே கிடந்தோம். எச.

அரு.—எழுபத்துநாலாம்பாட்டு.—"புவிபுடைதான் பெரிது" § புடையென்று குழைவாய் அவன்கடாக்ஷகுழையிலே கிடந்தோமென்றபடி.

§ இந்த அரும்பதம் அநந்விதம்.

புவியு மிருவிசும்பும் நின்னகத்த, நீயென்
செவியின் வழிபுகுந் தென்னுள்ளாய்,—அவிவின்றி
யான்பெரியன் நீபெரியை யென்பதனை யாரறிவார்,
ஊன்பருகு நேமியா யுள்ளு. எரு.

அந்.—புவியும், இரு, விசும்பும், நின் அகத்த, நீ (ரு) என்செவியின் வழி, புகுந்து அவிவுஇன்றி, என்உள்ளாய், யான், (க0) பெரியன், நீ, பெரியை, என்பதனை, யார், (கரு) அறிவார், ஊன், பருகு, நேமியாய், உள்ளு. (உ0)

அர்.—பூமியோடு சேர்ந்த லீலாவிபூதியும், பரந்த, பரமாகாசமும், உன்னுடைய ஸங்கல்பத்திலுள்ளன. நீ, (ரு) என்னுடைய ஶ்ரோத்ரேந்த்ரியத்தின் வழியே, ப்ரவேசித்து, விச்சேதமில்லாதபடி, என்னுடைய ஹ்ருதயத்தில் வாஸம்செய்கிறாய். (இவ்விருவரில்) நான், (க0) பெரியன், நீ, பெரியை, என்கிற விஷயத்தை, யார் தான், (கரு) அறிவார்கள்? (சத்ருக்களின்) ருதிரத்தைப், பாநம்செய்கிற, திருவாழியையுடையவனே! (நீயே) விசாரி. (உ0)

வ்யா.—அவ.—எழுபத்தைந்தாம் பாட்டில், (புவியும்) "உமக்கென்று முதவிலோமாக நீர் சொல்லுவானென்? உருக்காட்டிற்றில்லையே, என்று வெறுக்கும்படி உம்மைப் பண்ணினோமே" என்ன; அத்தை யநுஸந்தித்து "என்னோடொப்பாருண்டோ?" என்கிறார்.

(புவியுமிரு விசும்பும் நின்னகத்த) உபய விபூதியும் நின்ஸங்கல்பத்திலே கிடக்கிறன. (நீ இத்யாதி) உபய விபூதி யுக்தனான நீ என்னுடைய ஶ்ரோத்ரேந்த்ரியத்தின் வழியே புகுந்து விச்சேதமின்றிக்கே என் ஹ்ருதயத்திலே உளையாகாநின்றாய். (யானித்யாதி) உபயவிபூதியையுடைய நீயோ? விபூதிமானையுடைய நானோ? பெரியா ராரென்றறிவாரார்? (ஊனித்யாதி) அப்ரதிஹத சக்தியான நீ அறிவுதியாகிற் சொல்லு. எரு.

அரு.—எழுபத்தைந்தாம்பாட்டு.—"ஊன்பருகுநேமி" சத்ரு சரீரங்களைப்பருகுகிற திருவாழி. எரு.

உள்ளிலு முள்ளம் தடிக்கும் வினைப்படலம்,
விள்ள விழித்துன்னை மெய்யுற்றால்,—உள்ள
உலகளவு யானு முளனுவ னென்கொலோ,
உலகளந்த மூர்த்தி யுரை. எசு.

அந்.—உள்ளிலும், உள்ளம், தடிக்கும், வினை, படலம், (ரு) விள்ள, விழித்து, உன்னை, மெய்யுற்றால், உள்ள, (க0) உலகளவும், யானும், உளனுவனென்கொல், உலகு, அளந்த, (கரு) மூர்த்தி, உரை. (கள)

அர்.—(உன்னை) அநுஸந்தித்த மாத்ரத்தில், (என்) மாஸ்ஸு, பருக்கநின்றது. பாபங்களின், ஸமூஹம், (ரு) (என்னைவிட்டு) நீங்கும்படி, (நீ) கடாக்ஷித்து, உன்னை, (நான்) ஸாக்ஷாத்கரித்தால், இருக்கிற, (கo) லோகங்களெல்லாவற்றிலும், நானும், (பருத்து) உளனுவன்போலே யிராநின்றது, லோகத்தை. ஆக்ரமித்த, (கரு) ஸ்வாமீ ! சொல்லு. (கஎ) எசூ.

வ்யா.—அவ.—எழுபத்தாறும் பாட்டில், (உள்ளிலும்) ஶ்ரவணஜ்ஞாநாநந்தர பாவியான மநநத்தைச் சொல்லுகிறது.

(உள்ளிலு முள்ளந்தடிக்கும்) உன்னை யநுஸந்திக்கில் ஸ்த்தூலமான தேஹம்போலே அமூர்த்தமான ஹ்ருதயம் தடியாநின்றது. (வினையித்யாதி) பாபஸமூஹம் விண்டுபோம்படி நீ பார்த்து. உன்னை ஸாக்ஷாத்கரித்தென்றுமாம். (உள்ள உலகித்யாதி) வ்யாபக தத்வமிரண்டாகிறதுபோலே. (உலகளந்த மூர்த்தியுரை) சிறிய வடிவைக்கொண்டு லோகத்தையெல்லாம் வ்யாபித்திருக்கிற நீயே சொல்லு.

அரு.—எழுபத்தாறும்பாட்டு — "மெய்யுற்றால்" ஸாக்ஷாத்கரித்தால். இங்கே மாநஸ ஸாக்ஷாத்காரமாதல், அங்கேபாஹ்ய ஸாக்ஷாத்காரமாதல், ஜ்ஞாநவ்யாப்தி இவரது. இந்த வாஶ்சர்யத்தை நீ சொல்லென்றபடி. எசூ.

உரைக்கிலோர் சுற்றத்தா ருற்றாரென் றாரே,
இரைக்குங் கடற்கிடைந்த வெந்தாய்,—உரைப்பெல்லாம்
நின்னன்றி மற்றிலேன் கண்டாய், எனதுயிர்க்கோர்
சொல்நன்றி யாகும் துணை. எஎ.

அந்.—உரைக்கில், சுற்றத்தார், உற்றார், என்று, ஓர், (ரு) ஆரே, இரைக்கும், கடல், கிடந்த, எந்தாய், (கo) எனது,உயிர்க்கு,நன்றியாகும், ஓர், சொல், (கரு) துணை, உரைப்பெல்லாம், நின் அன்றி, மற்று, இலேன்கண்டாய். (உo)

அர்.—சொல்லப்புகில், ஜ்ஞாதிகள்,ஸம்பந்திகள்,என்று சொல்லப்பட்ட, ஒருபந்துக்கள், (ரு) (உன்னையொழிய) ஆர்தானுண்டு? கோஷிக்கிற, திருப்பாற்கடலில், கண்வளர்ந்தருளுகிற, என்ஸ்வாமீ ! (கo) என்னுடைய, ஆத்மாவுக்கு, நன்மையை விளைக்கும். அத்விதீயமான, சொல்லை யருளிச்செய்தவனும், (கரு) ஸஹாயமாவானும், (மற்றும்) சொல்லப்படுமெல்லாஉறவும், உன்னைவிட்டு, வேறுசிலரை, உடையேனல்லேன்கிடாய். (உo) எஎ.

வ்யா.—அவ.—எழுபத்தேழாம் பாட்டில், (உரைக்கில்) அறியாதே"நன்று"என்று ப்ரமித்து வேறேசிலருற்றாரென்றிருக்குமத்தனையிறே: †விமர்த்த ஸஹரான பந்துக்கள் வேறுண்டோவென்கிறது.

(உரைக்கிலித்யாதி) "ஆரே" என்று கேட்டால் "வேறு சிலரில்லை நானேயுள்ளேன்" என்று அவன் தனக்குச் சொல்லவேணும்

போல. (இமைக்குமித்யாதி) நித்ய ஸூரிகள் ஸதாநுபவம் பண்ணு நிற்கச்செய்தே திருப்பாற்கடலிலே அவஸரப்ரதீக்ஷனாய் வந்து கிடக்கிறவனே! (உரைப்பித்யாதி) துர்த்தசையில் (க) "ஸர்வ்வஸ்ய:- மாசுச:" என்று நற்சொல்லு சொல்லுமத்தனே. உரைக்கப்படுவ தெல்லாம் உன்னையொழிய வேறொருவரில்லை. எஎ.

அந.—எழுபத்தேழாம்பாட்டு.—(விமர்த்தஸஹர்) பாதகஸஹர். உன்னையொழிய இல்லையென்றபடி. சுற்றத்தார் ஆரென்று "உரைக்கில் நானுளன்" என்று உன்னை யொழியச்சொல்லுவார் "ஆரென்றபடி. உரைப்பெல்லாம்" துணையாக உரைக்கப்படுவதெல்லாவற்றிலும், உன்னையொழியத் துணையில்லையென்றபடி. எஎ.

துணைநாள் பெருங்கிளையும் தொல்குலமும், சுற்றத்
திணைநாளு மின்புடைத்தா மேலும்,—கணைநாணில்
ஓவாத் தொழில்சார்ங்கன் தொல்சீரை நன்னெஞ்சே,
ஓவாத வூணாக வுண். எஅ.

அந்.—துணை, நாள், பெரும், கிளையும், தொல், (ரு) குலமும், சுற்றத்து, இணை, நாளும், இன்பு உடைத்தாமேலும், கணை, (கo) நாணில், ஓவா, தொழில், சார்ங்கன், தொல், (கரு) சீரை, நல், நெஞ்சே, ஓவாத, ஊணாக, (உo) உண். (உக)

அர்.—ஸௌஹ்ருத்தும், ஆயுஸ்ஸும், பெரிய, ஸந்ததியும், அநாதியாய்வருகிற, (ரு) ஆபிஜாத்யமும், பந்துக்களோடு சேர்த்தியும், (இவை) தினம்தோறும், ஸுகஜநகங்களாயினும், பாணங்கள், (கo) நாணில், ஓயாத, வ்யாபாரத்தையுடைய, சார்ங்கத்தைத்தரித்த ஶ்ரியபதியினுடைய, அநாதியான, (கரு) கல்யாண குணங்களை, அநுகூலமான, மநஸ்ஸே! அவிச்சிந்நமான, போக்ய பதார்த்தமாகக்கொண்டு, (உo) அநுபவி. (உக) (எஅ)

வ்யா.—அவ.—எழுபத்தெட்டாம் பாட்டில், (துணை) கீழ் "உற்றாரில்லை" என்றது; உற்றாருண்டாகிலும் ஸம்ஸார மினிதாகிலும் உன்னநுபவத்தையொழியப் புறம்புண்டோ? வென்கிறார்.

(துணைநாளித்யாதி) துணை, ஆயுஸ்ஸு, பெருங்கிளை, ஆபிஜாத்யம், பந்துக்களோட்டைச் சேர்த்தி, இவை நித்யமுமாய் இனிதாயிற்றேயாகிலும். (கணையித்யாதி) என்று மாஶ்ரிதர் கார்யம் மாறாதே செய்துபோருமவருடைய கல்யாண குணங்களை. (நல் நெஞ்சே) ஸோபாதிகபந்துக்களுக்கும் நிருபாதிகபந்துக்களுக்கும் வாசியறியும

(க) கீதை - கஅ - சுசு.

நெஞ்சே! "எம் பெருமானைப் பற்று" என்று சொல்லப் பாங்கான நெஞ்சென்னவுமாம். (ஓவாதவூணாகவுண்) விச்சேதமில்லாத போகமாக புஜி. எஅ.

அநு.—எழுபத்தெட்டாம்பாட்டு.—"இளை" பந்துக்கள். "கணைநாணில்" அம்பானதுநாணிலே இடைவிடாதே வ்யாபரிக்கிற வில்லையுடையவன்.

உண்ணாட்டுத் தேசன்றே யூழ்வினையை யஞ்சுமே,
விண்ணாட்டை யொன்றாக மெச்சுமே,—மண்ணாட்டில்
ஆராகி யெவ்விழிவிற் றானாலும், ஆழியங்கைப்
பேராயற் காளாம் பிறப்பு. எகூ.

அந்.—மண்ணாட்டில், ஆராகி, எவ்விழிவிற்றானாலும், ஆழி, அம், (ரு) கை, பேர்ஆயற்கு, ஆள்ஆம், பிறப்பு, உள்நாட்டு, (க0) தேசு அன்றே, ஊழ், வினையை, அஞ்சுமே, விண்ணாட்டை, (கரு) ஒன்றாக, மெச்சுமே. (கஎ)

அர்.—பூலோகத்தில், எச்சாதியராயினும், எவ்விழி தொழிலராயினும், திருவாழியை, அழகிய, (ரு) திருக்கையிலேந்திய, பெரிய இடையனானக்ருஷ்ணனுக்கு, அடிமைப்படும், ஜந்மம், (ஸர்வேஸ்வரனுக்கு) அந்தரங்கதேசமான திருநாட்டிலிருக்கும், (க0) தேஜஸ்ஸையுடைத்தன்றோ? அநாதியான, பாபத்தை நினைத்து, பயப்படுமோ? ஸ்வர்க்கத்தை, (கரு) ஒருவஸ்துவாகக், கொண்டாடுமோ? (கஎ) எகூ.

வ்யா.—எழுபத்தொன்பதாம்பாட்டில், (உள்நாடு) (ஆழியங்கை யித்யாதி) ஸர்வேஸ்வரனாய் வைத்து இதரஸஜாதீயனாய்ப் பிறந்தவனுக்குக் கைங்கர்யம் பண்ணுகைக்கு யோக்யமான ஜந்மம், பரமபதத்திலிருக்கும் தேஜஸ்ஸை யுடைத்தன்றே என்றுமாம். †உள்நாடென்று பரமபதமாகக் கொள்ளுகிறது-பகவதபிப்ராயத்தாலே. பேராயரென்று - அல்லாத இடையர் நித்யஸூரிகளென்னும்படி இவனுடைய இடைத்தனத்தில்முதிர்த்திசொல்லுகிறது. (ஊழ்வினை யித்யாதி) தான் பண்ணின பாபத்துக்கு அஞ்சுமே? (விண்ணாட்டை யித்யாதி) ப்ரஹ்மாதிகள் குடியிருப்பை ஒன்றாக வெண்ணுமே? (க) "సురపురీ యద్గచ్ఛతో దుర్గతిః-ஸுரபுரீ யத்கச்சதோ துர்க்கதிः" ஸ்வர்க்கத்துக்குப் போம் வழி தண்ணிதென்கிறது. (உ) "నదేవలోకాక్రమణమ్ - நதேவலோகா க்ரமணம்" பறைச்சேரியிலடியிடு

(க) ஸ்ரீ குணரத்ந கோசம் - உ0 (உ) ஸ்ரீ ராமாயணம்-அயோத்யா-ருக-ரு.

மாபோலே ஸ்வர்க்கத்திலடியிடுகை வேண்டே னென்கிறூர். (௧) “తస్యాన్తరాయో మైత్రేయ దేవేన్ద్రత్వాదికం పదమ్- தஸ்யாந்தராயோ மைத்ரேய தேவேந்த்ரத்வாதிகம்பதம்” பகவத்விஷயத்திலே கை வைத்தவனுக்கு அந்தராயமாவது இந்த்ரனுயிருக்குமிருப்பிறே. உள்நாடென்று ஸம்ஸாரமாகக்கொண்ட பக்ஷத்தில், விண்ணுடென்று பரமபதமாகக்கடவது. (மண்ணுட்டி லித்யாதி) ஸம்ஸாரந்தானே தண்ணிது, அதிலே நிஹீந ஜந்மமாகவுமமையும்; எல்லா விழிவையுமுடைத்தாகவு மமையும்; பகவதநுபவயோக்யமான ஜந்மமே வேண்டுவது. இதுக்குப் புறம்பான ஜந்மவ்ருத்தங்கள் அப்ரயோஜநங்கள். எகூ.

அரு.—எழுபத்தொன்பதாம்பாட்டு.—“தேசன்றே” - தேசன்றே?என்றபடி. “உள்நாடு” - பரமபதமாதல், ஸம்ஸாரமாதல். தாமிங்கேயிருக்க அத்தை உள்நாடென்பானென்னென்ன அருளிச்செய்கிறூர் (உள்நாடென்று) இத்யாதி. “அஞ்சுமே” - அஞ்சாதென்றபடி. “ஆராகி” - எந்தஜந்மமாகிலுமாம். “எவ்விழிவில்” எந்த வ்யாபாரமாகிலுமாம். [மண்ணுடுதொடங்கி ஒன்ருக வெண்ணுமே] என்றுக்ரியை. எகூ.

பிறப்பிறப்பு மூப்புப் பிணிதுறந்து, பின்னும்
இறக்கவு மின்புடைத்தா மேலும்,—மறப்பெல்லாம்
ஏதமே யென்றல்லா லெண்ணுவனே, மண்ணளந்தான்
பாதமே யேத்தாப் பகல். அ௦.

அந்.—பிறப்பு, இறப்பு, மூப்பு, பிணி, துறந்து, (ரு) பின்னும், இறக்கவும் இன்பு, உடைத்தாமேலும், மண் அளந்தான், பாதம், (௧௦) ஏத்தா, பகல், மறப்பு எல்லாம், ஏதமே என்றல்லால், எண்ணுவனே. (௧ரு)

அர்.—ஜந்மம், விநாசம், கிழத்தனம், வ்யாதி, (இவற்றை) ஓட்டி, (ரு) அதற்குமேல், அதிக ஸுகமான கைவல்யத்தை,அடைந்தானுகிலும், பூமியையளந்த ஸர்வேஸ்வரனுடைய, திருவடிகளை, (௧௦) ஸ்தோத்ரம் பண்ணுத, தினத்தில்வரும், விஸ்ம்ருதியெல்லாம், துஃகரூபமே என்றல்லது, வேறுருபடி, மநோரதிப்பனோ? (௧ரு) அ௦.

வ்யா.—எண்பதாம் பாட்டில், (பிறப்பித்யாதி) ஸம்ஸார ஸம்பந்தமற்று அளவிறந்த ஆத்மாநுபவ முண்டாயிற்ருகிலும், (மண்ணளந்தான்பாதமே யேத்தாப்பகல் மறப்பெல்லா மேதமேயென்றல்லாலெண்ணுவனே) திருவுலகளந்தருளின நீர்மையையுடைய

(௧) ஸ்ரீ விஷ்ணு புராணம்.

வன் திருவடிகளை யேத்தாத பகலில் மறப்பெல்லாம் துஃகமே என்றல்லது மநோரதிப்பனோ? அ0.

அரு.—எண்பதாம்பாட்டு.— "பின்னுமிறக்கவும்" இறக்கை - அளவிறக்கையாய், மிகவுமென்றபடி. அ0.

பகலிரா வென்பதுவும் பாவியாது, எம்மை
இகல்செய் திருபொழுது மாள்வர்,—தகவாத்
தொழும்பரிவர் சீர்க்குந் துணையிலரென் றோரார்,
செழும்பரவை மேயார் தெரிந்து. அக.

அந்.—செழும், பரவை, மேயார், இவர், தகவா, (ரு) தொழும்பர், சீர்க்கும், துணைஇலர், என்று, தெரிந்து, (க0) ஓரார், பகல், இரா என்பதுவும், பாவியாது, எம்மை, (கரு) இகல்செய்து, இருபொழுதும், ஆள்வர். (கஅ)

அர்.—அழகிய, திருப்பாற்கடலிலே, பொருந்திக் கண்வளர்ந்தருளுகிறவர், இவ்வாழ்வார், (நம்க்ருபைக்குத்) தகாத, (ரு) தாழ்மையை யுடையவர், சீர்மையான (குணாநுஸந்தாநத்துக்குத்தகுதியான), ஸஹாயமுமில்லாதவர், என்று, விசாரித்து, (க0) ஆராயாதவராய், பகற்காலமென்பதையும், இராக்காலமென்பதையும் (குணாநுபவத்துக்கு யோக்யதையையும் அயோக்யதையையும்), விசாரியாமல், எம்மை, (கரு) யுத்தம்பண்ணி (வசீகரித்து), இரண்டு காலங்களிலும், ஆண்டுகொண்டு போருவர். (கஅ) அக.

வ்யா.—எண்பத்தோராம் பாட்டில், (பகலித்யாதி) பகற்போது போக்குவதொன்று இராவைகும்போது போக்குவதொன்று என்று பாராதே எல்லாப்போதுமொருபோகியாகத் தம்முடைய குணங்களாலே எடுப்பும் சாய்ப்புமாக யுத்தம்பண்ணி இரண்டு போதுமாள்வர். † அம்பு பட்ட புண்ணுக்கு மருந்துண்டு; குணத்தாலே யீடுபட்ட புண்ணுக்கு மருந்தில்லையிறே. (தகவித்யாதி) தம்முடைய க்ருபைக்கு மவிஷயமான சிறிதென்றும் தம்முடைய குணங்களைக்கொண்டு (க) * బోధయన్తః పరస్పరమ్ - போதயந்தஃ பரஸ்பரம்பண்ணுகைக்குக் கூட்டுமில்லையென்றும் விசாரியார். (தெரிந்தித்யாதி) ஆஶ்ரிதரோடு ஸம்ஶ்லேஷிக்கும் தேசமாராய்ந்து திருப்பாற்கடலிலே மேவினவர். அக.

அரு.—எண்பத்தோராம்பாட்டு.—போதுபோக்குவர் போதுபோக்கமாட்டாரென்று விசாரியாதே என்றபடி. "இகல்" - யுத்தம். குணமீடுபடுத்து

(க) கீதை - க0 - கூ.

மோவென்ன அருளிச்செய்கிறார் (அம்புபட்டபுண்) இத்யாதி. [தெரிந்து செழும்பரவை மேயார் - தகவாத்தொழும்பரிவர்சீர்க்கும் துணையிலரென்றோ ராதே பகலிராவென்பதுவும் பாவியாதெம்மை இகல்செய் திருபொழுது மாள்வர்] என்றந்வயம். அக.

தெரிந்துணர் வொன்றின்மையால் தீவினையேன், வாளா
இருந்தொழிந்தேன் கீழ்நாள்களெல்லாம்,—கரந்துருவின்
அம்மானை யஞ்ஞான்று பின்றொடர்ந்த, ஆழியங்கை
அம்மானை யேத்தா தயர்த்து. அஉ.

அந்.—தெரிந்து உணர்வு, ஒன்று, இன்மையால், தீவினையேன், அஞ்ஞான்று, (ரு) கரந்த உருவின், அம்மானை, பின்தொடர்ந்த, ஆழி, அம், (கo) கை, அம்மானை, ஏத்தாது, அயர்த்து, கீழ்நாள்களெல்லாம் (கரு) வாளா, இருந்தொழிந்தேன். (கஎ)

அர்.—விசதஜ்ஞாநம், ஏகதேசமும், இல்லாமையால், கொடியபாபத்தையுடையநான், அக்காலத்தில், (ரு) மறைத்த (ராக்ஷஸ) வேஷத்தையுடைய, அந்த (மாயா) ம்ருகத்தை, அநுஸரித்துச்சென்றவராய், அறுகாழியை, அழகிய, (கo) கையிலேயுடையராய், ஸ்வாமியான சக்ரவர்த்தி திருமகனை, ஸ்தோத்ரம்செய்யாமல், அறிவுகெட்டு, கீழ்கழிந்த நாள்களிலெல்லாம், (கரு) வீணாய், இருந்துவிட்டேன். (கஎ) அஉ.

வ்யா.—எண்பத்திரண்டாம்பாட்டில், (தெரிந்துணர்வு) "அது பத்து, இதுஎட்டு" என்னும் ஜ்ஞாநமித்தனையல்லது பகவத்விஷயத்தையாராயும்ஜ்ஞாநமொன்றில்லாமையால். (க) "తద్ జ్ఞానమజ్ఞానమతో உన్యదు క్తమ్-தத்ஜ்ஞாநம்ஜ்ஞாநமதோந்யதுக்தம்" (உ) "విద్యా உన్యాశిల్ప నైపుణమ్-வித்யாந்யாசில்பநைபுணம்" என்னும் ஜ்ஞாநமுண்டாகையால். (தீவினையேன்) பகவதநுபவயோக்யமான காலத்தைப் பாழேபோக்கின பாபத்தைப்பண்ணினேன். (வாளாவித்யாதி) †குனியக்குறுணி பற்றுங்காலமெல்லாம் வ்யர்த்தமேயிருந்தேன். (கரந்துருவித்யாதி) கைகேயிவரத்திலகப்படாவிட்டது பெருமாள் திருக்கையி லறுகாழியொன்றுமேயாகாதே. வடிவைக்கரந்து வர்த்திக்கிற அம்மாயமானை அன்று துடர்ந்த, அறுகாழியைக் கையிலேயுடைய ஸர்வேஸ்வரனை இளையபெருமாளு முதவாததசையிலே ஏத்தப்பெறுவது, அறிவுகெட்டுக்கிடந்த நான் பாழேபோக்கினேன். †"பெரு

(க) ஸ்ரீ விஷ்ணுபு - சு - ரு - அஎ. (உ) ஸ்ரீ விஷ்ணுபு - க - கக - சக.

மாள் மாயமானையெய்து மீண்டெழுந்தருளுகிறபோது அடிக்கொதித்து நடக்கமாட்டாமை தளிர்களை முறித்திட்டு அதின்மேலே எழுந்தருளினார்'' என்று ஒருவன் கவிபாடவும் எம்பெருமானார் கேட்டருளி, ''மாறியிடுகிற திருவடிகளிலே என் தலையை வைக்கப்பெற்றிலேன்'' என்றருளிச்செய்தார். அ௨.

அரு.—எண்பத்திரண்டாம்பாட்டு.—(குனியக்குறுணி) அவதரித்து அல்பாநுகூல்யத்திலே விஷயீகரிக்கும்காலம் போயிற்றென்று தாத்பர்யம். எத்துசை-அடிமையாய், இப்படி யடிமைசெய்யப் பெற்றிலேனென்றிழவுபட்ட பேருண்டோவென்ன அருளிச்செய்கிறார் (பெருமாள்) இத்யாதி. அ௨.

அயர்ப்பா யயராப்பாய் நெஞ்சமே சொன்னேன்,
உயப்போம் நெறியிதுவே கண்டாய்,—செயற்பால
வல்லவே செய்கிறுதி நெஞ்சமே யஞ்சினேன்,
மல்லர்நாள் வவ்வினனை வாழ்த்து. அரு.

அந்.—நெஞ்சமே, செயற்பால அல்ல, செய்கிறுதி, அஞ்சினேன், மல்லர், (௫) நாள், வவ்வினனை, வாழ்த்து, உயப்போம், நெறி, (௧௦) இதுவே கண்டாய், நெஞ்சமே, அயர்ப்பாய், அயராப்பாய், சொன்னேன். (௧௫)

அர். — ஓ மநஸ்ஸே! செய்யத் தக்கதல்லாதவற்றைச், செய்கிறாய்; (நான்) பயப்படுகிறேன். மல்லருடைய, (௫) ஆயுஸ்ஸை, க்ரஸித்தவனை, மங்களாசாஸநம் பண்ணு. உஜ்ஜீவிக்கலாம், வழி, (௧௦) இதுவேகிடாய். மநஸ்ஸே! (அவனை) மறக்கில் மற, மறவாதிருக்கிலிரு. (உனக்கு நன்மையைச்) சொன்னேன். (௧௫) அரு.

வ்யா·—எண்பத்துமூன்றாம்பாட்டில், (அயர்ப்பாய யராப்பாய்) அவனைமறந்து அநர்த்தப்படிலும்படு; நினைத்து வாழிலும்வாழ். (நெஞ்சமேசொன்னேன்) ஒருத்தன் கிணற்றிலே விழாநின்றால் கரையிலேநின்று அவனுக்குக் கூப்பிடவேணுமிறே. அவ்வோபாதி சொன்னேன். (உயப்போம் நெறியிதுவேகண்டாய்) அல்லாததெல்லாம் விநாசத்துக்குக்கண்ட வழி, உஜ்ஜீவிக்கக் கண்டவழியிதுவே. (செயற்பாலவல்லவே செய்கிறுதி) நான்தப்பச் செய்கிறதுண்டோவென்னில், செய்யப்படாதவை செய்யாநின்றாய். செய்யப்படாதவையாவது - அயோக்யனென்றகலுகை; தேவதாந்தர பஜநங்கள். (நெஞ்சமேயஞ்சினேன்) (௧)''புகழ்வோம் பழிப்போம்'' என்கிற வித்தையஞ்சினேன். (மல்லரித்யாதி) நம்முடைய விரோதிகள் செய்வ

(௧) பெரிய திருவந்தாதி. ௨.

தென்னென்னில், மல்லரிற்காட்டில் மிடுக்குண்டோ? அவற்றுக்கு மல்லருடைய ஆயுஸ்ஸை க்ரஸித்தவனே வாழ்த்து. அரு.

அரு.—எண்பத்துமூன்றும்பாட்டு.— "அஞ்சினேன்," புகழ்வோமோ பழித்தோமாவுதோமென்று அயோக்யதாநுஸந்தாநம் பண்ணின வித்தை அஞ்சினேனென்கையாலே, அயோக்யதாநுஸந்தாநம்பண்ணி அகலவேண்டா; பயப்படாமல் வாழ்த்தென்றபடி. அ௩.

வாழ்த்தி யவனடியைப் பூப்புனைந்து, நின்தலையைத்
தாழ்த்திருகை கூப்பென்றால் கூப்பாத—பாழ்த்தவிதி,
எங்குற்றாய் என்றவனை யேத்தாதென் னெஞ்சமே,
தங்கத்தா னாமேலும் தங்கு. அச.

அந்.—அவன், அடியை, வாழ்த்தி, பூ, புனைந்து, (ரு) நின் தலையை, தாழ்த்து, இருகை,கூப்பு என்றால், (கo) கூப்பாத, என் நெஞ்சமே, அவனே, எங்குற்றாய் என்று, ஏத்தாது, (கரு) தங்கத்தானாமேலும், தங்கு, பாழ்த்த விதி. (கஅ)

அர்.—அந்த ஸர்வேஸ்வரனுடைய, திருவடிகளை, மங்களாசாஸநம் பண்ணி, புஷ்பங்களை, ஸமர்ப்பித்து, (ரு) உன்னுடைய, சிரஸ்ஸை, வணக்கு, இரண்டு கைகளையும், கூப்பு என்றால்,(கo)கூப்பாத, என்னுடைய மநஸ்ஸே! அந்த ஸர்வேஸ்வரனை, (நீ) எங்கேநிற்கிறாய் என்று (ஆதரமாக அழைத்து), ஸ்தோத்ரம் பண்ணாமல், (கரு) தரிக்கக்கூடுமாகில், தரித்திரு. கொடிய பாபமே! (என்று வெறுக்கிறார்.) (கஅ) அச.

வ்யா.—எண்பத்துநாலாம்பாட்டில், (வாழ்த்தியித்யாதி - எங்குற்றாயென்றவனை எத்தாதென்நெஞ்சமே தங்கத்தானாமேலும்தங்கு பாழ்த்தவிதி) பகவத்விஷயத்தி லொன்றுஞ்செய்யாத நெஞ்சே! அவனை வாழ்த்தி அவன் திருவடிகளிலே பூக்களைப்புனைந்து உன் தலையை யவன் திருவடிகளிலே தாழ்த்து, இரண்டு திருக்கையையுங் கூப்பென்றால் கூப்பாதே, (க) "எங்குச் சென்றாகிலும்கண்டு" என்னும்படி ஆதரத்தோடே அவனை எத்தாத நெஞ்சமே! அவனைப்பற்றாதே கால்பாவலாமாகில் தங்கு. பாழ்த்தவிதியென்று - தம்முடைய அகலுகையைச் சொல்லி வெறுக்கவுமாம். ப்ராப்திப்ரதிபந்தகமான கர்மவைகல்யத்தைச் சொல்லவுமாம். அச.

அரு.—எண்பத்துநாலாம்பாட்டு.—[நெஞ்சமே அவனடியிலே பூப்புனைந்து வாழ்த்தி நின்தலையைத் தாழ்த்து இருகைகூப்பென்றால் கூப்பாதே எங்குற்றாயென்றவனை யேத்தாதே தங்கத்தானாமேலும் தங்கு]என்றந்வயம்.

(க) திருவாய்மொழி - கூ - அ - ரு.

தங்கா முயற்றியவாய்த் தாழ்விசும்பின் மீதுபாய்ந்து,
எங்கேபுக் கெத்தவம்செய் திட்டனகொல்,—பொங்கோதத்
தண்ணம்பால் வேலைவாய்க் கண்வளரும், என்னுடைய
கண்ணன்பால் நன்னிறங்கொள் கார். அரு.

அந்.—பொங்கு, ஓதம், தண் அம், பால் வேலைவாய், கண்வளரும், (ரு) என்னுடைய, கண்ணன்பால், நல், நிறம், கொள், (௧௦) கார், தங்கா, முயற்றியவாய், தாழ், விசும்பின்மீது, (௧௫) பாய்ந்து, எங்கேபுக்கு, எத்தவம், செய்திட்டனகொல். (௧௬)

அர்.—கிளர்ந்த, அலைகளையுடைய, குளிர்ந்து அழகியதான, திருப்பாற்கடலில், கண்வளர்ந்தருளுகிறவனாய், (ரு) என்னுடைய ஸ்வாமியான, கண்ணனுடைய பக்கலுண்டான, அழகிய, நிறத்தை, ஸ்வீகரித்த, (௧௦) மேகங்கள், (இந்நிறத்தைப் பெறுகைக்கு) விடாத, உத்யோகத்தையுடையனவாய்க் கொண்டு, பரந்த, ஆகாசத்தின்மேல், (௧௫) உலாவி, எங்கேபோய், எவ்விதமான தபஸ்ஸை, அநுஷ்ட்டித்தனவோ? (௧௬) அரு.

வ்யா.—அவ.—எண்பத்தைந்தாம்பாட்டில், (தங்காமுயற்றியவாய்) பகவத்விஷயத்திலே எடுப்புஞ்சாய்ப்புமாய் † இன்னாதாகா, ‡லோகயாத்ரையை யநுஸந்தித்து அங்கு மதுவேயாயிருக்கிறபடியைச் சொல்லுகிறது.

(தங்காமுயற்றியவாய்) உத்யோகித்த உத்யோகம்மாறாதே ஆகாசாவகாசமெல்லா முலாவி எங்கே புக்கு என்ன தபஸ்ஸு பண்ணிற்றினவோ? (பொங்கித்யாதி) கிளர்ந்ததிரையையுடைத்தாய்க் குளிர்ந்திருந்த திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற என் கண்ணனுடைய விலக்ஷண நிறத்தைக்கொள்ளுகிற மேகங்கள் எவ்விடத்தே புக்கு என்ன தபஸ்ஸுபண்ணிற்றினவோ? அரு.

அரு.—எண்பத்தைந்தாம்பாட்டு.—(இன்னாதாகா) இன்னாதாகா நிற்கச் செய்தே. (லோகயாத்ரை) மேகத்திலேகண்வைக்கை. "தாழ்விசும்பு"-எங்கும் மொக்க ஒத்து ஏகரூபமாயிருக்கை. அரு.

கார்கலந்த மேனியான் கைகலந்த வாழியான்,
பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான்,—சீர்கலந்த
சொல்நினைந்து போக்காரேல் சூழ்வினையி னாழ்துயரை,
என்நினைந்து போக்குவ ரிப்போது. அசு.

அந்.—கார்கலந்த, மேனியான், கைகலந்த, ஆழியான், பார்கலந்த, (ரு) வல், வயிற்றான், பாம்பணையான், சீர்கலந்த, சொல், (௧௦) நினைந்து, சூழ்,

வினையின், ஆழ், துயரை, (கரு) போக்காரேல், இப்போது, என் நினைந்து, போக்குவர். (கக)

அர்.—மேகத்தோடு சேர்ந்த (ஸத்ருசமான), திருமேனியையுடையனாய், திருக்கையிலே பொருந்தின, திருவாழியையுடையனாய், (ப்ரளயத்தில்) பூமிபொருந்தி வர்த்திக்கிற, (ரு) வலிய, திரு உதரத்தையுடையனாய், திருவநந்தாழ்வானைப் படுக்கையாக உடையனான பரம புருஷனுடைய, கல்யாண குணங்களோடே சேர்ந்திருக்கிற, திருநாமங்களை, (கo) அநுஸந்தித்து, சுற்றிக்கொண்டிருக்கிற, பாபத்தினாலுண்டான, அகாதமான, துஃகத்தைப் (கரு) போக்கிக்கொள்ளார்களேயாகில், இந்தக்காலத்தை (வேறு) எதை அநுஸந்தித்துப், போக்கிக்கொள்ளுவர்கள். (கக) அசு.

வ்யா.—எண்பத்தாறும்பாட்டில், (கார்கலந்தமேனியான்) ஸர்வதா ஸத்ருசமான மேகத்தோடொத்த திருமேனியையுடையவன். (கைகலந்தவாழியான்) திருக்கையிலே வேர்விழுந்த திருவாழியையுடையவன். (பார்கலந்த வல்வயிற்றான்) ப்ரளயந்தேடிவந்தாலும் தோற்றாதபடி கலந்தபூமியையுடையவனுமாய், வயிற்றில் புக்கவற்றுக்கு ரக்ஷகமான வயிற்றையுடையவன். (பாம்பணையான்). (சீர்கலந்தவித்யாதி) வடிவழகுக்கும் குணங்களுக்கும் வாசகமாய்ப் பசுங்கூட்டான சொற்களை நினைத்து அநுபவவிநாஶ்யமான பாபபலமான துஃகத்தைப்போக்காராகில். (என்னினைந்து போக்குவரிப்போது) பாபம்போக்கவேண்டாவாகில் காலத்தைச் செல்லவிடும்படி யெங்ஙனே. அசு.

அரு.—எண்பத்தாறும்பாட்டு.— "இப்போது" இப்போதை-இக்காலத்தை என்றபடி. அசு.

இப்போது மின்னு மினிச் சிறிது நின்றாலும்,
எப்போது மீதேசொல் லென்னெஞ்சே,—எப்போதும்
கைகழலா நேமியான் நம்மேல் வினைகடிவான்,
மொய்கழலே யேத்த முயல். அஎ.

பெரிய திருவந்தாதி.

முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

அந்.—என் நெஞ்சே, நம்மேல், வினை, கடிவான், எப்போதும், (ரு) கைகழலா, நேமியான், மொய், கழலே, ஏத்த, (கo) முயல், இப்போதும், இனி, இன்னும் சிறிது நின்றாலும், எப்போதும், (கரு) ஈதேசொல். (கசு)

அர்.—எனக்கு விதேயமான ஓ! மநஸ்ஸே! நம் பக்கலுண்டான, பாபத்தைப், போக்குகைக்காக, ஸர்வகாலத்திலும், (௫) திருக்கைவிட்டு நீங்காத, திருவாழியையுடைய ஶ்ரியஃபதியினுடைய, அழகிய, திருவடிகளையே, ஸ்தோத்ரம்பண்ண, (௧0) உத்யோகித்திரு. இக்காலத்திலும், இதுக்குமேல், இன்னும் சிறிதுகாலம் கழித்தாகிலும்,எக்காலத்திலும், (௧௫) இத்திருநாமங்களையே வாய்விட்டுச்சொல்லு. (௧௬) அஎ.

வ்யா.—அவ.—எண்பத்தேழாம் பாட்டில், (இப்போதும்) "லோகத்தாரைக்கொண்டு கார்யமில்லையிறே, நீ முன்ன மெப்போதுமித்தையே சொல்" என்று நெஞ்சுக்குபதேசிக்கிறார்.

(இப்போது மித்யாதி) இக்காலத்திலும் வருங்காலத்திலும் மற்றுமெல்லாக்காலத்திலும் இதுதன்னையே சொல்லு. (நல்நெஞ்சே) நான்புக்கவிடத்தே புகக்கடவநெஞ்சே! (எப்போது மித்யாதி)எல்லாக்காலத்திலும் கையைவிட்டகலாத திருவாழியையுடையவன் நம்பக்கல் பாபத்தைப்போக்குவான். (மொய்கழலே யேத்தமுயல்) போக்யமான திருவடிகளை எத்த உத்ஸாஹி. பற்றினாரைவிட்டுக்கொடாத திருவடிகளை என்றுமாம். (ஈதேசொல்லு).

பெரிய வாச்சான்பிள்ளை யருளிச்செய்த

பெரிய திருவந்தாதி வ்யாக்யாநம்

முற்றிற்று.

பெரிய வாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அரு.—எண்பத்தேழாம்பாட்டு.—"மொய்கழல்" அழ்காதல்,மிடுக்காதல்.

பெரிய திருவந்தாதி வ்யாக்யாந அரும்பதம்

முற்றிற்று.

அப்பிள்ளை திருவடிகளே சரணம்.